

கல்கி
KALKI 18-7-1976 ■ 75 காசு



பிஸ்கட் என்றால் இதுதான்—சுவைக்கும்

வைட்டமின்களுக்கும்
போஷாக்குக்கும் இதுதான்:

பிரிட்டானியா

க்ளுக்கோஸ்-D



பிரிட்டானியா க்ளுக்கோஸ்-Dயுடன் மற்றொரு முன்னணி ரக க்ளுக்கோஸ் பிஸ்கட்டை ஒப்பிட்டுப் பார்த்த பரிசோதனைகளில் தெள்ளத் தெளிவாக நிரூபிக்கப்பட்டுவிட்டது! வைட்டமின் சத்திலும், மொத்த போஷாக்குத் தன்மையிலும் உயர்ந்தது க்ளுக்கோஸ்-D பிஸ்கட் தான். இனிமைக்கும், சுவைக்கும், முறுமுறுப்புக்கும், அதிகமாக விரும்பப்படுகிறது. சக்தி வேண்டுமா— க்ளுக்கோஸையும் விட 20 சத விகிதம் அதிக சக்தியைத் தருகிறது க்ளுக்கோஸ்-D. பிரிட்டானியா க்ளுக்கோஸ்-D பிஸ்கட்— தித்திக்கும் சக்தி!



எனவேதான், வேறெந்த க்ளுக்கோஸ் பிஸ்கட்டையும் விட அதிக மக்களைக் கவர்ந்துள்ளது பிரிட்டானியா க்ளுக்கோஸ்-D

பிரிட்டானியா பிரிட்டானியா பிஸ்கட்டுகள் மிகச் சிறந்தவை

லின்டாஸ்-BBC-GL-10-140 TH


அதிகாலையில்
ஸ்டேன்ஸ் காபி!
நாள் முழுவதும்
புத்துணர்ச்சி!!
ஒவ்வொரு கோப்பையிலும்
அதிக புத்துணர்ச்சி!
Stanes
தி யுனைடெட் காபி சப்ளை கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்

MAC(B) 1/75



புரூஸ் லீ பற்றி

கராத்தே மணி





‘எண்டர் தி டிராகன்’ படத்தில் மயிர்க்கூச்செறியும் வண்ணம் அற்புதமாக ‘கராத்தே’ கலையில் தமக்குள்ள திறமையை வெளிப் படுத்தியுள்ள புரூஸ் லீ பற்றி திரு மணியிடம் கேட்டேன். திரு ஆர். வி. டி. மணி ஜப்பான் சென்று ‘கராத்தே’யில் சிறப்புப் பயிற்சி பெற்றுத் தற்போது இந்தியாவின் முடிசூடா ‘கராத்தே’ மன்னராக விளங்குபவர்.

‘‘எங்களைப் போன்று ‘கராத்தே’ பயின்றவர்களையே பிரமிக்கச் செய்யும் மகத்தான படம் அது. திரு லீ ஒரு தலைசிறந்த ‘கராத்தே’ நிபுணர். கராத்தே கலையில் அற்புதத் திறமை கொண்டுள்ள அவருக்கு ஒரு ‘கராத்தே நிபுணர்’ பாத்திரமே படத்தில் தரப்பட்டிருப்பதால் பிரமாதமாய்ச் சோபிக்கிறார்’’ என்றார் மணி.

‘‘சென்ற ஆண்டு திரு லீ இறந்து விட்டதாக அறிந்தேன். அவரது மரணத்தைப் பற்றிப் பலவிதமாகக் கூறப்படுகிறதே!’’

‘‘மிகுந்த செல்வச் செழிப்புடன் வாழ்ந்த லீ சென்ற ஆண்டு விஷம் கொடுத்துக் கொல்லப் பட்டார் என்ற வதந்தி மேல் நாடுகளில் பரவியுள்ளது. சிலர் வேறு விதங்களில் பேசுகின்றனர். ஆனால் உண்மை இன்னும் நிரூபிக்கப்படவில்லை.’’

‘‘திரு லீ இறந்தபோது அவர்தான் உலகின் தலைசிறந்த ‘கராத்தே’ நிபுணராக விளங்கினாரா?’’

‘‘அப்படிச் சொல்ல முடியாது. அவரளவுக்குத் திறமை வாய்ந்தவர்கள் வேறு சிலரும் இருந்தனர். அப்போது உலகில் தலைசிறந்து விளங்கிய பத்து நிபுணர்களில் அவரும் ஒருவராகக் கருதப்பட்டார். ஆனால் சினிமாவில் நடிக்க வந்த ‘கராத்தே’ நிபுணர்களில் அவர் தான் தலைசிறந்தவர்.’’

‘‘அவர் போடும் சண்டை முறை குன்ஃபூ (*Kung Fu*) எனப்படுகிறதே அதற்கும், கராத்தேக்கும் என்ன வித்தியாசம்?’’

‘‘இதற்கு மிகச் சரியாக விடை கூறுவது கடினம். சீனாவில் பயிலப்படும் சண்டை குன்ஃபூ எனப்படுகிறது. ‘கராத்தே’ ஜப்பான் முறையை அடிப்படையாகக் கொண்டது. உள்ளத்தையும் உடலையும் உறுதிப்படுத்தி எவ்வித ஆயுதத்தின் உதவியுமின்றி எதிரிகளிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ளும் கலைதான் இரண்டுமே!’’

‘‘எண்டர் தி டிராகனில் சில இடங்களில் ஆயுதம் பயன்படுத்தப் படுகிறதே!’’

‘‘திரு லீ, குன்ஃபூ மட்டுமின்றி வேறு பல ஆயுதச் சண்டைக் கலைகளிலும் தேர்ச்சி பெற்றவராதலால் அம்மாதிரி படம் எடுக்கப்பட்டுள்ளது. லீ, கராத்தேயில் சம்பிரதாயங்களை உடைத்துப் புது முறைகளைப் புகுத்தியவர். குத்துச் சண்டை வீரரான திரு முகமது அலியின் சில நுணுக்கமான குத்துச் சண்டை முறைகளைத் தாமாகவே கற்று அவற்றைக் கராத்தேயில் பயன்படுத்தினார்.’’

‘‘திரு லீ வேறு படங்களில் நடித்திருக்கிறாரா?’’

‘‘எண்டர் தி டிராகன்’’ தான் அவர் நடித்த படங்களில் மிகவும் சாதாரணமானது. அவர் டெலிவிஷன் படங்களில் தொடர்ந்து நடித்து வந்தார். ஹாங்காங்கில் அவர் நடித்துப் படங்கள் தயாரிக்கப்பட்டன. *The Big Boss, The Fists of Fury, The Chinese Connection* போன்று அவர் நடித்த படங்கள் ஹாங்காங், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களில் பிரமிக்கத் தக்க வெற்றியைத் தேடித்தந்தவை.

‘‘அவர் இறந்த போது, அதனைத் தாங்க முடியாமல் ஹாங்காங்கில் பல பேர் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்குப் பாதிக்

கப்பட்டு விட்டார்களாம்! 'Game of death' என்ற அவர் நடித்துக் கொண்டிருந்த படம் அவர் இறந்ததனால் பாதியிலேயே நின்று விட்டதாம்!''

'''என்டர் தி டிராகன்' சென்னையில் திரையிடப்பட்ட பின்னர் தங்களுக்கு ஏதேனும் புதிய அனுபவம் உண்டா?''

''அதை ஏன் கேட்கிறீர்கள்! நிறைய இளைஞர்கள் படத்தைப் பார்த்து விட்டு நேராக என்னைத் தேடிக் கொண்டு வந்து 'எனக்குக் கராத்தே கற்றுக் கொடுங்கள்,' என்கின்றனர். 'கராத்தே என்பது செங்கல்லை உடைப்பதும், மரத்தைப் பிளப்பதும் மட்டுமல்ல. அதில் பல ஒழுங்கு முறைகளும் கடுமையான உழைப்பும், மன உறுதியும் அவசியம்' என்று விளக்கிக் கூறி அதன் பின்னும் அவர்கள் திடத்துடன் இருந்தால் எங்கள் கராத்தே பயிற்சிப் பள்ளியில் சேர்த்துக் கொள்கிறோம்'' என்றார் மணி.

பேட்டி: **பி. ரங்கநாயகி**

செவ்வாயில் சோதனைகள்!


செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் இருக்கக் கூடும் என்று நீண்ட நாட்களாகவே விஞ்ஞானிகள் நம்பி வந்துள்ளனர். ஆறறிவு படைத்த மனிதர்களைப் போல் இல்லாவிடினும் குறைந்தபட்சம் சில தாவர வர்க்கங்கள், 'அமீபா'க்களைப் போன்ற சில அடித்தள ஜீவராசிகள் வாழக்கூடும். ஏனெனில், உயிர் தோன்றுவதற்குரிய சாதகச் சூழல் ஓரளவு அந்தக் கிரகத்தில் நிலவுகிறது.

செவ்வாயில் உயிரினம் இருக்கிறதா இல்லையா ? — இதற்கு விடை காண்பதற்குரிய நாள் நெருங்கி வருகிறது. அமெரிக்காவின் வைக்கிங் விண்கலம் செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றி வருகிறது. அதிலிருந்து ஓர் 'இறங்கும் வாகனம்' பிரிந்து வந்து செவ்வாய்க் கிரகத்தில் தரை தட்டி நிற்கப் போகிறது. (படம்) ஜூலை 20ந் தேதி இந்தச் சாதனை நிகழும் என எதிர்பார்க்கிறார்கள். இந்த இறங்கும் வாகனத்தின் சோதனைச் சாலைகள் தானியங்கு முறையில் பல பரிசோதனைகளைச் செய்து சமிக்ஞைகளாகச் செய்தி அனுப்பும். இந்த ரேடியோ சமிக்ஞை ஒவ்வொன்றும் பூமிக்கு வந்து சேர ஆகும் நேரம் இருபது நிமிஷங்கள். ஆக, இறங்கும் வாகனம் வெற்றிகரமாகத் தரை தட்டிய இருபதாவது நிமிஷத்தில் நமக்கு அந்தச் செய்தி கிடைக்கும். தொடர்ந்து பல தகவல்கள் பௌதிக ரீதியில், ரசாயன ரீதியில், பூமி சாஸ்திர ரீதியில் நமது விஞ்ஞானிகளுக்குக் கிடைக்கும்.

தானியங்கு முறையில் செவ்வாய்க் கிரக மண்ணை அள்ளவும் அதனைப் பல சோதனைகள் நிகழ்த்தி அலசவும் இந்த இறங்கும் வாகனத்தில் அமைப்புக்கள் உள்ளன. டி. வி. காமிராக்கள் புகைப்படங்களையும் வண்ணப் படங்களையும் எடுத்துப் பூமிக்கு அவற்றை அஞ்சல் செய்யும்.

செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் இருப்பதாக முடிவாகிறதோ இல்லையோ வைக்கிங் முயற்சி வீணாகாது என்கின்றனர் விஞ்ஞானிகள். பூமி எப்படி உருவாயிற்று, அதன் எதிர்காலம் என்ன, அதற்கு நாம் செய்யும் நன்மை தீமைகளால் பூமியும் சூழலும் எப்படி பாதிக்கப்படுகின்றன? — இவற்றுக்கெல்லாம் பதில்களை அறியவும் விண்வெளிக் கலங்களை அனுப்பிப் பிற கிரகங்களை ஆராய்வது பயன் அளிக்கும்.

இவ்வளவு சொன்னபிறகும்சந்தேகத்துடன் தலையாட்டுவோருக்கு அமெரிக்க அரசு தரும் பதில்: ''கோடிக்கணக்கான டாலர்களை நாங்கள் செவ்வாய்க் கிரகத்தில் கொண்டு போய்க் கொட்டிவிடவில்லையே, செவ்வாய்க் கிரகத்தை அடையும் விஞ்ஞான ஆற்றலைப் பெற அத்தனை பணத்தையும் அமெரிக்காவிலேயே தானே செலவழித்திருக்கிறோம்? வைக்கிங் திட்டத்தில் நேரடியாகப் பத்தாயிரம் பேர் எட்டு ஆண்டுகள் உழைத்திருக்கிறார்கள். இதுவும் வேறு விண்வெளித் திட்டங்களும் பெருக்கிய வேலை வாய்ப்புக்கள், பொருளாதார செழிப்பு, விஞ்ஞான வளர்ச்சி இவற்றால் உயர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரம் முதலியவற்றைக் கணக்குப் பார்த்து விட்டுப் பேசுங்கள்!''







கல்கி

நள௵
ஆடி 3
ஜூலை 18, 1976

"கல்கி"யில் வெளி வாரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

போடு புதிர்!

ஓர் ஆற்றின் இருபக்கமும் சில பறவைகள் இருந்தன.

கிழக்குக் கரையிலிருந்து ஒரு பட்சி மேற்குக் கரைக்கு வந்து விட்டால் இரு தரப்பிலும் சம அளவில் பட்சிகள் இருக்கும்.

மேற்குக் கரையிலிருந்து ஒரு பட்சி கிழக்குக் கரைக்குப் போய் விட்டால் மேற்குக் கரையைவிட கிழக்குக் கரையில் இருமடங்கு பட்சிகள் இருக்கும்.

மேற்குக் கரையில் எத்தனை பட்சிகள் இருக்கின்றன? கிழக்குக் கரையில் எவ்வளவு?

யோசித்துப் பார்த்துப் புரியவில்லையானால் இதனைத் தலை கீழாகத் திருப்பிக் கீழே படியுங்கள்.

விடை: மேற்குக் கரையில் ஐந்து; கிழக்குக் கரையில் ஏழு.

(வாசகர்களிடமிருந்து சுவையான புதிர்களை வரவேற்கிறோம்.)


கொழும்பில் கூடும்
மண்டல சார்பற்ற
நாடுகளின் மகாநாட்டில்
பாரதத்தின்
தனிச் சிறப்பு
உணரப்படும்!
மண்டல சார்பற்ற
நாடுகள்- மகாநாடு
கொழும்பு
பாரதம்
காந்தியம்
தமிழ்நாடு
பேரரசையே சந்திப்பவன் நான்!..
இந்த சிற்றரசு எந்த மூலை?... மதியழகரே!
நான் சாமான்யன் அல்லன்...
நான் மதியழகன்!

கண்ணிமைக்கும் நேரத்தில் கருணைப் பணி

உலகப் புகழ்பெற்ற நாவலாசிரியர்களே, உங்கள் தோல்வியை ஒப்புக் கொள்ளுங்கள்!

அலிஸ்டேர் மக்லீன், ஃபிரடரிக் ஃபார்ஸைத் போன்றவர்கள் தங்கள் டைப்ரைட்டர்களை மூடி மூலையில் வைத்து விடலாம்!

நெவில் ஷூட், டென்னிஸ் வீட்லே போன்றவர்கள் எவ்வளவுதான் வீர தீர சாகசக் கதைகளை இந்த நவீன காலத்துக்கு ஏற்ப எழுதியிருந்தாலும் சரி, அவையெல்லாம் சமீபத்தில் இஸ்ரேலியர் நிகழ்த்திய அற்புத மீட்புப் பணிக்கு உறை போடக் காணாது!

யாரும் அறியாமல் செயல்பட்டு இஸ்ரேலிய ஆபத்துதவிகள் யுகாந்தா நாட்டின் என்டப்பி விமான நிலையத்தில் திடுமென இறங்கினார்கள். அங்கே ஸ்கைஜாக் அரக்கர்களால் சிறை வைக்கப்பட்டிருந்த நூற்றுக்கு மேற்பட்ட ஒரு பாவமும் அறியாத விமானப் பயணிகளை மின்னல் வேகத்தில் மீட்டார்கள். தங்கள் விமானத்தில் அவர்களை ஏற்றிக் கொண்டு டெல் அவிவ்வுக்குப் பறந்தார்கள். உலகம் கண்ணிமைத்த நேரத்தில் கருணைப் பணி முடிந்து விட்டது. இமை திறந்த உலகம் அதிசயத்தில் ஆழ்ந்தது!

இந்த மீட்புப் பணியில் ஏற்பட்ட சேதம் மிகவும் குறைவு. அடைந்த வெற்றியோ மலையினும் மாணப் பெரிது! அந்த வெற்றி இஸ்ரேலிய ஆபத்து உதவிகள் அடைந்த வெற்றிமட்டுமல்ல.

சுத்த வீரத்தின் வெற்றி; நேர்மைத் திறனின் வெற்றி; நெஞ்சுரத்தின் வெற்றி!

ப்ளாக் மெயில் போன்ற அதர்மங்களுக்கும் ஸ்கைஜாக் போன்ற அக்கிரமங்களுக்கும் அடிபணியமாட்டோம் என்று நிரூபித்துக் காட்டுகிற திராணி இருந்ததே அதை, சர்வ தேசத்திலும் பண்பாடுள்ள ஒவ்வொரு மனிதனும் வாழ்த்துவான்.

"ஆக்கிரமிப்பு" என்று அலறுகிறார் உகாந்தா ஜனாதிபதி அமின். "பதிலடி கொடுக்கத் தமக்கு உரிமை உண்டு" என்று கர்ஜிக்கிறார்.

மீட்புப் பணி எப்படி ஆக்கிரமிப்பாகும்? புரியவில்லை. அந்த முயற்சியில் உகாந்தாவுக்குச் சிறிதளவு சேதம் விளைவிக்க நேர்ந்தது தவிர்க்க முடியாத தற்காப்பு நோக்கில். எனவே, விளைந்த சேதத்துக்கு நஷ்டஈடு கேட்டதுடன் அமின் நிறுத்திக் கொண்டிருந்தால் உலகத்தின் அனுதாபம் அவருக்குக் கிடைத்திருக்கும். அதற்குமேல் போய் அவர் வார்த்தைகளைக் கக்கும்போது அதற்கு வேறு உள் அர்த்தம் நமக்குத் தெரிய வருகிறது. அமின், என்டப்பி விமான நிலையத்தில் ஸ்கைஜாக் ஆன விமானத்தை இறங்க அனுமதித்ததில் மனிதாபிமான நோக்கு மட்டுமல்ல, ஸ்கைஜாக்கர்களுக்கு உதவும் நோக்கமும் உண்டு என்ற கருத்துக்குப் பலம் அளித்ததாகிறது.

மீட்புப் பணியை வாழ்த்திவிட்டால் ஆயிற்று? இத்துடன் கதை முடிந்து போயிற்று? வேறு பாலஸ்தீன அனுதாபிகள் மீண்டும் ஒரு விமானத்தை ஸ்கைஜாக் செய்யும் முயற்சியில் இறங்க மாட்டார்களா? சிறைப்பட்டிருக்கும் தங்கள் தோழர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று மறுபடியும் நிபந்தனை பிறக்காதா? இத்தகைய கேள்விகள் எழுவது இயல்பே.

பழிக்குப்பழி என்று அவர்கள் நிச்சயம் ஆரம்பிப்பார்கள். அரசியல் காரணங்களுக்காக ஸ்கைஜாக் போன்ற அசுர முயற்சிகளை அனுமதித்தும் அவற்றில் ஈடுபடும் அரக்கர்களை ஊக்கி ஆதரவு அளித்தும் வரும் அநாகரிக அரசாங்கங்கள் உலகில் இருக்கும் வரை அவர்களின் பழி வாங்கும் படலம் தொடரவே செய்யும்.

ஆனால் இதற்காக அஞ்சி வாளாவிருந்தால் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வந்திருக்கிற மனித நாகரிகத்துக்கு அர்த்தமில்லாமலே போய்விடும்.

இஸ்ரேலிய ஆபத்துதவிகளின் வெற்றியை வாழ்த்துகிறோம். அதே நேரத்தில் அவசரப்பட்டு எந்த ஓர் அறிக்கையையும் வெளியிடாமலிருந்த பாரத அரசையும் பாராட்டுகிறோம்.

கல்கி

மலர் 35
இதழ் 51

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

கோர சம்பவம்

கொடிய விஷம் கலந்த சாராயம் அருந்திச் சென்னையில் நூற்றிப் பன்னிரண்டு பேர் மாண்டார்கள். நூற்றி எழுபத்தோரு பேர் மருத்துவ மனைகளில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.

இந்தச் செய்தியைப் படித்த உடனேயே பலருக்கு, 'மதுவிலக்கினால்தானே இந்தக் கோர சம்பவம் நிகழ்ந்தது? மதுவிலக்கை ஏன் ரத்து செய்யக் கூடாது?' என்று தோன்றும். ஆனால் அது அல்ல பரிகாரம். மதுவிலக்கு இருக்கும்போது எப்போதோ ஒரு முறை இப்படிப் பலர் அறியாமையால் விஷம் கலந்த சாராயம் அருந்தித் திடுமென மடிகிறார்கள். ஆனால் மதுவிலக்கு இல்லையென்றால் நாள்தோறும் லட்சக்கணக்கான மக்கள் சாராயம் குடித்துச் சிறிது சிறிதாகச் சாவை வரவழைத்துக் கொள்வார்கள். வறுமையையும் தருவித்துக் கொள்வார்கள்.

மதுவிலக்கைத் தீவிரமாக அமல்படுத்துவதே உபாயம். வார்னிஷ் லைசென்ஸ் வழங்குவதிலும், போலீஸ் கண்காணிப்பிலும் அசிரத்தை, லஞ்ச ஊழல் போன்றவற்றை அடியோடு களைவதே முதல் பணி. ஆளுநர் சுகாதியா அவர்களே லஞ்ச ஊழல் விளையாடியிருப்பதை மறுப்பதற்கில்லை என்று கூறிவிட்டார். இல்லாத போனால் இவ்வளவு பெரிய விபரீதம் நிகழக் காரணமில்லை. இவ்விஷயத்தில் இனியேனும் அதிகாரிகள் சுறுசுறுப்படைவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

மதுவிலக்கு இல்லாதபோது ராஜாஜியின் தலைமையில் திருச்செங்கோடு காந்தி ஆசிரம ஊழியர்கள் நடத்தியது போன்ற பிரசாரப் பணிக்கு, மதுவிலக்கு அமுலான பின்னரும் அவசியம் இருப்பதை இந்தத் துயர சம்பவம் உணர்த்துகிறது. இருபது அம்சத் திட்டத்தில் இடம் பெறாவிட்டாலும் பிரதமரின் மனத்துக்குகந்த பணிதான், படிப்படியாக நாடு தழுவிய நோக்கில் மதுவிலக்கை அமல்படுத்துவது. எனவே, காங்கிரஸ் தலைவர்களும் தொண்டர்களும் மதுவின் கொடுமைகளைப் பற்றிப் பிரசாரம் செய்ய வேண்டிய இடங்களுக்குப் போய் அரிய தொண்டாற்றினால் மக்களின் நன்றிக்குப் பாத்திரராவார்கள். இக்காரியத்தில் ஈடுபடும்போதே, தி.மு.க. அரசு இடையில் மதுவிலக்கைத் தாற்காலிகமாக ரத்து செய்ததால் எத்தனை பேர் புதிதாக மது அரக்கனுக்கு அடிமையானார்கள் என்று ஒரு மதிப்பீடும் செய்யலாம். கிடைக்கும் புள்ளி விவரங்கள் புது விழிப்பை ஏற்படுத்துவதாய் இருக்கும்.

அநாகரிக அரசியல்


தி.மு.க. செயற்குழுக் கூட்டம் பலவிதங்களில் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது. கட்சி அரசியலில் நாம் புக வேண்டியதில்லை என்றாலும் அநாகரிக அரசியலை கண்டித்தே ஆக வேண்டும். திரு எஸ். எஸ். ஆர். மீது விழுந்த ஒவ்வோர் அடியும் பல மடங்காகத் திரும்பவும் தி.மு.க. தலைமையின் யதேச்சாதிகாரப் போக்கின் மீதே விழும் தினம் வெகுதூரத்தில் இல்லை. சொந்த விருப்பு வெறுப்புக்களும் இந்த அடிதடி அரசியலில் புகுந்து கொண்டிருக்கலாம் என்பதை ஒப்புக் கொள்வோமாயினும், விசாரணை முடியும் வரை குற்றச்சாட்டுக்கு உள்ளான தலைவர்கள் பதவியிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்ற கோரிக்கை ஜனநாயகப் பண்புள்ளது, தர்ம நியாயமானது.

இந்தச் செயற்குழு கூட்டத்துக்கு மொத்தமுள்ள அறுபது பேர்களில் இருபத்தேழு பேர்களே வந்திருந்தார்கள். காரணம் என்னவாயினும், இன்றையத் தலைமையில் பெருவாரியான தி.மு.க. உறுப்பினர்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதும் தெளிவு.

ராஜாஜி சிந்தனை

இறங்கி வந்து இனியவை செய்யுங்கள்

சீர்திருத்தம் செய்வதானால் மனித அறிவுக்கு ஒத்ததாக இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று கெட்டவர்களைத் தனியாகப் பிரித்து வைப்பது. அதுதான் சிறை செய்யும் முறை. மற்றது கெட்டவர்களுடன் சேர்ந்து இருத்துவது. அதுதான் கல்வி முறையில் அஸ்திவாரம். தனியாகப் பிரித்து வைக்கும் முறைதான் ஜாதி என்பது. அது இனிமேல் பயன்படாது. ஆதலால் கலந்து வாழ்தல் என்ற மற்றொரு முறையைக் கையாண்டு பார்க்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் சிலர் கூறுவார்கள், தீண்டாதவர்கள் மாமிசம் உண்பதால் அவர்களுடன் சேரக் கூடாது என்று. இதற்குப் பொருள் இடையாது. இவர்களிடம் நாம் தாராள மனம் உடையவர்களாக நடந்து கொண்டால்தான் இவர்களைத் திருத்த முடியும். ஒரு பையனுக்கு ஓடக் கற்றுக் கொடுக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது நாம் அவனுக்கு முன்னால் ஓடிவிடமாட்டோம். அவன் கூடவே ஓட முயன்று அவனுக்குக் கற்பிப்போம். அது போலத் தவறான வழக்கங்களை உடையவர்களைத் திருத்துவதற்கும் அவர்களை விட்டுவிட்டு முன்னால் போய்விடலாகாது. அப்படிப் போவது அன்பு முறையாகாது. தூரத்தில் நின்று கொண்டு பிறரை நம்மிடம் வரும்படி செய்யலாம் என்று எண்ணினால் அது அனுபவத்துக்கு ஒத்து வராது. — **''ஜாதிகள்'' என்ற கட்டுரையில்**


அமரர் கல்கி எழுதிய
பார்த்திபன் கனவு
கல்கி ஆகஸ்ட் 8, இதழில்
ஆரம்பம்

பாரத் ஓவர்ஸீஸ் பாங்கில் உங்கள் டிபாசிட்டுகளுக்கு அதிகப்படி வட்டி கிடைக்கிறது

¼% சதவிகிதம் கூடுதலான வட்டி 5 வருடங்கள் வரையிலுள்ள டெர்ம் டிபாஸிட்டுகளுக்கு

½% சதவிகிதம் கூடுதலான வட்டி சேமிப்பு கணக்குகளுக்கு

கீழ்கண்ட அட்டவணையை கவனமாகப் படியுங்கள்:

சேமிப்புக் கணக்குகள்	5½%	6 மாதங்கள் மற்றும் அதற்கு மேல், ஆனால் 9 மாதங்களுக்குக் குறைவான டிபாஸிட்டுகளுக்கு	6¼%
டெர்ம் டிபாஸிட்டுகள்		9 மாதங்கள் மற்றும் அதற்கு மேல், ஆனால் 1 வருடத்துக்கு குறைவான டிபாஸிட்டுகளுக்கு	7¼%
14 நாட்கள் வரை	வட்டி இல்லை	1 வருடம், மற்றும் அதற்கு மேல் ஆனால் 3 வருடத்துக்குக் குறைவான டிபாஸிட்டுகளுக்கு	8¼%
15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரையான டிபாஸிட்டுகளுக்கு	3¼%	3 வருடம் மற்றும் அதற்கு மேல் ஆனால் 5 வருடம் (உட்பட) வரையான காலத்துக்குரிய டிபாஸிட்டுகளுக்கு	9¼%
46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரையான டிபாஸிட்டுகளுக்கு	3¾%	5 வருடங்களுக்கு மேற்பட்ட டிபாஸிட்டுகளுக்கு	10%
91 நாட்கள் மற்றும் அதற்கு மேல், ஆனால் 6 மாதங்களுக்குக் குறைவான டிப்பாஸிட்டுகளுக்கு	5¾%		

ரெகெரிங் டிபாசிட்டுகளுக்கும் தக்கபடி அதிக வட்டி அளிக்கின்றன.

எங்கள் பாங்குக்கு விஜயம் செய்யுங்கள் —
எங்களது அன்பார்ந்த சேவை உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

பாரத் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: "ஆக்ஸ்ஃபோர்ட் ஹவுஸ்", மவுண்ட் ரோடு, சென்னை-600006

கிளைகள்:

சென்னை (4), பம்பாய் (2), புது டெல்லி (2), கல்கத்தா (2), பெங்களூர், ஹைதராபாத், அஹமதாபாத், ஜலந்தர், விசாகப்பட்டிணம், எர்ணாகுளம், மற்றும் பாங்காக் (தாய்லாந்து)



ஜீவகாருண்யம்

12

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சங்கராசாரிய சுவாமிகள்

கார்த்திகைப் பண்டிகையன்று நிறைய அகல் ஏற்றி வைக்கிறோமல்லவா? இப்படி தீபத்தை ஏற்றும் போது ஒரு ச்லோகம் சொல்ல வேண்டும் என்று தர்ம சாஸ்திரத்தில் விதித்திருக்கிறது:

> கீடா: பதங்கா: மசகாச்ச வ்ருக்ஷா:
> ஜலே ஸ்தலே யே நிவஸந்தி ஜீவா:।
> த்ருஷ்ட்வா ப்ரதீபம் ந ச ஜன்ம பாஜா:
> பவந்தி நித்யம் ச்வபசா ஹி விப்ரா:॥

'புழுக்களோ, பட்சிகளோ, அல்லது ஒரு கொசுவாகத்தான் இருக்கட்டும், அந்தக் கொசுவோ, நம் மாதிரி உயிரில்லை என்று நினைக்கப்படுகிற விருட்சமோ, இன்னும் பூமியிலும் ஜலத்திலும் எத்தனை தினுசான ஜீவராசிகள் இருக்கின்றனவோ அவற்றில் எதுவானாலும் அதுவோ, மநுஷ்யர்களுக்குள்ளேயே பேதம் இல்லாமல் பிராமணனோ பஞ்சமனோ எவனானாலும் சரி, எதுவானாலும் சரி, இந்தத் தீபத்தைப் பார்த்துவிட்டால் அந்த ஜீவனுடைய சகல பாபங்களும் நிவிருத்தியாகி, இன்னொரு ஜன்மா எடுக்காமல் நித்தியானந்தத்தில் சேரட்டும்' என்று இந்த ச்லோகத்துக்கு அர்த்தம்.

ஜலத்திலும் பூமியிலும் இருக்கிற பிராணி மட்டும்தானா என்றால் அப்படி இல்லை. முதலிலேயே பட்சிகளையும் (பதங்கா:) கொசுக்களையும் (மசகா: — மசகம் என்றால் கொசு. 'மஸ்கிடோ' இதிலிருந்து வந்ததுதான்!) சொல்லிவிட்டதால் ஆகாசத்தில் பறக்கிற பிராணிகளையும் சொல்லிவிட்டதாக அர்த்தம். ஆகாசத்தில் பறந்தாலும் அந்தக் கொசு ஜலத்தில்தான் முட்டை இடுகிறது. பட்சி கிளைகளில்தான் வந்து கூடு கட்டிக் குஞ்சு பொரிக்கிறது. மீன் ஜலத்தில் மட்டும் தான் இருக்கும். தவளை ஜலத்திலும் இருக்கும், பூமியிலும் இருக்கும். அநேக பிராணிகளால் பூமியில் மட்டும்தான் வசிக்க முடியும். இப்படியெல்லாம் பல தினுசில் பிரித்துப் பிரித்துச் சொல்லி, அத்தனை உயிரினங்களும் பாவம் நிவிருத்தியாகி ஸம்ஸாரத்தைத் தாண்ட வேண்டும் என்று இந்த ஸ்லோகம் பிரார்த்திக்கிறது.

இந்தக் கார்த்திகை தீபத்தை எந்தப் பிராணி **பார்த்தாலும்** அதற்கு நித்ய ச்ரேயஸ் உண்டாகட்டும் என்று சொல்லியிருக்கிறது. ''த்ருஷ்ட்வா'' என்று ச்லோகத்தில் வருவதற்கு ''பார்த்தால்'' என்று அர்த்தம். விருட்சம், மரம் எப்படிப் பார்க்க முடியும்? நம் மாதிரி அதற்குக் கண், பார்வையெல்லாம் உண்டா? தாவரத்துக்கும் பலவித மா ' உணர்ச்சிகள் இருப்பதாக இப்போது ஸயன்ஸ்படியே சொன்னாலும் அதற்குப் பார்வை உண்டா என்று தெரியவில்லை. அதனால் எனக்கு ஒன்று தோன்றுகிறது. 'பார்த்தால்' என்று ச்லோகத்தில் சொல்லியிருந்தாலும், பார்க்கா விட்டாலும் பரவாயில்லை; மரம் மாதிரிப் பார்க்கச் சக்தியில்லாவிட்டாலும் பரவாயில்லை; அல்லது பார்க்கிற சக்தி வாய்ந்த பிராணிகளாக இருந்தும்கூட இந்தத் தீபத்தைப் பார்க்காவிட்டாலும் பாதகமில்லை; இந்தத் தீபத்தின் ஜ்வாலையானது அதைப் பார்க்கிறவர், பார்க்காதவர் எல்லார் மேலும் படுகிறதோ இல்லையோ? அம்மாதிரி ஜ்வாலை படுகிற இடத்துக்குள் இருக்கிற சகல ஜீவராசிகளுக்கும் பாப நிவிருத்தி, ஜன்ம நிவிருத்தி, சாசுவதமான ச்ரேயஸ் கிடைக்க வேண்டும்' — இப்படி அர்த்தம் பண்ணிக் கொள்ளலாமோ என்று தோன்றுகிறது.

தீப ஜ்வாலை எப்படி வித்யாஸம் பார்க்காமல், பிராமணன், பஞ்சமன், புழு, பட்சி, கொசு, மரம், மற்ற நீர்வாழ் பிராணிகள், நிலம் வாழ் விலங்கினங்கள் இவற்றின் மீது படுகிறதோ அப்படியே நம் மனதிலிருந்து அன்பு ஒரு தீபமாக, எல்லோரையும் தழுவுவதாகப் பிரகாசிக்க வேண்டும். இப்படிப்பட்ட அகவொளியோடு, புற ஒளியாகத் தீபத்தை ஏற்றி வைத்து, மேலே சொன்னதுபோல் பிரார்த்திக்க வேண்டும்.

முன்பெல்லாம் சொக்கப்பானை என்று ஆலயத்திலிருந்து தீபத்தைக் கொண்டு வந்து பெரிசாக ஏற்றினார்களே, திருவண்ணாமலையில் இப்போதும் மலை உச்சியில் மகாபெரிய ஜோதியாகத் தீபம் ஏற்றுகிறார்களே, இதன் உள்ளர்த்தம் என்ன? சின்ன அகலாக இருந்தால் அதன் ஜ்வாலை கொஞ்ச தூரம்தான் பரவும். சொக்கப்பானை என்றால் அதன் பிரகாசம் ரொம்ப தூரத்துக்குத் தெரியும். அண்ணாமலை தீபம் மாதிரி மலையில் ஏற்றி வைத்துவிட்டாலோ, அது எத்தனையோ ஊர்கள் தாண்டிக் கூடத் தெரியும். அத்தனை

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

பெரிய எல்லைக்குள் இருக்கிற சகல ஜீவ ஜந்துக்களின் மீதும் இந்தப் பிரகாசம் பட்டு அவற்றின் பாபங்கள் போக வேண்டும் என்ற உத்தமமான சிந்தனையில்தான் சொக்கப் பானை, அண்ணாமலை தீபம் என்றெல்லாம் நம் பூர்வீகர்கள் ஏற்பாடு பண்ணி யிருக்கிறார்கள்.

சாதாரணமாக இரண்டு கால் பிராணி, நாற்கால் பிராணிகள்தான் அதிகம். வண்டுக்கு ஆறு கால்; சிலந்திக்கு எட்டுக் கால்கள்; மரவட்டை, கம்பளிப் பூச்சி என்று எடுத்துக் கொண்டால் அதற்கு எண்ணி முடியாத கால்கள். வேதத்தில் அடிக்கடி 'த்விபாத்', 'சதுஷ்பாத்' என்று இரு கால், நாற்கால் பிராணிகளின் க்ஷேமத்தைக் கோருகிற மாதிரியே, எத்தனை காலுள்ள பிராணிகளானாலும் அவற்றுக்கும், இன்னும் பாம்பு மாதிரி, மீன் மாதிரி காலே இல்லாத பிராணிகளுக்கும் க்ஷேமம் உண்டாகட்டும் என்று மந்திரங்கள் இருக்கின்றன.

பரம ஞானிக்குப் பிராமணன் பஞ்சமன் (ப்ராம்மணே... ச்வபாகே) என்ற வித்யாஸம் தெரியாது என்று கீதையில் சொல்லி யிருக்கிறது. நமக்கும்கூட, காரியத்தில் பேதத்தைப் பார்த்தாலும் மனஸில் சுரக்கும் அன்பில் வித்யாசமே கூடாது என்கிற மாதிரி தான் ரந்தி தேவன் முதலில் பிராமணனுக்கும் அப்புறம் பஞ்சமனுக்கும் தானம் பண்ணியிருக்கிறான், இந்தக் கார்த்திகை தீப சுலோகத்திலும் ''ச்வபசா:, விப்ரா:'' என்று பஞ்சமன், பிராமணன் இருவரையும் சொல்லி யிருக்கிறது. க்ஷேமத்தைக் கோரும்போது ஜாதி வித்தியாசமே இல்லை. நல்லவன் கெட்டவன் என்றும் வித்தியாசம் பார்க்கக் கூடாது. மகா பாபத்தைச் செய்துவிட்டு நரகவாசிகளாகி யிருப்பவர்களிடமும் அன்பு பாராட்டி, அவர்களுக்கும் உபகாரம் செய்யச் சொல்வது நம் சாஸ்திரம். அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்கிறேன். (தொடரும்)

×××××××××××××××××××××××××××××××××××××××

350 கோவில்களின் திவ்யப் பிரசாதம்!

ஓர் அழகான கோவிலில் நாம் நுழைகிறோம். அங்கிருக்கும் ஆண்டவனை மனமுருக வேண்டி நிற்கிறோம். தீபாராதனை முடிந்தவுடன் நம்மை நோக்கி அர்ச்சகர் பிரசாதம் கொடுக்க வருகிறார். பயபக்தியோடு வாங்கி நெற்றியிலே இட்டுக் கொள்கிறோம். இட்டுக் கொண்ட பிறகு மீதி உள்ள குங்குமத்தைக் கோவிலின் மூலை முடுக்குகளில் தட்டிவிட்டுப் போகிறோம். நம்மைப் போலத்தான் எல்லோரும் செய்வார்கள். இப்படிச் செய்யாத ஒருவர் இருக்கிறார். அவர்தான் திரு நாகநாதன். அலிடாலியாவில் மானேஜராக இருக்கும் இவர், தாம் பெறும் விபூதி குங்குமத்தை மிகமிக ஜாக்கிரதையாக எடுத்துக் கொண்டு வந்து தமது வீட்டில் பத்திரப்படுத்தி வைக்கிறார். இப்படி எவ்வளவு கோயிலின் பிரசாதங்கள் அவரிடம் உள்ளன? அவரே கூறுகிறார். ''நான் இந்தியாவில் பல பாகங்களில் உள்ள 350 கோயில்களின் பிரசாதத்தை இப்படி பயபக்தியோடு பாதுகாத்து வருகிறேன். அதோ அந்த டப்பியில் உள்ளது ''வாஜபேய யாகத்தின் பிரசாதம். இந்த யாகம் பதினைந்து வருடங்களுக்கு ஒரு முறைதான் செய்வார்கள். கும்பகோணத்தில் இது நடந்தபோது நான் சென்று வந்தேன்.'' இப்படியே ஒவ்வொரு டப்பியையும் சுட்டிக் காட்டி ஒவ்வொன்றைப் பற்றியும் சிறு சிறு விளக்கம் தருகிறார்.

இவரிடம் உள்ள பிரசாதங்கள் தபால் மூலமோ அல்லது நண்பர்கள் மூலமாகவோ சேர்த்தவை அல்ல. இவரே அந்தந்தக் கோயிலுக்குச் சென்று இறைவனைத் தரிசித்து விட்டு அர்ச்சனை செய்து வாங்கிக் கொண்டு வந்தவை.

இவருக்கு இத்தாலிய அரசாங்கம் ''சுவாலியர்'' என்ற உயர்தர விருதை வழங்கிக் கௌரவித்திருக்கிறது. ''லலிதா சகஸ்ரநாமம் படித்தால் போதுமானது. நாம் மனச்சஞ்சலத்திலிருந்து விடுபடுவோம்'' என்கிறார். பல கோயில்களைப் பார்த்த புண்ணியவானைப் பார்த்தால் நமக்கும் புண்ணியம் இல்லையா?

—சுவன்




மோதி நூல் தையல் வேலைப் போட்டி

முதற் பரிசு ரூ. 10,000/-

ரூ. 50,000 பெறதக்க, வேறுவிந்தை மிக்க பரிசுகள்


2 இரண்டாவது பரிசுகள்



4 மூன்றாவது பரிசுகள்



8 நான்காவது பரிசுகள்



10 ஐந்தாவது பரிசுகள்



100 ஆறுதல் பரிசுகள்



சற்றே சிந்தியுங்கள்! ரூ.10,000! இவ்வளவு பணத்தினால் என்னதான் செய்ய முடியாது! வாரியிறைத்து செலவு செய்யலாம், சேமிக்கவும் செய்யலாம். இத்தொகை உங்களுக்கே கிடைக்கக்கூடும். ஆகவே தாமதமின்றி இன்றே உங்கள் தையல் வேலையைத் துவக்குங்கள்.

விரையுங்கள்! முடிவு தேதி: ஆகஸ்ட் 30, 1976

நீங்கள் செய்ய வேண்டியது:-



MODITHREAD NEEDLEWORK CONTEST
Modi Thread Mills, Modinagar, U.P.

அனுப்ப வேண்டிய விலாசம்: **MODITHREAD NEEDLEWORK CONTEST**
Modi Thread Mills, Modinagar, U.P.

மோதி நூல்கள்

30-க்கு மேற்பட்ட நாடுகளில் விற்பனையாகிறது.



புதிய உலகம் கண்டேன்

சாலைப் போக்குவரத்து-
வரிசை வரிசையாக பஸ்கள்
மாஸ்கோ ஊழியர்களின் குழந்
தைகளை நகர்ப்புறத்துக்கு வெளியே
பசுமையுள்ள பொழுது போக்குக்காக முகா
மிட அழைத்துச் செல்கின்றன.

2. போக்குவரத்துச் சாதனங்கள்

சராசரி இந்திய ரயில் பிரயாணியோ, இடிபட்டு மிதிபட்டுக் கூட்டத்தில் நெருக்கப்பட்டு ஏறி இறங்க வேண்டிய இடத்தில் எப்படியோ பிதுக்கி வெளியே தள்ளப்படும் நம் நகரங்களின் பஸ் பிரயாணியோ, சோவியத் யூனியனுடைய பொதுப் போக்குவரத்து சாதனங்களைப் பற்றிக் கேள்விப்பட்டால் மிகவும் ஆறுதலாக இருக்கும். அந்த அரிய இலகுவான வசதிகளை நாமும் அநுபவிக்க வேண்டும் என்று ஆசையாகவும் இருக்கும்.

இங்கே நமது நாட்டில் தனியார் துறை, பொதுத்துறை என்று இரண்டு துறைகளிலும் போக்குவரத்துச் சாதனங்கள் உள்ளன. தனியாரி துறையிலிருந்த ஒரு பஸ் ரூட் பொதுத் துறையானதும் ''ஸீட்டெல்லாம் ஒரே அழுக்கு மயம். லொட லொட என்று சத்தம் வருகிறது. எதையும் சிரத்தையோட கவனிக்க ஆளில்லே'' என்று பொதுமக்களில் பலர் அலுத்துக் கொள்ளவும், பத்திரிகைகளில் ஆசிரியருக்குக் கடிதம் எழுதவும் அவசியம் உண்டு. ஏனெனில் ஒரு நிர்வாகம் பொதுத் துறையானதும் சில மந்த நிலைகள் வருவதுதான் காரணம். அப்படி வரக்கூடாது. ஆனால் இங்கு வருவது இயல்பாகியுள்ளது.

ஆனால் சோவியத் நாட்டில் இப்படி ஒப்பிட்டுப் பார்க்க வசதிகள் இல்லை. அங்கு தனியார் துறை என்ற பேச்சுக்கே இடம் கிடையாது. எல்லாமே பொதுத் துறைதான். அதாவது அரசாங்கப் பொறுப்பில்தான் அனைத்தும் இயங்குகின்றன. பொதுத் துறையில் விடப்படுகிற ஒரு நிர்வாகம் எவ்வளவு கனகச்சிதமாகவும், செம்மையாகவும், சீராகவும் இயங்க முடியும் என்பதற்குச் சோவியத் யூனியன் ஓர் எடுத்துக்காட்டு. மக்களுக்கு ஒரு சிறு மனத்தாங்கல்கூட இல்லாமல் பொது வாழ்க்கை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. சோவியத் நாட்டில் இரயில், ட்ராம், ட்ராலி பஸ், டாக்ஸி, விமானம் ஆகியவை எவ்வாறு உள்ளன என்பதை விவரித்தாலே போதும். அங்கே பொதுப் போக்குவரத்து வசதிகள் எவ்வளவு சீராக உள்ளன என்பது விளங்கிவிடும். மாஸ்கோவிலும், பிற சோவியத் நகரங்களிலும் நகரப் போக்குவரத்துச் சாதனங்களில் முக்கியமானதாகிய 'மெட்ரோ' எனப்படும் பாதாள ரயில் போக்குவரத்தைப் பற்றி முதலில் பார்க்கலாம்.

ரஷ்யா தவிர ஐரோப்பாவில் லண்டன், பாரிஸ், ரோம் போன்ற பெரு நகரங்களிலும் பாதாள ரயில்கள் ஓடுகின்றன. சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் இந்த வசதி உண்டு. எல்லாவற்றிலும் பழைமையானது லண்டன் ட்யூப் ரயில்தான். ஆனாலும் இந்த எல்லா நகரங்களிலும் ஓடுகிற பாதாள ரயில்களில் மாஸ்கோவிலும் பிற சோவியத் நகரங்களிலும் ஓடுகிற ரயில்கள்தான் புதுமை குன்றாமலும், நவீனமாகவும், துரிதமாகவும் இருக்கின்றன. பாதாள ரயில் நிலையங்களும், தானாக இயங்கிப் பிரயாணிகள் ஏற இறங்கப் பயன்படுகிற எஸ்கலேட்டர்களும், சோவியத் யூனியனில் சுத்தமாகவும் பழுதின்றியும் பணிச்சென்றும் இருக்கின்றன. இந்த நான்கு சர்வதேச நகரங்களிலும் உள்ள 'மெட்ரோ'க்களிலும் பயணம் செய்த பின் நானே செய்த முடிவு இது. சோவியத் மெட்ரோக்களில் பிரயாணிகளுக்கு எந்தச்சிரமமும் கிடையாது.

லண்டனிலும், பாரிஸிலும், ரோமிலும் உள்ள மெட்ரோக்களில் புக்கிங் கவுண்டர்–


டிக்கெட்—எல்லாம் உண்டு. எவ்வளவு அவசரமாக இருந்தாலும் க்யூவில் நின்று டிக்கட் வாங்கியாக வேண்டும். ரயிலில் அபூர்வமாக டிக்கெட் 'செக்கிங்' நடைபெறுவதும் உண்டு. டிக்கெட்டை வெளியேறுகிற முனையில் கொடுக்க வேண்டும். பாரிஸில் பிரயாணம் தொடங்குகிற முனையிலேயே மிஷினில் டிக்கட்டைச் செலுத்தித் துளையிட்டுக் கொள்ள வேண்டும். பாரிஸில் ரயில், பஸ் எல்லாவற்றிற்கும் ஒரே மஞ்சள் நிற அட்டை டிக்கட்தான். மொத்தமாக வாங்கி வைத்துக் கொண்டு விடலாம். லண்டனில் குறைந்த கட்டணம் பத்து பென்ஸ் தொடங்கித் தொலைவுக்குத் தகுந்தபடி கட்டணம் அதிகரித்துக் கொண்டே போகும்.

சோவியத் யூனியனில் இந்த ஏற்பாடுகளை எல்லாம் கபமாகச் சிக்கல் இல்லாமல், செய்திருக்கிறார்கள். புக்கிங் கவுண்டர், புக்கிங் கிளார்க், டிக்கட், செக்கிங், தொலைவுக்குத் தகுந்த விதத்தில் கட்டண வித்தியாசம் எதுவுமே இல்லாமல் செய்திருக்கிறார்கள். க்யூவில் காத்திருத்தலுக்கு அவசியமே இல்லை. மாஸ்கோ நகருக்கும், சுற்றுப்புறங்களுக்கும் செல்கிற மெட்ரோ ரயில்களில் 10 கிலோ மீட்டர் பயணம் செய்தாலும் சரி, 50 கிலோ மீட்டர் பயணம் செய்தாலும் சரி, கட்டணம் 5 காசுகள் (5 கோபெக்குகள்)தான். வித்தியாசம் கிடையாது. மெட்ரோ நிலையத்துக்குள் இறங்க வேண்டிய எஸ்கலேட்டர் படி தொடங்குகிற இடத்தில் ஒரு மெஷின் காசு போட வேண்டிய துளையுடன் இருக்கிறது. நுழையுமிடத்தை ஒரு தடிமனான இரும்புக் கம்பி தடுத்துக் கொண்டிருக்கும். துளையில் 5 கோபெக் நாணயத்தைப் போட்டவுடன் மேற்பகுதியில் எரிந்து கொண்டிருக்கும் சிவப்பு அடையாளம் ஒரு விநாடி பச்சையாக மாறி வழியைத் தடுத்துக் கொண்டிருந்த இரும்புக் கம்பியும் விலகிக்கொள்ளும். கம்பி விலகிக் கொள்கிற அந்த ஒரு நொடியில் காசைப் போட்ட பயணி துரிதமாக உள்ளே சென்று விடவேண்டும். ஐந்து கோபெக் நாணயம் இல்லையென்றால் அப்படி மாற்றிக் கொள்வதற்கு வேண்டிய இயந்திரங்கள் ஒவ்வொரு மெட்ரோ நிலையத்திலும் வேண்டிய அளவு பொருத்தப் பட்டிருக்கின்றன. இப்படிக் காசு போட்டுத் துரிதமாக உள்ளே நுழைய வேண்டிய ஏற்பாட்டில் தயங்கியோ, தடுமாறியோ, அசடு வழிந்து கொண்டோ விட்டு விடுகிற ஆளை நான் முயன்றும் கூட எங்கும்



மாஸ்கோ பாதாள ரயில் நிலையம், மயன் மாளிகையோ என மயக்க வைக்கும்.

நா. பார்த்தசாரதி



ஐந்து கோபெக் நாணயத்தை உண்டியலில் போட்டு நாமே டிக்கெட் எடுக்க வேண்டியதுதான் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் பயணம் செய்யலாம்.



காண முடியவில்லை. முதல் ஓரிரு முறைகளில் வெளியூர்க்காரனான நான்தான் அந்தத் துரித கதிக்கு ஈடு கொடுக்க முடியாமல் தடுமாறினேன். ஒரு நொடியில் உள்ளே நுழைந்து கொள்ளாவிட்டால் இரும்புக் கம்பி மறுபடியும் குறுக்கே நீட்டித் தடுத்து விடும். மேலே பச்சை விளக்கு மாறிச் சிவப்பு விளக்கு எச்சரிக்கை வந்துவிடும். ஒருமுறை 5 கோபெக் போட்டு உள்ளே நுழைந்து விட்டால் மறுபடியும் எந்த மெட்ரோ நிலையத்திலாவது எஸ்கலேட்டரில் ஏறி வெளியே வராத பட்சத்தில் மாற்றி மாற்றி எங்கே வேண்டுமானாலும் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் பிரயாணம் செய்து கொண்டிருக்கலாம். மெட்ரோ நிலையங்கள் நம் நாட்டு ஐந்து நட்சத்திர ஹோட்டல்களின் கான்ஃபரன்ஸ் ஹால்களைப் போல், வரவேற்புக் கூடங்களைப் போல் சுவரிலும் தரையிலும் சலவைக்கல் பதிக்கப் பெற்று மின்விளக்கொளி அலங்காரத்துடன் தூய்மையாகப் பாதுகாக்கப் படுகின்றன. கதவுகள் தாமே திறந்து மூடிக்கொள்கின்றன. ரயில் புறப்படு முன் கதவு மூடப்படுவதற்கு அரை விநாடி இருக்கும்போது எச்சரிக்கை ஒலி தரப்படுகிறது. மூடப்படுகிற கதவில் விரைந்து ஏறி நடுவே சிக்கிக்கொள்கிற தடுமாற்றம் யாருக்கும் இல்லை. ரயில் நின்றதும் இறங்குகிறவர் முதலில் இறங்குகிறார்கள். ஏறுகிறவர்கள் அடுத்து ஏறுகிறார்கள். ஒரு பக்கம் இறங்குகிறவர்களும், இன்னொரு பக்கம் ஏறுகிறவர்களுமாக ஒரே சமயத்தில் அது நடந்தாலும் மோதுதல் என்பதை எங்கும் பார்க்கவே முடியாது.

காசுக்குப் பதில் டிக்கெட்டில் (நடுவே காந்தக் கோடு உள்ளது) பஞ்ச் செய்து கொள்ள இரும்புக் கம்பி விலகி வழி விடுகிற முறையும் டிக்கெட் மறு பக்கம் தானாக வந்து விழுந்துவிடுகிற முறையும் பாரிஸ் மெட்ரோவில் இருக்கிறது. சித்தே யுனிவர்ஸிடி அருகே உள்ள பாரிஸ் மெட்ரோவில் சில மாணவர்கள் டிக்கட் வாங்கித் துளையிடாமலே அந்த இரும்புக் கம்பியைத் தாண்டிக் குதித்துக் கடப்பதைப் பார்த்தேன். மாஸ்கோவிலோ சோவியத் நாட்டின் பிற பகுதிகளிலோ அப்படிச் செய்பவர்களை முயன்றும்கூட நான் எங்கும் காணவே முடியவில்லை. சோவியத் மக்களுக்குள்ள கட்டுப்பாடும் ஒழுக்கமுமே அதற்குக் காரணம். லண்டன், பாரிஸ் மெட்ரோக்களில் வழியெல்லாம் ஒரே சுவரொட்டிகள், பென்சிலால் பெயிண்டால் கிறுக்கிய கிறுக்கல்கள் சுவர்களை நிறைத்துக் கொண்டிருக்க, மாஸ்கோ மெட்ரோ நிலையங்களிலோ ரயில்களிலோ, சுவரொட்டி, கைக்கிறுக்கல் சேஷ்டைகள் எதையும் தேடித் துருவிப் பார்த்தால்கூடக் காண முடியாது. மாஸ்கோவில், எஸ்கலேட்டர்கள், கன்வேயர் பெல்ட்டுகள் எல்லாம் சத்தமின்றி இயங்கக் கூடியனவாகவும் சுத்தமாகவும் இருந்தன. மற்ற நாடுகளில் கடமுட ஓசையோடும் உரத்த சப்தத்தோடும் இயங்கக் கூடிய எஸ்கலேட்டர்கள், ஓடாத எஸ்கலேட்டர்களைக் கூடச் சில இடங்களில் காண முடிந்தது. பிரிட்டனின் அண்டர் கிரவுண்ட் டியூப் ரயில் நிலையங்களில் சாக்லேட், சிகரெட் விற்கக்கூடிய ஆட்டோமேட்டிக் மிஷின்கள் பல நிலையங்களில் பழுதுபட்டும், உடைக்கப்பட்டும் கிடப்பது சர்வ சாதாரணமாயிருந்தது. மாஸ்கோ மெட்ரோ, புறநகர்ப் பகுதிக்குப் போகும் போது தரைக்கு மேலேயே நம்மூர் எலெக்ட்ரிக் ரயில் மாதிரியும் அமைந்திருக்கிறது. மாஸ்கோ நகரின் போக்குவரவு வசதிகளைப் பெரும்பாலும் 'மெட்ரோ'வே நிறைவு செய்துவிடுகிறது. பஸ்கள் முதலிய மற்றவற்றிலும் கண்டக்டர்கள், செக்கிங் என்பதெல்லாம் எதிர்பாராமல் மக்களே டிக்கட் பஞ்ச் செய்துகொள்கிற கட்டுப்பாடு போற்றத் தக்க விதத்தில் இருக்கிறது. ஐரோப்பாவில் பல நாடுகளில் இந்த ஏற்பாடு இருக்கிறது. யாரையும் யாரும் ஏமாற்றக் கூடாது என்று எண்ணும் மக்களின் மனோபாவத்தால் தான் இது சாத்தியமாகிறது. 'டிக்கெட் வாங்காமல் பிரயாணம் செய்யலாம்' என்ற நினைப்பே வராமல் மக்களின் அடிப்படை நாணயம் அமைந்திருப்பதுதான் ஏராளமான கண்டக்டர்கள், டிக்கெட் பரிசோதகர்கள் எல்லாம் இல்லாமல் மக்களின் நன்னம்பிக்கை, நல்லெண்ணம், நாணயம் ஆகியவற்றை நம்பி நிர்வாகச் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முடிவதற்குக் காரணம். நிறைய டிக்கட் பரிசோதகர்கள் கண்டக்டர்கள் வேலைக்கு நியமித்தும் நம் தேசத்தில் தவறுகள் கோடிக்கணக்கில் நடந்து விடுகின்றன. தவறுகளைத் திருத்த நியமிக்கப்படும் பரிசோதகர்களையே அஞ்சு பத்துக் கொடுத்து எதற்கோ பழக்கி விட்டுவிடவும் நம் மக்கள் தயாராகிவிடுகின்றனர். அடிப்படை நாணயம் இருந்தால் தான் தேசிய குணம் (National Character) உருவாக முடியும் என்பதற்கு முன்னேற்றமடைந்த ஐரோப்பிய நாடுகள் உதாரணமாயிருக்கின்றன. சோவியத் நாடோ முதல் உதாரணமாயிருக்கிறது.

பெட்ரோல், டீஸல், கிரோஸின், சமையல் செய்வதற்கான காஸ், இவை சோவியத் யூனியனில் மிக மிக மலிவு. போக்குவரத்துச் சாதனங்களை மிக எளிய செலவில் அவர்கள் செய்து கொடுத்திருப்பதற்கு இதுவும் ஒரு காரணம். சமையல் காஸ், மின்சாரம், வீட்டை உஷ்ணப்படுத்த சென்ட்ரல் ஹீட்டிங், தண்ணீர், இவை அனைத்துக்கும் சேர்த்து ஒரு சோவியத் குடும்பம் மாதம் ஒன்றுக்கு அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் ரூ. மூன்று முதல் ஐந்துக்கு மேல் போவது அபூர்வம். ஒரு கிளாஸ் மினரல் வாட்டர் 4 கோபெக் விலை என்றால் அதை விடக் கொஞ்சம் அதிகமான விலையில் ஒரு லிட்டர் பெட்ரோலோ, டீஸலோ கிடைத்து விடுகிறது.

டாக்ஸிகளில் பல சமயம் நகருக்குள் எங்கு சென்று இறங்கினாலும் முழுசாக ஒரு ரூபிள் ஆவதே இல்லை. 60 கோபெக் 70 கோபெக் தான் ஆகிறது. எல்லா டாக்ஸி டிரைவர்களும் தங்கள் இருக்கைக்கு அருகே ஒரு 'டிரே'யில் தங்கள் உபயோகத்துக்காக சிகரெட், படிக்கப் பத்திரிகைகள், புத்தகங்கள் வைத்திருக்கிறார்கள். தினசரிகள், புத்தகங்கள் இல்லாத டாக்ஸியை மிக அபூர்வமாகவே பார்க்க முடிந்தது. எரிந்து விழுகிற



இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே ஓடப் போகும் ரயிலுக்குப் பெயர் 'உடன்பாடு எக்ஸ்பிரஸ்'

'ஹிம்மத்' — பாபு



இந்த எண்ணெய்
தனிச் சிறந்த
ஸிங்கர்*
ஃபார்முலாவினால்
உருவாக்கப்பட்டது
ALL-PURPOSE
HIGH QUALITY
SINGER oil
FOR USE AT HOME AND INDUSTRY
எண்ணெய்ப் பசையூட்டிப்
பாதுகாத்துப் பணத்தையும்
மிச்சப்படுத்துகிறது
எங்கும் கிடைக்கிறது
ஸிங்கர் அளிப்பவை
சிறந்த பொருட்களே
SINGER SEWING MACHINES
*ஸிங்கர் கம்பெனியின் ட்ரேட் மார்க்
maa. S.S.M-44 TM
ஸிங்கர் ஸூயிங் மெஷின் கம்பெனி, 207, டி.என். ரோடு, பம்பாய் 400 001

தாய்மார்களே!

டாக்டர்கள் குழந்தை உணவில் எதை எதிர்-பார்க்கிறார்களோ,

அது அமுல்ஸ்ப்ரேயில் உள்ளது

அமுல்ஸ்ப்ரேயில் உங்கள் குழந்தை ஆரோக்கியமாகவும் வலுவுடனும் வளருவதற்குத் தேவையான வைட்டமின்கள், கனிஜப் பொருட்கள் மற்றும் புரதங்கள் அடங்கியுள்ளன.

வைட்டமின்கள்—நோய்த் தொற்றை எதிர்க்க, நன்றாக பசி எடுக்க, ஆரோக்கியமான நரம்புகள், ஈறுகள், கண்கள் மற்றும் பற்களுக்கு. நியாஸின்—சீரண சக்தியை வளர்க்க, உடல் உறிஞ்சிக் கொள்ள, ஆரோக்கியமான சருமத்துக்கு. கால்ஷியம், பாஸ்பரஸ் போன்ற கனிஜ சத்துக்கள் எலும்புகள் சீராக அமைய. இரும்புச் சத்து—ரத்த அமைப்புக்கு. புரதம், செல் அமைப்புக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையானது. அமுல்ஸ்ப்ரேயில் தரமுயர்ந்த புரதங்கள் போதிய அளவில் இருக்கின்றன.

அமுல்ஸ்ப்ரேயை, பிறந்து சில நாட்களான குழந்தைகள் கூட சீரணிக்க முடியும்

ஒவ்வொரு சொட்டுப் பாலும் மிக நுண்ணிய பவுடராக மாற்றப்படுகிறது. கொழுப்பும் அவ்வாறே மாற்றப்படுகிறது. இதனால் குழந்தை இதை எளிதில் சீரணிக்க முடிகிறது.

அமுல்ஸ்ப்ரே விரைவில் எளிதாகத் தயாரிக்க வல்லது

ஸ்ப்ரே-ட்ரை முறையால் தயாரிக்கப்படும் நுண்ணிய பவுடரான அமுல்ஸ்ப்ரே சுவையானது; விரைவில் தயாரிக்கக்கூடியது; எளிதில் கரைகிறது. இது பாட்டிலின் நிப்பிள் துவாரத்தில் அடைத்துக் கொள்வதில்லை. எனவே குழந்தை அதிக காற்றை விழுங்குவதில்லை.

பாலஅமுல் மற்றும் உங்கள் வளரும் குழந்தை

3-வது மாதத்தில் (அல்லது அவன் பெரியவனாகிவிட்டான் என்று டாக்டர் கூறும்போது) உங்கள் குழந்தைக்கு, அமுல்ஸ்ப்ரேயைத் தவிர, பாலஅமுல் தானிய உணவு தரத் தொடங்குங்கள்.

பாலஅமுல், முன்கூட்டியே பாலில் சமைக்கப்பட்ட குழந்தை உணவு. மற்ற துணை உணவுகளைக் காட்டிலும் பாலஅமுலில் அதிக புரதமும், வைட்டமின் ஏ-யும் உள்ளன. தவிர, இந்த வயதில் குழந்தை வேகமாக வளருவதற்கு அவசியமான, நன்கு சமநிலை பெற்ற முழுமையான ஃபார்முலா பாலஅமுலில் அடங்கி இருக்கிறது. எனவே உங்கள் குழந்தைக்கு பாலஅமுல் உகந்தது.

இலவசம்:
அமுல் குழந்தை புத்தகம் மற்றும் பாலஅமுல் புத்தகம்—அதிக விவரங்களுக்கு. எழுதவேண்டிய முகவரி: த.பெ. எண் 10124, பம்பாய் 400 001. 60 பைசா தபால் தலையுடன் உங்கள் முழு முகவரியையும் அனுப்புக.





Indian Standard Institution

ASP-AS 28 A

அமுல்ஸ்ப்ரே

தாய்ப்பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது

விற்பனைக்கு விடுப்போர்: குஜராத் கோ-ஆப்பரேட்டிவ மில்க் மார்க்கெட்டிங் பெடரேஷன் லிமிடெட், ஆனந்த்.

கோபிக்கிற, தகராறு செய்கிற டாக்ஸி டிரைவரை எங்காவது என்றாவது சந்தித்து விட முடியுமென்று பார்த்தேன். ஏமாற்றம் தான் மிச்சம். பார்க்கவே முடியவில்லை.

மெட்ரோவில், பஸ்ஸில், டிராமில், ட்ராலியில் கூட்டம் அதிகமிருக்கும் நேரங்களிலும், நெருக்கடி, மோதலில்லை. ஒரு சண்டை, கலகம், கூப்பாடாவது நடக்க வேண்டுமே? மக்கள் அநுசரித்துப் போகிறார்கள். தங்களுக்குள் ஒத்து நடந்து கொள்கிறார்கள். பரஸ்பரம் விட்டுக் கொடுத்து மகிழ்கிறார்கள். பஸ் இரயில் கூட்டங்களில் 'ஸ்த்ராஸ்தவிச்ச' (வணக்கம்), 'ஸ்பஸிபா' (நன்றி) 'தஸ்வி தான்யா' (போய் வருகிறேன்) 'விஸ்லிவா' (குட்லக்) போன்ற சமூக உரையாடல்களைத் தாம் சகஜமாகக் கேட்க முடிந்ததே தவிர எரிச்சல், பகை, கோபம், கலகம் சம்பந்தமான வார்த்தைகளைக் கேட்க வாய்ப்பே இல்லை.

இனி தொலைதூரத்துப் பயணத்துக்கான வசதிகளையும், விமானப் பயணத்தையும் பற்றிக் கவனிக்கலாம். லெனின் கிராடிலிருந்து மாஸ்கோ திரும்ப எங்களுக்கு விமானப் பயணம் ஏற்பாடு செய்திருந்தார்கள். நான் ரயில் பயண விருப்பத்தை வெளியிட்டேன். காரணம் லெனின்கிராட் நகரிலிருந்து மாஸ்கோ செல்லும் 'ரெட் ஆரோ' (சிவப்பு அம்பு) என்ற எக்ஸ்பிரஸ் ரயிலின் சிறப்பையும் அதில் பயணம் செய்கிற சுகத்தையும் பற்றி நண்பர்கள் நிறைய முன்பே சொல்லியிருந்ததுதான். என் விருப்பத்தை ஏற்று அன்றிரவு ரெட்-ஆரோ எக்ஸ்பிரஸில் டிக்கட் ரிஸர்வ் செய்து விட்டார்கள். அந்த எக்ஸ்பிரஸ் ஒவ்வோர் இரவும் சரியாகப் பன்னிரண்டு மணி ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் லெனின்கிராட் இரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு அதிகாலையில் மாஸ்கோவை அடைகிறது. தொலைவு சற்றேறக் குறைய ஆயிரம் கிலோ மீட்டர். லெனின் கிராடிலோ மாஸ்கோவை விடக் குளிரும் பனியும் அதிகம். ஏதோ ஓர் ஆவலில் ரயில் டிக்கட் வாங்கச் சொல்லி விட்டாலும், ''இந்த நடுக்கும் குளிரில் நள்ளிரவில் ஸ்டேஷனுக்குப் போய், அப்புறம் ரயிலேறி எப்படி மாஸ்கோ போய்ச் சேரப் போகிறோம்?'' என்ற தயக்கமும், சிறிது அச்சமும் உள்ளூற இருந்தது. அதற்கேற்றாற்போல் அன்று இருட்டியதுமே வெளேரென்று பனி கொட்டத் தொடங்கி விட்டது. தங்கியிருந்த ஹோட்டலிலிருந்து இரவு பதினொன்றே முக்கால் மணிக்கு ஸ்டேஷனுக்குப் புறப்பட்டபோதோ குளிர், பனி யெல்லாம் இன்னும் அதிகமாகியிருந்தன. ஜீரோவுக்குக் கீழே 30 டிகிரி, 32 டிகிரி என்ற விதத்தில் குளிர் இருந்தது.

ஆனால் சகல வசதிகளும் நிறைந்த ரெட் ஆரோ எக்ஸ்பிரஸில் ஏறி அமர்ந்ததும் கவலைகள் பறந்தன. ரயில் முழுதும் உஷ்ணப் படுத்தும் ஹீட்டிங் சிஸ்டம் இருந்தது. லெனின்கிராடில் தங்கியிருந்த ஹோட்டல் அறையையே பெயர்த்துக் கொண்டு வந்து ரயிலில் வைத்த மாதிரி வசதியாயிருந்தது. சுத்தமான விரிப்புடன் கூடிய படுக்கை, பிளாங்கெட், வெளிக் குளிர் சிறிதும் தெரியாத ஹீட்டிங் ஏற்பாடு முகம் பார்க்கும் கண்ணாடி, படிக்க விளக்குகள், மங்கிய இரவு விளக்கு அனைத்தும் இருந்தன. அருகிலேயே எல்லா வசதிகளும் இருந்தன. விமானங்களில் உள்ள ஹோஸ்டஸ் போல ஒரு பெண்மணி சூடான தேநீரும், பிஸ்கட், சாக்லேட்கள் எல்லாம் ஒரு ட்ரேயில் கொண்டு வந்து கொடுத்தாள். அறைக் கதவைத் தாழிட்டுக்



பலரகக் காய்கறிகளை வைத்துக் கொண்டு சமையல் செய்வதைப் பெண்மணிகள் அறிவார்கள். ஸ்ரீமதி ஜெயா விஸ்வநாதன் சமையலும் செய்வார்; காய்கறிகளை வைத்து அழகான கலைப் பொருள்களும் தயாரிப்பார். மலர்கள், கிண்ணங்கள், ஓடங்கள், போன்ற பல அரிய பொருள்களை உருவாக்குகிறார். அடையாறு மாதர் சங்கம் சமீபத்தில் இவரது இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து கலை ஆற்றலைக் கண்டு மகிழ்ந்தது.

கொண்டு தூங்கினால் மாஸ்கோ வந்திருப்பது யாராவது சொன்னால்தான் தெரியும். எங்கள் ரயில் பெட்டியின் பணிப்பெண் தேநீருடன் வந்து எழுப்பிய பின்பே நான் எழுந்தேன். விடிந்திருந்தது. அவ்வளவு சுகமான பயணத்தை நான் இதுவரை ரயிலில் பெற்றதே இல்லை. இந்தக் கட்டுரையின் வாசகர்கள் யாராவது சோவியத் யூனியனுக்குப் போக நேர்ந்தால் அவர்களுக்கு ரெட் ஆரோ எக்ஸ்பிரஸில் பயணம் செய்யக் கொடுத்து வைக்க வேண்டும் என்பது என் பிரார்த்தனை. நல்ல வேகம்; சிறிதளவு அதிர்ச்சிகூட இல்லாத பயணம். புதுமை மெருகு குன்றாத ரயில் பெட்டிகள். எந்த நிலையிலும் பிரயாணி கலக்கமடையாத ஏற்பாடுகள் — இவை சோவியத் நாட்டு ரயில்களின் சிறப்பாகும்.

சோவியத் யூனியனின் விமானப் பயணங்களைப் பற்றிய விவரங்கள் மட்டுமே இனி மீதமிருக்கின்றன. சோவியத் நாட்டில் விமானப் பிரயாணம் என்பது லக்சரியோ அந்தஸ்தைக் காட்டுகிற அம்சமோ அல்ல. சாதாரண விவசாயிகள், தொழிலாளிகளிலிருந்து விஞ்ஞானிகள், ஆட்சியாளர்கள்வரை அனைவரும் விமானப் பயணம் செய்கிறார்கள். உள்நாட்டு விமான சர்வீஸில் கட்டணங்கள் மிக மிக மலிவு. உள்நாட்டு சர்வீஸ், சர்வதேச சர்வீஸ் எல்லாவற்றையுமே சோவியத் அரசுக்குச் சொந்தமான 'ஏரோப்ளாட்'— விமான நிறுவனம்தான் நடத்துகிறது. 18 பேர் மட்டுமே அமர முடிந்த சிறிய விமானங்களில் இருந்து மிகப் பெரிய விமானங்கள் வரை பல ரக விமானங்கள் 'ஏரோப்ளாட்' சர்வீஸ்களில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன. பல விமானங்களுக்கு அவற்றின் கண்டுபிடிப்பாளர்களாகிய ஏரோனாடிக் என்ஜினீயர்களின் பெயர்களே சூட்டப்பட்டிருக்கின்றன. மிகப் பல ரூட்களில் (உள்நாட்டில்) ரயில் கட்டணங்களைவிட விமானக் கட்டணங்கள் குறைவு. நாட்டுப்புற மக்கள் தோளில் ஆரஞ்சு மூட்டைகள், உருளைக் கிழங்கு பொட்டலங்கள், ஆப்பிள் மூட்டைகளுடன் விமானத்தில் ஏறுவதை எங்கும் சகஜமாகப் பார்க்கலாம். ஏழைக்கு எட்டாதது என்றோ, அந்தஸ்தின் சின்னம் என்றோ அங்கு அதைச் சொல்ல முடியாது. விமானங்களில் அநேகமாகக் காலி இருக்கைகளைப் பார்க்க முடியாது. எந்தப் பெரிய முக்கிய ரூட்டிலும், சிறிய சாதாரண ரூட்டிலும்கூடக் கூட்டம் இருக்கிறது. இருவர் மூவரைத் தவிர எல்லா இருக்கைகளும் காலியாக உள்ள நிலையில் எந்த விமானமும் அங்கு பறப்பதில்லை. விமானத்தில் சொகுசு—உல்லாச அம்சங்களில் அவர்கள் கவனமே செலுத்துவதில்லை. விரைவாகவும், நவீனமாகவும் போய்ச் சேர ஒரு சாதனம் என்ற மட்டில்தான் அதற்கு மரியாதை. மாஸ்கோ நகரத்திலேயே பல விமான நிலையங்கள் இருக்கின்றன. உலகின் அறுபத்தைந்து நாடுகளுக்குச் சோவியத் ஏரோஃப்ளாட் விமானங்கள் பறக்கின்றன. இந்த விமானங்கள் ஆண்டொன்றுக்கு எண்பத்தைந்து மில்லியன் மக்களைச் சுமந்து செல்கின்றன.

எங்கும்போல் அங்கு உள்நாட்டு ரூட்களில் எப்போதாவது நேர்ந்துவிடும் விமான விபத்துக்களைப் பத்திரிகைகள் பெரிதுபடுத்தி சென்ஸேஷனலாகச் செய்தி பிரசுரிப்பது என்பது வழக்கமில்லை. இதைச் சில வெளிநாட்டுப் பத்திரிகைகள் பெரிதுபடுத்துவதுதான் வழக்கமாயிருக்கிறது. விமான விபத்து எல்லா நாடுகளிலும் சகஜம்தான். ஆனால் மற்றவர்களை மிரட்டவோ, பயமுறுத்தவோ வேண்டாம் என்று கருதியோ என்னவோ சோவியத் யூனியனில் அதைப் பெரிதுபடுத்தி விமானத்தில் பயணம் செய்யும் அனைத்து மக்களின் மனங்களையும் கலக்குவதில்லை. விபத்துக்களை மறைத்தே ஆகவேண்டும் என்ற அவசியம் அவர்களுக்கு இல்லை. பொதுமக்களிடையே வீண் பரபரப்பை ஊட்டக் கூடாது என்ற மனிதாபிமான நோக்கமே முக்கியமாகக் கருதப்படுகிறது.

பாரதத்தில் தேசிய மயமாகி அரசாங்கமே நடத்தும் ரயில், பஸ் முதலியவை எப்படி இருக்க வேண்டும் என்று கேட்டால், ''சோவியத் யூனியனில் இருப்பது போல் இருக்க வேண்டும்'' என்று தாராளமாகத் துணிந்து சொல்லலாம். அங்குள்ளது போல் அதே அளவு மிக நவீன வசதிகளை இங்கு பயணிகளுக்கு வழங்க இன்னும் நீண்ட காலமாகலாம். ஆனால் உள்ள வசதிகளை மனிதாபிமானத்துடன் வழங்கிச் செம்மையாகவும், நேர்மையாகவும் அதிகாரிகளும் ஊழியர்களும் இப்போதே நடந்து கொள்ளலாம். மக்களும் சோவியத் நாட்டாரைப் போல் பொதுச் சொத்தைத் தங்கள் சொத்தாகவே மதித்துப் பேணக் கற்க வேண்டும். (தொடரும்)


காப்பி
அடிக்க
முடியாதது!
ஜீவனுள்ள ஒரே காபி
நரசுஸ்
"தெர்மலோ" காபி
''தெர்மலோ'' முறை தயாரிப்பு
நரசுஸ் காபியின் தனிச் சிறப்பு.
நற்சுவை மிகுந்தது.
நறுமணம் கொண்டது.
நாளும் புதியது.
நரசுஸ் காபி!
தயாரித்த 24 மணி
நேரத்திற்குள்
தமிழகத்தில் உள்ள எங்கள்
எல்லா கிளைகளின் மூலம்
வினியோகம்
செய்யப்படுகிறது.
நரசுஸ் காபி கம்பெனி.
சேலம்-636 007
கிளைகள்:- பாண்டிச்சேரி &
தமிழகமெங்கும்.
ADWAVE/NCC 410 TAM

அமரர் கல்கி

அத்தியாயம் 27

செல்வம் பேசுகிறது!

ரங்கநாத முதலியார் குறிப்பிட்டிருந்த தினத்தில் அவர் சொன்னது போலவே ராகு காலம் கழித்து மாசிலாமணி முதலியாரும் மனைவி காமாட்சியும் அவர் வீட்டுக்குப் போனார்கள். அந்தப் பெரிய வீட்டையும் அதிலிருந்த ஐசுவரியத்தையும் கண்டு பிரமித்தார்கள்.

விசாலமான தோட்டத்தில் குரோட்டன்ஸ், பூகன்விலா, மல்லி, ரோஜா, செம்பருத்தி, இருவாட்சி என்று பல ரகச் செடிகளில் பூக்கள் சிரித்தன. பின்புறம் வாழை, மா, பலா, என்று பல ரக பழ மரங்கள் காட்சியளித்தன. 'போர்ட்டிகோ' வுக்கு முன்னால் வட்டமான புல்தரை. அதற்கு நீர் தெளிப்பது போல் அதன் மையத்தில் சுழன்றது 'ஃபவுண்டன்'. நான்கைந்து தோட்டக்காரர்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர். தோட்டத்தைக் கடந்து படியேறியதும் வாசல் கதவருகே இருபுறமும் பிரும்மாண்டமான இரண்டு யானைத் தந்தங்கள். உள்ளே கூடத்தின் சுவரில் புலி, மான் தலைகளும் சில புகைப்படங்களும் காணப்பட்டன. தரையில் கரடித் தோல் விரிப்பாகி யிருந்தது. அதன் பக்கத்தில் தந்தம் இழைத்த வேலைப்பாடுகளுடன் கூடிய பெரிய கனமான டிபன் மேஜை, அதன் மூன்று புறங்களிலும் அமர்ந்தால் ஆள் இருக்கிற இடம் தெரியாமல் அமுங்கிவிடுகிற மாதிரியான உயர் ரக சோபாக்கள். நிலைவாசல்களில் தொங்கிய மணித் திரைகள், கூரையிலிருந்து தொங்கிய லஸ்தர் விளக்குகள்.

தங்கள் கால் பட்டுத் தரை அழுக்காகி விடுமோ என்று அஞ்சியவர்களாக வராந்தாவில் நின்றார்கள் மாசிலாமணியும் காமாட்சியும்.

''ஸார்!'' என்று குரல் கொடுத்தார், மாசிலாமணி.

''யாரு?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார் கணக்குப்பிள்ளை.

''ரங்கநாத முதலியார் இருக்கிறாரா? எங்களை இன்று இந்த நேரத்துக்கு வரச் சொன்னார்.''

அவர்களை மேலும் கீழுமாகப் பார்த்த கணக்குப்பிள்ளை, ''மாசிலாமணி என்று ஒருவர் வருவார்ன்னு ஐயா சொன்னார். நீர் தானா அது?'' என்று கேட்டார்.

''ஆமாம்.''

''நிஜமாகத்தானா ? நீர்தான் மாசிலாமணியா?''

'' 'இவ்வளவு சாமானிய மனிதராய் இருக்கிறாரே, இவரையா வரச் சொல்லி யிருப்பார்?' என்று யோசிக்கிறீங்களா?''

''அதில்லே'' என்று கணக்குப்பிள்ளை கூறிய தோரணையே, 'அதுதான்' என்று உணர்த்தியது. பிறகு அவர், ''வாங்க'' என்று அழைத்துச் சோபாவில் அமரச் செய்தார். அவர்கள் அதன் முனையில் பட்டும் படாமலும் தயக்கத்துடன் அமர்வதைப் பார்த்து, ''சௌகரியமாக உட்காருங்க, ஐயா இப்பத்தான் தூங்கி எழுந்தாங்க. இப்ப வருவாங்க. நான் போய்ச் சொல்கிறேன்'' என்றார். அப்புறம் திடுமென ஞாபகம் வந்தவர் போல, ''அது சரி, நீங்கதான் ஐயாவோட புஷ்பவனம் தெரு வீட்டிலே குடியிருக்கிறதா?'' என்று வினவினார்.

''ஆமாம், எதற்காகக் கேட்கிறீர்கள்?''

''இரண்டு மாதங்களாக வாடகை வரவில்லே; முன்பணமும் ஏதும் தரவில்லே...'' என்று கணக்குப்பிள்ளை கூறி வரும்போதே மாசிலாமணிக்கு ஜுரம் கண்டது போலாயிற்று. அவர் எழுந்து கொண்டார்.

''ஏன் எழுந்துட்டீங்க?'' என்று அதட்டலாகக் கேட்டார் கணக்குப்பிள்ளை. அந்தத் தொனியே மாசிலாமணியை மீண்டும் உட்கார வைத்து விட்டது.

''ஐயாவிடம் ஞாபகப் படுத்திவிட்டுப் 'போய் வாடகை வசூல் பண்ணிக் கொண்டு

வருகிறேன்' என்று கிளம்பினால், ஒவ்வொரு தடவையும், 'அங்கே நீ போக வேண்டாம்; நானே பார்த்துக் கொள்கிறேன்; மற்ற வேலைகளைக் கவனி' என்பார். இவராவது வசூல் செய்வாரா என்றால் அதுவும் கிடையாது. வெறும் கையோடு திரும்பி, 'மறந்துட்டேன்' என்பார். அவருக்கு எங்கே ஞாபகம் இருக்கும் இதெல்லாம்? எல்லாவற்றையும் நான்தான் நினைவு வைத்துக் கொண்டு பிராணனை விடணும்.''

''வாடகைப் பணம்....?'' என்று இழுத்துப் பறித்துக் கொண்டு ஆரம்பித்தார் மாசிலாமணி.

''அதை அவரிடமே கொடுங்கள். இல்லாத போனால், 'இந்த விஷயத்தைத்தான் நானே கவனிச்சுக்கிறேன்னு சொன்னேனே நீ ஏன் கை நீட்டினே'ன்னு எங்கிட்ட பின்னால் பாய்வார். நான் போய் ஐயாவிடம் நீங்க வந்தாச்சுன்னு சொல்லிவிட்டு வரேன்.''

கணக்குப்பிள்ளை அப்பால் சென்றதும், மாசிலாமணி மனைவியைப் பார்த்து, ''இப்படியே நழுவிடுவோமே! திரும்பத் திரும்ப வாடகை வாடகைன்னு நினைவுபடுத்திக் கொல்கிறானே!'' என்றார்.

''அழகுதான்'' என்றாள் காமாட்சி. கணக்குப்பிள்ளைக்கு என்ன தெரியும்? அவருக்குக் கணக்குத்தான் முக்கியம். மனிதர்களா பிரதானம்? அவர் அப்படித்தான் பேசுவார்; அவருக்கு அதுதான் நியாயம். நம் அவரையா பார்க்க வந்தோம்? ரங்கநாத முதலியார் ரொம்ப நல்ல மாதிரி. நீங்க வேணுமானால் பாருங்கள், அவர் நம்மிடம் வாடகையைப் பற்றி வாய் திறக்க மாட்டார். அப்படியே பேசினாலும் சமாதானம் சொல்லிச் சமாளிக்கலாம்'' என்று தைரியம் கொடுத்தாள்.

இத்தருணத்தில் கண்ணாடி மணித்திரைகள் அகன்று, கலகலவென்று சப்தப்படுத்த, ''வாங்க, வாங்க!'' என்று வரவேற்றபடியே கூடத்துக்குள் நுழைந்தார் ரங்கநாத முதலியார். மரியாதைக்காக எழுந்தவர்களைப் பார்த்து, ''உட்காருங்க, உட்காருங்க! நமக்குள்ளே என்ன உபசாரம்? அட, உட்காருங்க சொல்றேன்!'' என்று வற்புறுத்தி அவர்களை அமரச் செய்துவிட்டுப் பிறகுதான் தாம் உட்கார்ந்தார்.

''கணக்குப் பிள்ளை ! கணக்குப் பிள்ளை!'' என்று அவர் அழைத்ததும், ''இதோ, வரேன் !'' என்று குரல் கொடுத்தபடியே ஓட்டமும் நடையுமாக வந்து துண்டால் வாயைப் பொத்திக் கொண்டு நின்றார் அவர்.

''எங்கேய்யா, பலகாரம்? இவங்களைச் சும்மா உட்கார வைச்சிருக்கியே?''

''இதோ வந்துகிட்டே இருக்கே. ஐயாவுக்கும் சேர்த்துக் கொண்டு வரச் சொன்னேன்'' என்றார் கணக்குப்பிள்ளை. அதே சமயத்தில் தவசிப் பிள்ளைகள் இருவர் பெரிய வெள்ளித் தட்டுக்கள், வெள்ளி டம்ளர்களைத் தூக்கிக் கொண்டு வந்தனர். அடுத்தாற்போல் புட்டு, ஜாங்கிரி, தேங்காய்ப் பாலில் மிதக்கும் ஆப்பம், இட்டிலி, பொங்கல், மிக்ஸர், இவற்றுக்குத் தொட்டுக் கொள்ளக் கொச்சு, சாம்பார், சட்னி, மிளகாய்ப் பொடி — எண்ணெய் முதலிய எல்லாவற்றையும் வெள்ளிப் பாத்திரங்களிலேயே எடுத்து வந்து பரிமாறினர். காப்பியும் வெள்ளி டபரா டம்ளர்களிலேயே வந்தது. கடைசியில் தோல் சீவி நறுக்கிய மாம்பழம், ஆப்பிள் ஆகியன கொண்டு வந்து வைத்தனர். கணக்குப்பிள்ளை பலமாக உபசாரம் செய்தார். ஆனால் மாசிலாமணி தம்பதியைப் பொறுத்த வரை அதற்கு அவசியமே இருக்கவில்லை.

''இதென்ன பெரிய விருந்துக்கே ஏற்பாடு செய்துட்டீங்க !'' என்றார் மாசிலாமணி ஏப்பத்தை அடக்க முயன்று தோல்வியுற்றவராக.


''இது என்னங்க, பிரமாதம் ? 'பலகாரம் சாப்பிட வாங்க'ன்னு உங்களைக் கூப்பிட்



டேன். பல — ஆகாரம் இருக்க வேணுமா இல்லையா? இந்த ஆப்பம் பாருங்க, இதை வெள்ளித் தட்டிலே போட்டுத் தேங்காய்ப் பால் விட்டுச் சாப்பிடலாம். ஆனால் மண் பாண்டத்திலேதான் செய்யணும். வேறு எந்தப் பாத்திரத்தில் வார்த்தாலும் சுகப்படாது. இதற்காக நான் தனியே அளவான சட்டி தயார் பண்ணச் சொல்றது. நம் வீட்டுத் தயிரும் அப்படித்தான். கட்டித் தயிரா இருந்தால் போதாது. அது சட்டித் தயிராகவும் இருக்கணும். அதிலே ஓர் அலாதி ருசி. இந்த எண்ணெய் என்ன மணமா இருக்கு பாருங்க. கடையிலே வாங்கினா கிடைக்குமா? நம்ம நிலத்திலே எள் பயிராகிறதில்லையா? கணக்குப் பிள்ளை போய்க் கிட்டத்திலிருந்து ஆட்டி எடுத்து வந்து விடுவார்....'' என்று கூறிக் கொண்டே போனார் ரங்கநாத முதலியார்.

காப்பி ஆற்றிக் கொண்டிருந்த மாலிலா மணியின் கரம் இலேசாக நடுங்கத் தொடங்கியது. செல்வச் செழிப்பு என்று அவர் கேள்விப்பட்டிருந்தார். ஆனால் இன்றுதான் நேரில் பார்க்கிறார். அடேயப்பா, என்ன பேச்சு பேசுகிறது அது! என்ன பாடுபடுத்துகிறது!

ஒருவாறு உணவருந்தி முடிந்ததும், ''வாங்களேன், வீட்டைச் சுற்றிப் பார்க்கலாம்'' என்றார் ரங்கநாதன்.



வளமான வாழ்வா? வறுமையா?

விருந்தினர் அறை, ஆபீஸ் அறை, சமையல் அறை, உக்கிராண அறை என்று கீழே பல அறைகளைக் காண்பித்துவிட்டு அவர்களை மாடிக்கு அழைத்துப் போனார் ரங்கநாதன். அங்கே பிரும்மாண்டமான கட்டில்கள் போடப்பட்டிருந்த இரண்டு படுக்கை அறைகள் இருந்தன. அவற்றுள் ஒன்றில், ஓர் ஓரமாகக் கனமான எஃகு அலமாரி ஒன்று இருந்தது. 'அதைத் திறந்து காட்டமாட்டாரா?' என்ற ஆவல் குறுகுறுப்பை அடக்கிக் கொள்ள முடியாதவளாகக் காமாட்சி அம்மாள் அதன்பால் அவர் கவனத்தை ஈர்த்துப் பேசினாள் : "நல்ல கனமான இரும்பு பீரோவாகவே வாங்கிட்டீங்க போலிருக்கு. அருமையான யோசனைதான். மர அலமாரியெல்லாம் எத்தனை நாளைக்கு உழைக்கப் போகிறது ?"

"உழைக்கிறதாவது, உளுக்கிறதாவது ? அதுவா பிரச்னை ? இரண்டு லட்ச ரூபாய் பெறுமானமுள்ள நகைகளை யாராவது மர அலமாரியில் வைச்சுப் பூட்டுவாங்களா ?" என்றார் ரங்கநாதன்.

காமாட்சிக்கு அப்போதே மூர்ச்சை போட்டுவிடும் போலாகிவிட்டது. நகைகளைப் பார்க்க முடியாமல் போய்விடுமோ என்ற கவலைதான் அவளை மயங்கிச் சாயாமல் நிற்க வைத்தது !

"இருக்கும், இருக்கும். பரம்பரையாக வந்த நகைகளுக்கு அந்த மதிப்பு இருக்காதா?" என்றாள்.

"பரம்பரை நகைகளும் இருக்கின்றன. நானே செய்ததும் உண்டு. ஏதோ கல்யாணம் செய்து கொண்ட புதுசில் ஆசையாய்ப் பண்ணிப் போட்டு அழகு பார்த்தேன். அவள் என்னடா என்றால் இத்தனை ஐசுவரியத்தையும் அனுபவிக்க ஒரு வாரிசைக் கூடக் கொடுக்காமல் போய்விட்டாள். யாராவது தூரத்துத் தாயாதிக்காரர்கள்தான் வந்து அத்தனையையும் கொண்டு போவாங்க போலிருக்கு."

"என்னத்தைச் சொல்றது போங்க. ஆண்டவன் லீலையே இப்படித்தான். ஒன்று கொடுத்தா இன்னொண்ணு தரமாட்டான். சொத்து இருந்தால் சந்ததி இல்லை. சந்ததி இருந்தால் சொத்து இல்லை !"

"நான் அப்படி நினைக்கவில்லை. பகவான் எனக்குச் சொத்தையும் கொடுத்து, சந்ததியையும் தரத்தான் உங்களைச் சென்னையிலிருந்து கிளப்பி ராமப்பட்டணத்துக்குக் கொண்டு வந்து சேர்த்தான்னு நம்பறேன்."

"நீங்க என்ன சொல்றீங்க?" என்றாள் காமாட்சி. அவளுக்கு ஆனந்தத்தில் அந்தரத்தில் மிதப்பது போல் இருந்தது. சுந்தரி கமலாவைக் கொடுத்துப் பதிலுக்கு இத்தனை சொத்துக்களை ஆண்டு அனுபவிக்கப் போகிறோமா ? அப்படி ஓர் அதிர்ஷ்டம் அடிக்கப் போகிறதா மாசிலாமணி குடும்பத்துக்கு ? விசுப் பயல் அவ்வளவு கொடுத்து வைத்தவனா ?

"இன்னும் தெளிவா நான் எப்படிப் பேசறது ? என் பெண்ஜாதி காலமாகிப் பத்து வருஷமாச்சு. அப்போ பாலியமாகத்தான் இருந்தேன். எத்தனையோ பேர் சொன்னாங்க, 'மறுபடியும் கல்யாணம் செய்து கொள்' என்று. பிடிவாதமாக மறுத்து விட்டேன். அந்த உத்தமி இருந்த இடத்திலே இன்னொருத்தியைக் கொண்டு வந்து வைக்க மாட்டேன்னு தீர்மானமா இருந்தேன்..."

"அடடா! எத்தனை தங்கமான மனசு!" என்றாள் காமாட்சி.


"ஆனால் இப்பத்தான் கொஞ்ச நாட்களாக மனசு சஞ்சலப்படுகிறது. இவ்வளவு சொத்தையும் கட்டி ஆள ஒருத்தரும் இல்லையே என்று கவலைப்படுகிறது. தர்மத்துக்கு எழுதி வைச்சுடலாம். பெரிய காரியமில்லே. இருந்தாலும் நமக்கு வேணும்கிறவங்க நாலு பேர் இருந்து, அவங்க நாம் சம்பாதிச்சதை யெல்லாம் அனுபவித்தால் அதிலே கிடைக்கிற நிம்மதி அலாதிதான்."

"இப்போகூட உங்களுக்கு அப்படி என்ன வயசாகிவிட்டது? ஐம்பது இருக்கலாம். ஆனால் நாற்பதுதான் மதிக்கத் தோன்றும். ஜாம் ஜாம் என்று கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டியதுதான் !"

"அறுபத்திரண்டு ஆகிறது. ஆனால் நீங்க சொன்ன மாதிரி நாற்பது இல்லே, முப்பத்தெட்டுன்னு மதிப்புப் போட்டவங்களும் உண்டு. அது கிடக்கக் கல்யாணம் என்ற எண்ணமே எனக்கு இதுவரையில் ஏற்பட்டதில்லை. இப்பத்தான் அதுவும் உங்க பெண் கமலாவைப் பார்த்த பிறகுதான்... மனசை விட்டுச் சொல்கிறேன்.... நீங்க தப்பா நினைக்கக் கூடாது. உங்களை நான் கட்டாயப் படுத்தவில்லை. நீங்க நன்றாக யோசித்துச் சொன்னால் போதும் !"

"ஆகட்டும் 'யோசிக்கிறோம்" என்றார் மாசிலாமணி.

"யோசிக்கிறது என்ன, யோசிக்கிறது! சற்று முன்னால் நீங்கள் சொன்னீங்களே, 'எங்களைச் சென்னையிலேயிருந்து கிளப்பி இங்கே ஆண்டவன் கொண்டு வந்து சேர்த்தான்' என்று. அது ஆயிரத்தில் ஒரு வார்த்தை. மெய்யாலுமே இது கடவுள் சித்தம்தான். இல்லாத போனால் எங்கேயோ இவர் சொந்த ஊரான கிராமத்துக்குப் போய், இவர் அண்ணாவுடன் தங்க வேண்டியவங்க இங்கே வந்து சேர்ந்திருப்போமா? சொல்லி வைத்தாற் போல் இந்த ஊர் அருகில் வரும் போது பஸ் ஏன் பழுதாக வேண்டும்? அதுதான் போகட்டும், அந்தப்



தலை கீழ் ஏலம்!

டென்மார்க் நாட்டில் ஏலக்கடைகளில் விலையை அதிகத்தில் ஆரம்பித்து அதை யாராவது வாங்கும்வரை குறைத்துக் கொண்டே வருவார்களாம்.

'வீக் எண்ட்' — கே. ஆர்.

பின்னே கல்யாணம் எங்களைப் பார்த்து விட்டு, நேரே உங்க வீட்டிலேயே கொண்டு வந்து ஏன் இறக்கினுன்? காலியாக இருக்கிற வேறு யார் வீட்டுக்காவது அழைத்துப் போயிருக்கக் கூடாதா? இதையெல்லாம் தான் தெய்வ சங்கல்பம் என்று சொல்கிறது.''

''அவசரப்பட வேண்டாம். கமலாவையும் கலந்து ஆலோசியுங்கள். கணவரையும் கேட்டுக் கொள்ளுங்கள்'' என்ருர் ரங்கநாதன். ''கமலாவின் சம்மதம் இல்லாத போனுல் பிரயோஜனமில்லே. அவளைக் கட்டாயப் படுத்த நான் ஒப்ப மாட்டேன். ஆனுல் ஒன்று மட்டும் சொல்கிறேன். எனக்கு இந்த ஊரிலே ஆறு வீடுகள் இருக்கின்றன; நாலு காணி நன்செய் நிலம், பாங்கில் ரொக்கமாக மூன்று லட்சம், அப்புறம் இந்த வீடு. இதிலுள்ள ஐசுவரியங்கள் — இவ்வளவையும் ஆள ஒரு ஒருகலட்சுமி இல்லேயே என்று எனக்கு ரொம்பக் குறை. அதையும் இப்போ சமீபத்தில்தான் உணர ஆரம்பித்திருக்கிறேன். இருந்தாலும் கமலாவின் சம்மதமில்லாமல் எதுவும் நடக்கக் கூடாது.''

''நன்ருயிருக்கிறது. இதைப் பற்றி அவளைக் கேட்கப் போவானேன்? அவள் சிறு பெண். அவளுக்கு என்ன தெரியும், பாவம்! நாம்தான் நல்லது கெட்டது எடுத்துச் சொல்ல வேண்டும். நாம் ஒரு நல்ல முடிவுக்கு வந்து விட்டால் அவளும் பேஷாகச் சரி என்கிருள். மாட்டேன் என்று சொல்லப் போகிருள்?''

''அப்படி இல்லே, அம்மா. இந்தக் காலத்திலே பெண்கள் தங்கள் உரிமைகளே உணர ஆரம்பித்திருக்கிருர்கள். அப்படியே அவர்களுக்குத் தெரியவில்லே என்ருலும் ஊரிலே இருக்கிற விடலேப் பயல்கள் — சமூக சேவை அது இது என்று நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிருர்களே அவர்கள் — கம்மா இருக்க மாட்டார்கள். ஏதாவது கிளப்பி விட்டு அவள் மனசைக் கலேத்து வேடிக்கை பார்ப்பார்கள் ... இருக்கட்டும் வந்தது வந்தீர்கள், இந்த நகைகளே ஒரு பார்வை பார்த்து விட்டுப் போங்கள். நீங்க கலே உள்ளம் கொண்டவர்கள். சிறந்த வேலேப் பாட்டை ரசிக்கக் கூடியவர்கள். அதனுல் காட்டுகிறேன். என் பெருமையை உணர்த்துவதற்காக இல்லே.''

''ஆமாமாம். சிறந்த கலே வேலேப்பாடு என்ருல் நான் உயிரையே விட்டு விடுவேன்'' என்ருள் காமாட்சி.

அவர் பீரோவைத் திறந்தபடியே, ''இந்தக் காலத்தில் பெண்களின் இஷ்டமின்றி ஒரு காரியமும் செய்வதற்கில்லே'' என்ருர்.

பீரோவுக்குள் தகதகத்த நகைகளே அகன்று விரிந்த கண்களால் பார்த்துத் திகைப்பினை மென்று விழுங்கியபடியே, ''ஏன் இஷ்டமில்லாமல் இருக்கணும்? எல்லாவற்றையும் என்னிடம் விட்டு விடுங்கள். உங்க இஷ்டம் போலவே நடத்தி விடுவோம்; உங்க இஷ்டந்தான் கமலாவின் இஷ்டமும்'' என்ருள் காமாட்சி.

ரத்தினமும் வைரமும் மாறி மாறிப் பதித்த ஓர் அட்டிகையை எடுத்து உள்ளங்கையில் வைத்து எடை பார்ப்பதுபோல் கரத்தை அசைத்த ரங்கநாதன், ''நம்ம இஷ்டத்

திரும்பிய முகம்!



முகம் திரும்பிட
அகம் குளிர்ந்தது.
உள்ளம் விரும்பிட
கள்ளம் புகுந்தது.
நயனம் தாழ்ந்திட
நாணம் படர்ந்தது.
கருத்து பிறந்திட
காதல் மலர்ந்தது!

மேலட்டை வண்ணப்படம் : உத்ரா

❊—❊—❊—❊—❊—❊—❊—❊—❊—❊—❊

திலே என்ன இருக்கு? எல்லாம் ஆண்டவன் விருப்பம் எப்படியோ அப்படி நடக்கும்'' என்ருர்.

''உங்களைப் போன்ற நல்ல இதயம் படைத்தவர்களின் இஷ்டத்துக்கு மாருக ஆண்டவனின் விருப்பம் இருக்குமா என்ன? ஒருநாளும் இராது!'' என்ருள் காமாட்சி, வியர்த்த உள்ளங்கையைப் புடைவையில் தடவியபடி.

''அடுத்த முறை நம்ம வீட்டுக்கு வரும் போது கமலாவையும் அழைத்துக் கொண்டு வாங்க. அவள் இதைப் போட்டுக் கொண்டு வரட்டும்'' என்ற ரங்கநாதன், தயாராய் நீண்ட காமாட்சியின் கரத்தில் அட்டிகையை வைத்தார்.

இரும்புப் பீரோவைப் பூட்டியானதும் சரியாகப் பூட்டியிருக்கிறதா என்று காமாட்சி ஒரு தடவை அழுத்திப் பார்த்தாள், ரங்கநாத முதலியாரின் சொத்தையெல்லாம் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தனக்கு அப்போதே வந்து விட்டது போல!

மூவரும் கீழே இறங்கிச் சென்றனர். மாசிலாமணி தம்பதி விடை பெறும் சமயம், ''வாடகை...'' என்று கணக்குப் பிள்ளே ஞாபகப்படுத்தினுர், மெலிந்த குரலில்.

''ஆமாம், மறந்தே போய் விட்டேன்! இரண்டு மாச வாடகை, இரண்டு மாச அட்வான்ஸ் ஆக, முந்நூறு ரூபாய் சீக்கிரம் அனுப்பி விடுங்கள். அதை வரவு வைக்கவில்லே யென்ருல் நம் கணக்குப் பிள்ளைக்குத் தூக்கமே வராது'' என்ருர் ரங்கநாதன்.

தலேயாட்டிப் பொம்மை போல் அசைந்து விட்டுக் கணவனும் மனைவியும் நடந்தனர்.

(தொடரும்)



விஞ்ஞானக் கதை

ஒன்பதாவது மாடியிலிருந்த தன் அலுவலகத்திலிருந்து மூன்றும் மாடிக்கு வந்த ஆத்மா தன் மனைவியைப் பார்த்து வழக்கம் போல் சிரித்துவிட்டு, வழக்கம்போல் தன் அறைக்குச் சென்றான். அங்கிருந்தே ''என்ன எழுதுகிறாய்?'' என்றான்.

அங்கிருந்தே சிலேட்டைக் காட்டினாள். நெருக்கமாக அதில் ''நித்யா நித்யா நித்யா நித்யா....''

''என்ன இது என் பெயரையே எழுதிக் கொண்டிருக்கிறாய்?''

''பொழுது போக வேண்டும். அழித்து அழித்து ஆயிரம் தடவை எழுதிவிட்டேன்.''

''புத்தகம் ஏதாவது படியேன்.''

''நூலகத்தில் இருக்கும் முப்பது புத்தகங்களையும் நான்குதடவை படித்தாகிவிட்டது.''

ஆத்மா சிரித்தான். சிரிப்பில் கொஞ்சம் அவநம்பிக்கை, கவலை... ''இன்னும் கொஞ்ச நாட்கள்தானே?'' என்றான்.

''எவ்வளவு நாள்?''

ஆத்மா இதற்குப் பதில் சொல்லாமல், ''ரவி எங்கே?'' என்றான்.

''கிழவரிடம் கதை கேட்கப் போயிருக்கிறான். உங்கள் பையனைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும்.''

''என்ன செய்தான்?''

''கவிதை எழுதுகிறான்.''

''என்னது!'' ஆத்மாவின் முகம் திடீர் என்று விகாரமாயிற்று. ''கவிதையா?''

''ஆம்!''

''காகிதத்திலா?''

''ஆம்.''

''சர்க்கார் காகிதத்திலா?''

''ஆம்.''


''யாராவது பார்த்தார்களா?''

''என்ன தெரியும்? அவன் அறையைச் சுத்தம் செய்யப் போயிருந்தேன். விளையாட்டுச் சாமான்களுக்கு இடையில் இது கிடந்தது!''

நித்யா உள்ளே வந்து அந்தக் காகிதத்தைக் கொடுத்தாள்.

சர்க்கார் காகிதம்தான். எண்ணி, கணக்குப் பார்த்து ஆத்மாவுக்கு அளிக்கப்பட்டிருந்த அரிய காகிதங்களில் ஒன்று. அதன் ஓரத்தில் சிறியதாக, தெளிவாக: 'சர்க். காகி. எண் 32637. அனுமதிக்கப்பட்ட உபயோகத்துக்கு மட்டுமே. மீறினவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.' அதன் மத்தியில் மிகப் பெரிய எழுத்துக்களில்:

சூரியனே நீ யார்?
ஆரியனோ
வேறெவனோ



யாருன்னைப்
பார்த்திருக்கார்?

இப்படி எழுதியிருந்தது. ரவியின் கையெழுத்துத்தான். ''சூரியன்.... ஆரியன்! எதுகை... கவிதைதான்.... எங்கே இந்தச் சூரியன் என்ற வார்த்தையைப் பிடித்தான்?''

''தாத்தா சொல்லியிருக்கும்! யாருக்காவது தெரிந்தால் ஏதாவது ஆகுமா ஆத்மா?''

''தண்டனை கிடைக்கும். ரேஷனைக் குறைத்து விடுவார்கள். இது என்ன மசி? தண்ணீரில் நனைத்துப் பார்க்கலாம்...''

ஆத்மா சமையல் அறைக்குச் சென்று தண்ணீரில் நனைப்பதற்கு முன் தயங்கினான். குழாய் அருகில் 'தண்ணீரைச் சேதம் செய்யாதே. உனக்கு அளிக்கப்பட்ட மாதாந்திரத் தண்ணீர் கணக்கு 200 லிட்டர்' என்று எழுதியிருந்தது. நனைத்துத்தான் ஆக வேண்டும். மாத இறுதியில் காகிதக் கணக்கு வரும்போது மாட்டிக்கொண்டு விடுவேன். மூன்று நாட்கள் குளிக்காமல் இருந்தால் போகிறது...

தண்ணீரில் அந்த வரிகள் அழிய மறுத்தன. மருந்து அலமாரியில் தேடினான். அரசாங்கம் சுகாதாரப் பிரிவு (ஒரு டாக்டர் இரண்டு நர்ஸ்) அளித்த ஆறு மாத்திரைகள், அரை பாட்டில் டானிக், ஒரே ஒரு தூக்க மாத்திரை...ம்ஹூம்!

''எலுமிச்சம் பழம் தேய்த்தால் போய் விடும்'' என்றான்.

''எலுமிச்சையைப் பார்த்து இருபது வருஷங்கள் ஆகிறது'' என்றான்.

''உன் பையனால் எத்தனை தொந்தரவு பார்! யார் என் அலமாரியைத் திறந்தது?''

''அவன்தான் என்ன செய்வான்? எத்தனை நேரம்தான் இப்படி முடங்கிக் கிடப்பான்? அவனுக்கு அலுத்து விட்டது. நீண்ட நேரம் பேசாமல் இருக்கிறான். வெற்றுப் பார்வை பார்க்கிறான். கவிதை எழுதுகிறான்...''

''உடம்பு சரியில்லையா? தொட்டுப் பார்த்தாயா?''

''உடம்புக்கு ஒன்றும் இல்லை. பத்து வயசுப் பையனை இப்படிக் கட்டிப் போட்டால்? விளையாட, திரிய, நடக்க, ஓட ஆரவாரம் செய்ய இடமில்லாத இந்தப் பள்ளத்தில் எப்படி இருப்பான்? அவனுக்கு எத்தனை ஆசை இருக்காது... எத்தனை கேள்விகள் கேட்கிறான் என்னை.... கணக்குப் பார்த்துக் கணக்குப் பார்த்து நாள் நாளாகத் தள்ளுவது எத்தனை கஷ்டம். நீங்களாவது மாடிக்கு மாடி போய் வருகிறீர்கள். நான் இந்த அறையில் உட்கார்ந்து ரவிக்கு எல்லாக் கதையும் சொல்லியாகி விட்டது. எல்லா விளையாட்டுக்களும் விளையாடியாகி விட்டது...''

''இன்னும் கொஞ்ச நாட்கள்தான் நித்யா.''

''எத்தனை நாள்? எத்தனை நாட்கள்? சொல்லுங்களேன்!''

''நான்கு வருஷமோ ஐந்து வருஷமோ! அவ்வளவுதான்! இப்போதே மேலே கதிர்களின் கரத்துக் குறைந்திருக்கிறது. அப்புறம் நம்மைக் கட்டுப்படுத்த யார்? கால் போனவரை நடக்கலாம். நதிக் கரையில் வீடு கட்டிக் கொள்ளலாம். பன்னிரண்டு குழந்தைகள் பெற்றுக் கொள்ளலாம். இன்னும் கொஞ்ச நாள்!''

''ஒவ்வொரு நாளும் ஒரு வருஷம் போல் இருக்கிறது.''

''ஷார்!'' என்று கத்திக்கொண்டு விரல் துப்பாக்கியைக் காட்டியபடி ரவி வந்தான்.



''அப்பா! நீ திரும்புவதற்குள் உன்னைச் சுட்டுவிட்டேன். நீ செத்துப்போ!'' என்றான்.

ஆத்மா 'ஹா' என்று பொய்யாக மயங்கி நாற்காலியில் சாய்ந்தான். ரவி அவன் நாடித் துடிப்பைப் பரிசோதித்தான். ரவிக்கு வெளிறிப் போயிருந்த தேகம்! எல்லாமே வெளுப்பு. வெயில் படாத வெளுப்பு. ப்ரோட்டின் குறைவினால் உடலில் ஒரு சோனித்தனம். அடுத்த வாரம் இவனுக்கு ஒரு ப்ரோட்டின் பிஸ்கட் கிடைக்கும். ஒன்றே ஒன்று.

''காகிதத்தில் எழுதக் கூடாது என்று எத்தனை தரம் சொல்லியிருக்கிறேன்....''

''சேச்சே! யார் எழுதினார்கள்? நான் உன் காகிதத்தைத் தொடவில்லை.''

''இப்போது பொய் வேறு சொல்கிறாய்.'' காகிதத்தைக் காட்டினான். ''சூரியனே! நீ யார்?''

ரவி குற்ற உணர்வுடன் கீழே பார்த்தான்.

''ஒரே ஒரு காகிதம்தானே அப்பா!''

''சிலேட்டில் எழுதக் கூடாதா? உனக்குப் பாட்டு எழுத வேண்டும் போலிருந்தால் நாடாவில் பதித்துக்கொள்ள கூடாதா?''

''பாட்டு இல்லை அது. கவிதை... நாலு வரிகள் இன்னும் மனசிலேயே இருக்கிறது.''

''கவிதை எழுதுவதற்கெல்லாம் காகிதத்தை உபயோகப்படுத்தலாமா? 'சூரியன்' என்றால் என்ன அர்த்தம்?''

''தெரியாது. சும்மா ஓசைக்காக எழுதினேன்.''

''ரவி, மொத்தமே நம்மிடம் காகிதம் கொஞ்சம்தான் இருக்கிறது. முக்கியமான அரசாங்க உபயோகத்துக்குத் தேவை. ஒவ்வொரு காகிதமும் முக்கியம்.''

''உனக்கு அந்தக் காகிதம் எதற்கு?''

''அதில் நான் முக்கியமான படம் வரைய வேண்டும். அதை ஆதாரமாகக் கொண்டு ஒரு யந்திரம் செய்யப் போகிறோம்.''

''அந்த யந்திரம் என்ன செய்யும்?''

''நம் எதிர்காலத்துக்குப் பயன்படும்.''

''எப்படி?''

''சூரிய ஒளியைப் போல் ஏமாற்றிச் சிறு தானியங்களை வளரச் செய்யப் போகிறோம். செயற்கையான போட்டோ ஸின்தஸிஸ். நீ பெரியவன் ஆனதும் புரியும்!''

''ஏன் சூரிய ஒளியிலேயே காட்டலாமே! அது மேலே நிறைய இருக்கிறதே... நீகூடச் சொன்னாயே! தகடு போல் ஜொலித்துக் கொண்டு வட்டமாக!

''மேலே நாம் சுதந்திரமாகப் போக முடியாது ரவி!''

''ஏன் அப்பா?''

''அங்கே காற்று விஷக் காற்று. அங்கே போனால் செத்துப் போய்விடுவோம்.''

''காற்று ஏன் விஷமாயிற்று?''

''நீ போ! வேறு ஏதாவது செய்!'' ஆத்மா அலுத்துக் கொண்டான். ''உனக்கு இப்போது சொன்னால் புரியாது. நீ அதற்கு இன்னும் தயாராகவில்லை மகனே!''

ஏன் விஷமாயிற்று? நம் முன்னோர்கள் செய்த பாவங்களால். அவர்கள் செய்த மெஷின்களால்! ராட்சதக் குண்டுகளால்! ஒருவருடன் ஒருவர் நேசமாக இருக்க முடியாத தேசிய அகங்காரங்களால்! எதிர்காலத்தைப் பற்றிய கவலையே இன்றி இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நேர்ந்த மகா மகா யுத்தத்தினால்... அதனால் விளைந்த தர்மோ ந்யூக்ளியர் தாண்டவத்தினால். பூமி எங்கும் மெதுவாகப் பரவிய கொல்லும் கதிர்கள் காற்றில் கலந்து... ஐரோப்பா... அரேபியா... இந்தியா.... ஆஸ்திரேலியா... என்று அந்தப் போர்வை ஒவ்வொரு தேசத்தையும் அரவணைத்துக் கொள்ள... பள்ளம் தோண்டி, கான்கிரீட் சுவர் அமைத்து சுயத்தில் உறவாடி... மறைந்து... எலிகள் போல் முயல்கள் போல்!.... கீழே! கீழே! மேலே இரவு முழுதும் நெற்கதிர்கள் ரேடியேஷனில் ஜொலிக்கின்றன. ஏக்கர் ஏக்கராக மாம்பழம்... தென்னை, பலா... சீசனுக்குச் சீசன் பூத்துப் பழுத்து முதிர்ந்து உதிர்ந்து மறுபடியும் பூத்துப் பழுத்து... ஒன்றையும் தொட முடியாது... ரேடியேஷன்!

''அப்பா...'' என்று அங்கிருந்தே கூப்பிட்டான் ரவி.

''என்ன?''

''இன்னொரு காகிதத்திலும் கவிதை எழுதியிருக்கிறேன்.''

''என்னடா இது! நித்யா எங்கே அந்தக் காகிதம்?'' இப்போது நிஜமாகவே கோபம் வந்தது ஆத்மாவுக்கு.

ஆத்மாவும் நித்யாவும் வீடு முழுதும் அந்த மற்றொரு காகிதத்தைத் தேடினார்கள். கிடைக்கவில்லை.

•

ஆத்மா தன் சப்லை ஆபீசுக்குச் சென்றபோது ''பெரியவர் கூப்பிடுகிறார்'' என்ற செய்தி அவன் மேஜையின் மேல் இருந்தது.

பெரியவரின் அறை வாசலில் அந்தப் பெண் சிரித்தாள். வெளிறிப் போயிருந்த உதடுகள். கல்யாணத்துக்கு இருக்கிறாள்.. கட்டிடத்திலேயே அவளைச் சமாளிப்பதற்கு ஆள் இல்லை. பயப்படுகிறார்கள்.... எனினும் எனினும் ஒரு பெண்! ஒரு பிரஜாவிருத்தி இயந்திரம். மிகத் தேவையான இயந்திரம்! பெண்ணே உனக்குத் தெரியுமா? தெரிந்தால் சிரிப்பாயா?

''கொஞ்சம் இருங்கள். டைரக்டர் உள்ளே போயிருக்கிறார்.''

எதிரே சுவர் முழுதும் கரும் பலகைகளில், புள்ளி விவரங்கள் வியாபித்தன. மொத்தம் 350 பேர். சுத்தமான தானியஇருப்பு விவரம், செத்தவர் விவரம், இருப்பவர் விவரம் எதிர்பார்த்த பிறப்புக்கள்.. ஓர் ஆளுக்கு ஒரு நாளைக்கு 200 கிராம் அரிசி, 5 கிராம் பருப்பு.... இரண்டு தேக்கரண்டி பவுடர் பால்! இந்த ரீதியில் எத்தனை தினம் தாங்கும்? தினமா? பகலில்லை இரவில்லை. விளக்கிருந்தால் பகல், விளக்கணைத்தால் இரவு. மூன்று வருஷம், நான்கு வருஷம்! அதற்குள் கண்டுபிடித்தாக வேண்டும் செயற்கை முறை! செயற்கைத் தானியம், செயற்கைச் சூரியன். அல்ட்ரா வயலெட் கொஞ்சம்; இன்ஃப்ரா ரெட் கொஞ்சம்; வண்ணங்கள் அத்தனையும் கலந்த வெண்மை கொஞ்சம்...


சூரியனே நீ யார்?

''ஆத்மா உள்ளே வா!'' என்றார் பெரியவர். பெரியவரின் அறையில் உலகப் படத்தில் அத்தனை கண்டங்களிலும் சிவப்புப் பூசியிருந்தது. அங்கங்கே வட்டங்கள்! மனி

அமுல் — உங்கள் பால்காரர்




அமுல் — உங்கள் தேநீர்க்காரர்




¼ லிட்டர் டம்ளரில் 2½ டேபிள்ஸ்பூன் அமுல் மில்க் பவுடரை நன்கு குவியச் செய்து போடவும். சிறிதளவு சுடுநீருடன் கலந்து நன்கு கலக்கிப் பசைபோல் ஆக்கிக்கொள்ளவும். பின் அதன் மேல் வரை சுடு நீரை மேலும் சேர்த்து நன்கு கலக்கவும். உங்கள் குழந்தைக்கான க்ளாஸ் அளவு பால் தயார்! (முழுமையான விவரங்களுக்கு டின் மீது பார்க்கவும்.) அமுல் மில்க் பவுடர் தேயிலை பானத்திற்கும் காப்பிக்கும் கூட மிக ஏற்றதாகும்.

அமுல் — உங்கள் தயிர்க்காரர்



கறந்த பாலிற்குச் செய்வது போலவே, மேற்கண்ட முறைப்படி பாலைச்செய்து, சாதாரணமாகச் செய்வது போலத் தயிராகத் தோய்க்கவும்.



அமுல்


மில்க் பவுடர்

வீட்டினுள் இயங்கும்
ஒரு பால் பண்ணை

விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோவாப்பரேட்டிவ்
மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன்
லிமிடெட், ஆனந்த்

RADEUS/AMP-1

வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் உடம்புக்குத் தேவை கால்ஷியம்-ஸாண்டோஸ்®



கர்ப்பத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே குழந்தையின் பற்களிலும் எலும்புகளிலும் அமையத் தொடங்குகிறது கால்ஷியம். கருவிலுள்ள குழந்தைக்கு அதிகப்படி கால்ஷியம் அவசரமாகத் தேவை. எனவே, வழக்கத்தைவிட இருமடங்கு தேவைப்படும் உங்களுக்கு முன்னதாகவே சாப்பிடத் துவங்குவீர் கால்ஷியம்-ஸாண்டோஸ்.



பாப்பாவின் பற்களுக்கும் எலும்புகளுக்கும் கால்ஷியம் வழங்குவது பாலூட்டும் தாயன்றி வேறில்லை. அவளுக்கு வழக்கத்தைவிட மும்மடங்கு கால்ஷியம் தேவை.

வளரும் குழந்தைக்கு வலுவான எலும்புகளும் நலமுள்ள பற்களும் அமைய இன்றியமையாதது கால்ஷியம். எனவே, பெரியோரைவிட குழந்தைக்கு அதிகக் கால்ஷியம் தேவைப்படும்.





ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு வயதிலும், மனித உடம்புக்கு அத்யாவசியம் கால்ஷியம். மிகச் சிறந்த வடிவிலுள்ள கால்ஷியம்: கால்ஷியம்-ஸாண்டோஸ். ராஸ்ப்பெர்ரி சுவையூட்டிய இனிமையான கால்ஷியம்-ஸாண்டோஸ், நாள் ஒன்றுக்கு 2 அல்லது 3 வில்லைகள் போதும், உங்கள் கால்ஷியம் தேவையை நிறைவுசெய்யும், வைட்டமின் C, D, B 12 சத்துக்களோடு.

நம்பிக்கைக்குரியோர் ஸாண்டோஸ்-கால்ஷியம் துறையிலே உலக முன்னோடிகள்.

SANDOZ

கால்ஷியம்-ஸாண்டோஸ்®
வில்லைகள் தினமும் தேவை எவருக்கும்

dCA/CS/15 I TAM

தர்கள்! சில நூறு அல்லது ஆயிரம் பேர் பூமிக்குள் பதுங்கி யிருக்கும் வட்டங்கள்! அவர்களுடன் ரேடியோத் தொடர்பு இருக்கிறது. மடகாஸ்கரில் ஒரு வட்டம், அரிஸோனாவில் ஒன்று, ஐஸ்லந்தில் ஒன்று...இந்தியாவில் ஒன்றே ஒன்று! எங்கள் வட்டம்! மின் நிலையத்துக்கு அடியில்!

''ஆத்மா! உட்கார். நீ கொடுத்த திட்டக் காகிதங்களைப் பார்த்தேன்.''

ஆத்மா எதிர்பார்த்தான்.

''இன்னும் எத்தனை மாதங்கள் ஆகும் முதல் மாடல் தயாரிக்க?''

''இரண்டு வருஷம்!''

''இரண்டு வருஷம்! ம்ஹூம்! மிக அதிகம்.''

''தேவையான சாதனங்கள் நம்மிடம் இல்லையே!''

''என்ன வேண்டும்?''

''ஸ்பெக்ட்ராஸ்கோப் இல்லாமல் வேலை நடக்காது. ஸ்பெக்ட்ராஸ்கோப் மேலே இருக்கிறது. அருகிலேயே ஐந்து மைலில் ஒரு கட்டிடத்தில் ஓர் அறையில் இருக்கிறது!''

''அதை உடை அணிந்து கொண்டு எடுத்து வர முடியுமா? ஆபத்தான விஷயம். நீ தயாரித்த உடை ஐந்து நிமிஷத்துக்கு மேல் தாங்குவதில்லை. 'கெய்கர்' அலறுகிறது. ஐந்து நிமிஷத்தில் பத்து மைலா! முடியாது.''

''இன்னும் அதிக நேரம் தாங்கக் கூடிய உடை தயாரிக்க முயற்சி செய்ய வேண்டும்.''

''பொருள்! பொருள் எங்கே இருக்கிறது? எனக்கு என்னமோ இது விரயமான முயற்சியாகத் தோன்றுகிறது.''

''எது, உடை தயாரிப்பதா?''

''ஆம்!''

''வேறு வழி ஒன்றும் புலப்படவில்லை.''

''புலப்பட்டுத்தான் ஆக வேண்டும்.''

பெரியவருக்கு அறுபது வயதிருக்கும். இவரைச் செலுத்துவது எந்த நம்பிக்கை....? ப்ராஜக்ட் சர்வைவல்! தொடர்ந்து உயிர் வாழ ஒரு திட்டம். இவர் வாழ்நாளிலா?

பெரியவர் பெருமூச்சுடன், ''கயவாளிப் பயல்கள், எல்லாவற்றையும் வெடித்துவிட்டுச் செத்து ஒழிந்தனர். எவனோ சண்டை போட்டுவிட, நாம் எலி மாதிரி வாழ்கிறோம். ரேட்கௌண்டர் அலறுகிறது'' என்றார்.

ஆத்மா எழுந்திருந்ததும், ''மற்றொரு விஷயம்'' என்றார்.

''காகிதங்களை எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்று உனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.''

''ஏன்?''

''உன் இயந்திரப் படங்களின் நடுவே இதுவும் கிடைத்தது!''

ரவியின் மற்றொரு கவிதை!

''மன்னிக்க வேண்டும். இது என் மகனின் விஷமம்.''

''உன் மகனுக்குச் சூரியனைப் பற்றி நிறையச் சொல்லி யிருக்கிறாய்! கவிதை எழுதுகிற ஆசாமிகள் நமக்கு வேண்டாம்! நமக்குத் தேவையானவர்கள் வெறும் ஆண்கள்!. அவனை டாக்டரிடம் காட்டு! இது உதவாத சரக்கு. கவிதை யெல்லாம் பிழைத்து எழுந்ததும் எழுதலாம்! நம் காகிதங்கள் இயந்திர பாஷை பேசட்டும். உன் மகனைக் கொஞ்சம் அதட்டி வை. எத்தனை வயசு?''

''பத்து முடிந்து விட்டது.''

''கவனிக்க வேண்டிய வயசு! இந்தத் தடவை தண்டனை வேண்டாம். அடுத்த தடவை இது நிகழக் கூடாது! போ.''

கதவருகில் மறுபடியும் கூப்பிட்டார்.

''ஒன்று செய். உன் மகனுக்குச் சூரியனைப் பார்க்க ஆவல் இருக்கிறது எனத் தோன்றுகிறது. ஒரு தடவை மின் நிலையத்தில் பழுது பார்க்க மேலே செல்லும்போது அவனையும் இழுத்துச் செல். ஜன்னல் வழியாக ஒரு தடவை காட்டிவிடு. அப்புறம் கவிதை எழுத மாட்டான். மனைவியையும் அழைத்துப் போ!''

''சரி, வந்தனம்'' என்றான்.


ரவி குதூகலத்தில் இருந்தான். மிகச் சீக்கிரமாகவே எழுந்து ஆத்மாவையும் நித்யாவையும் சீண்டிக் கொண்டே இருந்தான்.

''மகனே! இன்னும் மூன்று மணி நேரம் இருக்கிறது.... மேலே இன்னும் சூரியன் வந்திருக்காது...''

''அப்புறம் லிஃப்ட்டில் இடம் கிடைக்காது அப்பா. சீக்கிரம் போய் நின்றுகொள்ளலாம்''

சுஜாதாவின் கதைகள்

கல்லூரி மாணவருக்கு ஒரு போட்டி



சுஜாதாவின் விஞ்ஞானச் சிறுகதைகளைக் கல்கியில் ஒன்று விடாமல் படித்து வாருங்கள். அதன்பின் அக்கதைகள் குறித்து உங்கள் மனத்தில் உருவாகும் உணர்ச்சிகளைக் கொட்டி ஒரு கட்டுரை எழுதுங்கள். திறனாய்வுக் கட்டுரையாக இருந்தால் சரி, ஆனால் திறனாய்வுக்கட்டுரையாகத்தான் இருக்க வேண்டும் என்பதும் இல்லை. சுஜாதாவின் விஞ்ஞானக் கதைகள் உங்கள் உள்ளங்களில் என்ன பாதிப்புக்களை ஏற்படுத்தின, எழுச்சிகளைத் தோற்றுவித்தன, உணர்ச்சிகளைத் தூண்டின என்பனவற்றைத் தொகுத்து அழகிய கட்டுரை வடிவம் தந்தால் போதும். கூடிய வரையில் சுருக்கமாக எழுத முயலுங்கள். பிரசுரமாகும் கட்டுரை ஒவ்வொன்றுக்கும் ரூபாய் இருபது முதல் இருபத்தைந்து வரை பெறுமானமுள்ள, எழுதியவருக்குப் பிடித்தமான நூல்களைப் பரிசாக வழங்குகிறோம்.

"பயப்படாதே. நமக்காகக் காத்திருப்பார்கள். இன்னும் கொஞ்ச நேரம் தூங்கு!"

"தடுப்பு உடை அணிந்திருக்கிறீர்களா?" என்று லிஃப்டில் எழுதியிருந்தது. மெதுவாக அது மேலே செல்லச் செல்ல ரவி தன்னை முழுவதும் மூடிய வெண்மையான உடையில் குதித்தான். கண்களுக்கான சிறிய கண்ணாடி ஜன்னலின் ஊடே அவன் கரிய விழிகள் ஜொலித்தன.

"ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் ரவி. சொன்ன பேச்சை மீறக் கூடாது."

"சரி அம்மா!"

பலத்த கதவைத் திறந்து வெளியேறி அதை மூடித் திருகிவிட்டு ஆர்க் வெளிச்சம் பரவிய அந்த இரும்புக் குகையில் நடந்து மற்றொரு கதவைத் திறக்கு முன்...

"ரவி, நித்யா! கதவு திறந்ததும் தூரத்தில் ஒரு கதவு தெரியும். சிவப்புக் கதவு. அதை நோக்கி ஓடவேண்டும். ஒரே ஒரு நிமிஷம்தான் ஆகும். என் கூடவே என் கையைப் பிடித்துக் கொண்டு ஓடவேண்டும். இடது பக்கம், வலது பக்கம் பார்க்கக் கூடாது."

கதவு திறந்தது. அதிகாலை. மரங்கள், இலை அசைவுகள், காற்றில் நடனங்கள். பூக்கள்... வர்ணங்கள்... விநோத விநோத வர்ணங்கள்.... எல்லாமே இளம் இருட்டில் ஜொலித்தன. அவர்கள் ஓடினார்கள். ரவி கும்மாளமாகச் சிரித்தான். 'நான் உன்னைவிட வேகமாக ஓடுவேன்' என்று ஆத்மாவை இழுத்துக்கொண்டு ஓடினான். எதிர்க் கதவை ஒரு நிமிடத்தில் அடைந்து அதன் வாயிலில் இருந்த பட்டனை அழுத்த அது திறந்து கொண்டு மெலிதாக இடம் விட்டு மற்றொரு ராட்சதக் கதவைக் காட்டியது. அது திறந்து அதனுள் 'ம்ம்ம்' என்று மின் இயந்திரங்களின் ஒலி கேட்டது. கீழே இருப்பவர்களுக்கு வாழ்வளிக்கும் ஒரே ஒரு அணு சக்தி மின் நிலையம்.

"சூரியன் எங்கே அப்பா?"

"இரு, காட்டுகிறேன்."

ஆத்மா ஷிஃப்டில் இருந்தவர்களுடன் பேசினான். இயந்திரம் ஆரோக்கியமாக ஓடிக் கொண்டிருக்கிறது. யுரேனியம் இருப்பு பல வருஷங்களுக்குப் போதுமானது....

ரவி அகலக் கண்களுடன் காத்திருந்தான். மெதுவாக ஆத்மா இரும்புப் படிகள் ஏறி அந்த அறைக்கு அவர்களை அழைத்துச் சென்று உள்ளே இருக்கும் கெய்கரைச் சரி பார்த்துக் கொண்டான். அந்தப் பட்டனை அழுத்த மெதுவாக அந்தச் சுவரின் பகுதி நகர, எட்டடிக்கு எட்டடி ஒரு கண்ணாடி ஜன்னல்... சாயம் கலந்த கண்ணாடி. கெய்கர் டிக் டிக் டிக் டிக் என்று சப்தமிட்டது. உள்ளே ரேடியேஷனின் அளவு அபாய அளவுக்கு அதிகமாவதற்குள் கதவு தானாக மூடிக் கொண்டுவிடும்.... ஆத்மா அமைத்த மிஷின்.

"சீக்கிரம் பார்!" என்றான்.

ரவி உயர உயரக் குதித்தான். நித்யா ஆத்மாவின் கையை இறுகப் பற்றிக்கொண்டாள். எதிரே வானம் – கடல் – கடற்கரை...

அழகான கருநீல வானத்தில் தொடங்கி அது மெல்ல மெல்ல அடிவானத்தில் ஆரஞ்சு நிறமாகியது. கடலலைகளைத் தங்கம் தொட்டது. அமோக ஒளி வெள்ளமாக நடுங்கும் பொன்னிறத்தில் சூரியன் மெதுவாக எழுந்து கொண்டிருந்தான்!


மற்றொரு நாள்! மற்றொரு தினம்... ரவி தன் மகனுக்கு இதே காட்சியைக் காட்டப் போகிறான்....

'கடவுளே! என்ன அழகாக இருக்கிறது! எப்பொழுது நாங்கள் வெளியேறப் போகிறோம்? இன்னும் கொஞ்ச நாட்கள்தான் என்ற பொய்யை எத்தனை நாட்கள் புகட்டப் போகிறோம்!

'பூமிக்கு அடியே இருக்கிற தானியத்தைப் பகிர்ந்துகொண்டு, இருக்கிற நம்பிக்கைகளைப் பகிர்ந்து கொண்டு, மெலிதாக வம்ச விருத்தி பண்ணிக் கொண்டு, தினம் தினமாக, தினம் தினமாக, தலைமுறை தலைமுறையாக.... எப்படி நூற்று எழுபது வருஷங்களைக் கழிக்கப் போகிறோம்!' என்று எண்ணினான் ஆத்மா.

கதவு தானாக மூடிக் கொண்டது.

செட்டியப்பர் – படியளந்தநாயகி திருப்பணி



கொடிய பஞ்சம் ஏற்பட்ட காலத்தில், திருஞான சம்பந்தருக்கும், திருநாவுக்கரசு ஸ்வாமிகளுக்கும் படிக் காசு வழங்கியதாகத் திருவீழிமிழலை வரலாறு கூறும்.

அப்பொற் காசுகளைக் கொண்டு அன்னம் பாலிக்கத் தேவாரம் பாடிய இருவரும் முனைந்திருக்கின்றனர். அந்தக் காலத்தில் திருவீழிமிழலையின் கடைவீதி கிழக்கே ஐந்து மைல் தொலைவில் உள்ள ஐயன்பேட்டை வரை நீண்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

ஐயன்பேட்டை கிராமத்தில் மீனாட்சியுடனுறை ஸ்ரீ சுந்தரேசுவரர் மூலவராகவும் செட்டியப்பருடன் படியளந்த நாயகி உற்சவமூர்த்தியாகவும் காட்சி தருகிறார்கள். செட்டியப்பர் கையில் தராசு ஏந்தி அமர்ந்திருக்க, படியளந்த நாயகி படியுடன் நிற்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சி.

பழைய ஆலயம் ஆலம் விழுது இறங்கி மிகவும் சிதிலமடைந்து போயிருக்கிறது. ஜீர்ணோத்தாரணப் பணி மேற்கொள்ளப்பட்டு நடந்து வருகிறது. பணி சிறப்புடன் நடைபெற அன்பர்கள் தாராளமாகப் பொருளுதவி செய்ய வேண்டிய முகவரி : ஸ்ரீ ஆர். நாகராஜ ஐயர், கர்ணம், அய்யன்பேட்டை, மாணத்தகுடி போஸ்ட், பூந்தோட்டம் வழி, தஞ்சை மாவட்டம்.

சேரமான் காதலி

கண்ணதாசன்

அத்தியாயம் 17

கல்லிலும் ஈரம்

கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தாள் கல்யாணி.

அவளோடு நாராயண நம்பூதிரி, ரவிவர்மன், பத்மாவதி, தாவளி சகோதரிகள் அனைவரும் நுழைந்தார்கள்.

மெல்லிளங் கோதைக்குக் கல்யாணியைப் பார்த்ததும் வேறு யாரையும் பார்க்கத் தோன்றவில்லை.

எனினும் பத்மாவதி அவள் அருகில் வந்து நின்று கொண்டாள்.

ஸ்ரீ வல்லபருக்கு ரவிவர்மனைப் பார்த்ததும் வேறு யாரையும் பார்க்கத் தோன்றவில்லை.

மார்த்தாண்டவர்மனுக்கு, நாராயண நம்பூதிரியைப் பார்த்ததும் யாரையும் பார்க்கத் தோன்றவில்லை.

குலசேகர ஆழ்வாருக்கோ எல்லோரையும் பார்க்கத் தோன்றிற்று.

ஒவ்வொருவராக மாறி மாறிப் பார்த்தார்.

பத்மாவதி தன்னை அறியாமல், ''அப்பா!'' என்று கூவி விம்மி விம்மி அழுதாள்.

தாவளி சகோதரிகள் அழுதார்கள்.

ரவிவர்மன் சிலை போல் நின்றான்.

நாராயண நம்பூதிரி அவர் முகத்தையே பார்த்தபடி நின்றார்.

கல்யாணி சுற்றுமுற்றும் பார்த்தாள்.

அவள் மிகவும் அமைதியுற்றிருந்தாள் இப்போது. ஆவேசம் எங்கே போயிற்று?


ஏதோ சித்தப் பிரமையில் இருந்து மீண்டவள் போல, ''நான் எங்கே வந்திருக்கிறேன்?'' என்று கேட்டாள்.

இப்போதுதான் அவள் முகத்தைப் பிரக்ஞையோடு பார்த்தார் குலசேகர ஆழ்வார்.

அதிர்ச்சியோடு, எழுந்து உட்கார முயன்றார்.

நாராயண நம்பூதிரி அவர் தோளைத் தொட்டு மறுபடியும் படுக்க வைத்தார்.

ஆழ்வார் கல்யாணியைப் பார்த்து, ''அம்மா! தாயே, அன்று நான் காட்டு வழியில் பாடி இறங்கியபோது எனக்குத் திருவமுது ஊட்டிய சீதேவி நீதானே? இதே விடுதியில் எனக்கு ஆறுதல் சொன்ன தேவதை



நீதானே ? உண்மையைச் சொல். நீ ஏன் தலைவிரிகோலமாய் வந்திருக்கிறாய்?'' என்றார்.

கல்யாணி ஒன்றும் புரியாமல் தலை குனிந்தபடி நின்றாள்.

''தெய்வம் மானுஷ ரூபேண'' என்றார் திருவேங்கடத்தான் ஸ்ரீவல்லபர்.

''அதையே சொல்ல நினைத்தேன்'' என்றார் நாராயண நம்பூதிரி.

ஆனால், இது ஆழ்வாரின் நினைவிழந்த நிலையில் மற்றும் ஒரு கட்டம் என்றே எண்ணினார்கள் மற்றவர்கள்.

அவருக்கு விளக்கம் சொல்லக்கூடிய நிலையில் யாரும் இல்லை.

வெளியிலே கூட்ட நெரிசல் தாள முடியாத அளவுக்கு அதிகமாகி, ''ராமா ! கிருஷ்ணா !'' என்ற குரல் ஓங்கி எழுந்து கொண்டிருந்தது.

ஆழ்வார் இடது புறம் திரும்பி, ராணியைப் பார்த்து, ''ராணி! நீ என்னை அழைத்து வரத் தாமதிக்கிறாய் என்று அரங்கநாயகி நேரிலே வந்திருக்கிறாள் பார்த்தாயா?'' என்றார்.

''கோசலையின் மருமகளாகவும், தாமரையில் திருமகளாகவும் கொலுவிருக்கும் என் அன்னை, பாசம் தாங்காமல் ஓடி வந்திருக்கிறாள்.

''பிள்ளைப் பாசத்தை மறக்க முடியாதவன் நான். என் மீது கொண்ட பிள்ளைப் பாசத்தை மறக்க முடியாதவள் என் அன்னை. சங்கிலித் தொடர் எப்படி நீளுகிறது பார்த்தாயா ?''

என்று கேட்டுவிட்டு, கல்யாணியின் பக்கம் திரும்பி, ''இப்போது உன் பெயர் என்னம்மா ?'' என்றார்.

கல்யாணி அடக்கத்தோடு, ''எப்போதும் என் பெயர் கல்யாணி தான்'' என்றாள்.

''கல்யாணி ! சர்வ சக்தி வாய்ந்த என் மாதாவுக்கு எந்த வடிவத்திலும் இந்தப் பெயர் பொருந்தும். அவள் சீதாவாயினும் கல்யாணியே ! திருமகளாயினும் கல்யாணியே! குலமகள் வடிவில் தோன்றும்போதெல்லாம் சியாமள ரூபத்தில் திகழும் என் அன்னை கல்யாணி என்று பெயர் பெறுகிறாள்'' என்றார் ஆழ்வார்.

''பெருமானே, இவள் அரங்கநாயகியின் ஆதர்ஸம். இதுவரையில் இவள் செய்த காரியங்களை இவள் செய்யவில்லை. இங்கே வந்து சேர்ந்த பிறகுதான் அரங்கநாயகி இவள் உடம்பிலிருந்து வெளியேறினாள். உங்களால் மட்டுமே என்னைப் பார்க்க முடிகிறது. என்னால் மட்டுமே அவனைப் பார்க்க முடிந்தது'' என்றாள் ராணி.

கல்யாணிக்கும், மற்றவர்களுக்கும், யாரும் இல்லாத இடதுபுறத்தில் திரும்பி அவர் பேசுவது வியப்பாகவே இருந்தது. இது நினைவிழந்த நிலைதான் என்றுஅவர்களும்கருதத்தலைப்பட்டனர்.

இவ்வளவுக்கும் நடுவே ஒரு சடலம் நிற்பது போல் நின்று கொண்டிருந்



தான் ரவிவர்மன். அரங்கத்தில் ஆழ்வார் சொன்னது போல், மரணம் வெல்ல முடியாதது தான். ஆனால் மரணத்துக்கு நேரம் குறித்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் கொடுமைக்கு ஈடு வேறு எதுவும் இல்லை.

ஆழ்வாரைச் சுற்றி நின்ற ஒவ்வொருவரின் இதயத்திலும் கேள்விக் குறிகள் நிறைய விழுந்திருந்தன. அனைத்துக்கும் பதில் சொல்ல வேண்டியவர் ஆழ்வார் ஒருவரே.

ஆனால் அந்தக் கட்டத்தை ஆழ்வார் தாண்டி விட்டார்.

கேள்விகளில் சிக்குண்டவர்கள் அதற்குள்ளேயே தடுமாறிக் கொண்டிருந்தார்கள்.

அந்த இடத்தில் பசுவும், புலியும் ஒரே துறையில் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தன.

தாள முடியாத வெய்யில்.

வறண்டு போய் வெடித்துக் கிடக்கும் ஓர் ஏரி.

அதில் வெப்பம் தாளாது படம் எடுத்து நின்றது ஒரு நாகம்.

எங்கும் நிழல் கிடைக்காமல் தத்தித் தத்தி வந்தது ஒரு தேரை.

கடைசியாக அந்தத் தேரைக்கு ஒரு நிழல் கிடைத்தது.

அது அந்த நாக படத்தின் நிழல்.

நாகத்தைத் தேரை பார்க்கவில்லை; தேரையை நாகம் பார்க்கவில்லை.

இது, காளிதாஸனின் வருணனை.

இந்த நிலைதான் ஆழ்வாரைச் சுற்றிலும் நிலவியது.

மாபெரிய மரணம் ஒன்று நிகழப் போகிறது என்ற வெப்பம் தாங்காது, ரவிவர்மன் என்னும் பாம்பு படம் எடுத்தும் அசையாது நின்றது.

அதன் அருகிலே மார்த்தாண்டவர்மன் என்னும் தேரை உட்கார்ந்திருந்தது! ஆனால் பதவி வெறி ஒன்றைத் தவிர, பிற வகைகளில் ரவிவர்மன் ஒரு மனிதனாகவே இருந்தான்.

மன்னர்பிரான் மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கிறார் என்ற நிலையில், மனித மனத்தின் சலனங்களால் அவன் மெழுகு போல் உருகினான்.

இப்போது அவன் அழுதால் அதை யாரும் நம்பமாட்டார்கள்.

துன்பம் அளவுக்கு அதிகமாகிவிட்டால் கண்ணீரும் வியர்வையாகிவிடுகிறது. வியர்க்க விறுவிறுக்க அவன் நின்றிருந்தான்.


நாராயண நம்பூதிரி ஆழ்வாரிடம் எவ்வளவோ கேட்க நினைத்தார்.

ஆனால் அவரும் கருதியபடி ஆழ்வாரின் நிலை, நினைவிழந்த நிலையல்லவா!

அங்கே ஒரே மௌனம்.

வெளியே ஒரே கூச்சல்.

''பிரபு! குறித்த நேரம் வந்து விட்டது. புறப்படுவோம்'' என்றாள் ராணி.



புறப்படலாமா என்ற கேள்வி இப்போது இல்லை, புறப்படுவோம் என்ற வாக்கே வேத வாக்காகிவிட்டது.

வைகுந்த வாசலில் மேள தாள ஒலி கேட்டது.

கச்சணிந்த இள மாதர்கள் மலர் தூவுவது அவர் கண்ணுக்குத் தெரிந்தது.

திருவரங்கத்தில் பள்ளி கொண்ட அரங்கன் நின்ற கோலத்தில் அவரை வரவேற்பது போல் அவருக்குத் தோன்றிற்று.

ஆழ்வாரின் கண்கள் விசாலமாகத் திறந்தன. சுற்றுமுற்றும் பார்த்தன.

மண்ணுலகை அவர் மறக்கத் தொடங்கிய நிலையிலும், அவர் கரங்கள் தாமாகவே மெதுவாக எழுந்தன.

வலது கை நாராயண நம்பூதிரியின் கையைப் பிடித்தது.

இடது கை மார்த்தாண்டவர்மன் கரத்தைப் பற்றியது.

அந்த இரண்டு கைகளையும் இந்த இரண்டு கரங்கள் இணைத்தன.

''அரங்கா!'' என்ற குரல் சனஸ்வரத்தில் வெளிவந்தது.

அந்தச் சொல்லைக் கூறிய வாய் கடைசியாக அரங்கன் திருவமுது ஊட்டுவதற்குத் திறந்தது போல், திறந்தபடியே நின்றது.

நீண்ட தூரப் பயணத்தின் காலடிச் சுவடுகளை முடித்துக் கொண்டு இமைகள் மூடின.

''அப்பா!'' என்று அலறினன் மார்த்தாண்டவர்மன்.

அனைவரும் 'ஓ'வென்று கதறி அழுதார்கள்.

அழுகையைக் கடந்த நம்பூதிரியின் கண்களிலும், ஸ்ரீவல்லபரின் கண்களிலும் கூடக் கண்ணீர் வெளிவந்தது.

ரவிவர்மன் வாய்விட்டு அழவில்லை. காரணம், பழைய காரணம்தான்.

அவன் அழுதால் யாரும் நம்பமாட்டார்கள்.

உள்ளே இருந்து வெளியே ஒருவன் ஓடி வந்து, ''ஸ்ரீ குலசேகர ஆழ்வார் வைகுந்த பதவி அடைந்தார்'' என்று ஓங்கிக் கூவினன்.

கூட்டம் முழுவதிலும் விக்கலும், விம்மலும் எழுந்தன.

சோழ நாட்டு வானத்தில் அவர் ஆவி பறந்தபோது, சேர நாட்டு வானத்தில் ஒரு பெரிய கேள்விக்குறி விழுந்தது.

(தொடரும்)

படத்தின் பெயர் மாத்திரம் அல்ல; திரைக் கதையும் மறைந்துபோன பண்டைக்கால ஜமீன்தார் கதைதான். ஆறிப்போன காப்பி.

சிவகுமாருக்கு இரட்டை வேடம் ஏற்க சான்ஸ் கிடைக்கிறது. அதை நன்கு பயன்படுத்திக்கொள்ளப் பாவம், அவர் பெ... முயற்சி செய்திருக்கிறார்.

அவருடன் காதலியாக ந... என்ற ஹிந்தி நடிகை அ... இருக்கிறார். இவரைப் போய் எங்கேயிருந்து பிடித்து வந்தார்கள்? நடிப்பும் ரொம்ப ரொம்பச் செயற்கை. இரவல் குரல் வேறு.

பழகிப்போன வில்லனை ஸ்ரீகாந்தையே பதம் பார்த்து விட்டது திரைக் கதை என்றால் மனோரமா, தேங்காய், பிரமீளா ஆகியோர் ...டும் பாட்டை விவரிக்க வேண்டுமா?

இவ்வண்ணப் படத்தில பார்த்து ரசிக்க...து வெளிப்புறப் படப்பிடிப்புத்தான். ...ராஷ்டிர மாநிலத்தில், இதுவரையிலும் ... தமிழ்ப் படாதிபதியும் பிடித்துப் ... இயற்கைக் காட்சிகளை இப்படத்... முடிகிறது.

...காட்சியும், எந்தப் பாட்டும், ...ாமல் போய்விடும் அதிசயப் ...பெயர் ''மதன மாளிகை!''

—காந்தன்



We still make Margo Soap in small batches with pure Neem Seed Oil the way we made it in the 1920's

We're not the giant soap manufacturer who produce millions of cakes on a continuous assembly line with ingredients poured in through one end and the finished product out the other. We can't make Margo soap that way.

Margo soap is produced only from pure Neem seed oil (I.S.I. standard) and other oils but without the addition of any synthetic detergent. We believe that synthetic detergents which produce extra-rich lather rob the skin of natural oils making it rough and dry.

The selection and procurement of Neem oil for Margo soap are not easy. We use only standard Neem seed oil for its better medicinal value and germicidal properties and not the easily available neem fruit oil. Naturally it costs more. But we cannot think of Margo soap without Neem oil. The fungicidal and germicidal properties of Neem made the Neem tree known as the "Village doctor"

To retain these properties the processing of Margo Soap become more laborious and complicated. Neem seed oil has to be refined and deodorised first by our special process and then the soap is 'cooked' in small batches for 10 days before being ready. It takes more time and money to make soap our way —That's why it costs more, better quality always does.

We can make soap the other way but we believe in the traditional theory of "Matured cooking" and quality. Result—Margo is still as popular as it was in the twenties. Margo the non-medicated soap with all the natural medicinal properties of Neem oil.

Think as to why you use Margo ? Isn't it for it's hygienic value and superior quality which keeps your skin, soft and smooth more than any other variety you can buy ?
No other soap can claim what we claim.

Margo Soap

the hygienic soap for all seasons, all ages


a product of CALCUTTA CHEMICAL

IDL/MG/7


Nirlon
அதி அற்புதங்கள் நிறைந்தது!
Nirlon
Interpub/Nir/5/75/TH

பாட்டு பிறந்தது





★ பாட்டுப் பிறக்க ஒத்துழைப்பவர்கள் :
திரு எம். எஸ். விசுவநாதன், பாலசந்தர், கண்ணதாசன்

ஒரு திரைப்படத்தின் கதாசிரியர், பாடல் ஆசிரியர், மெட்டு அமைக்கும் இசைக் கலைஞர் டைரக்டர் ஆகியவர்கள் படத்தில் வரும் சந்தர்ப்பத்துக்கேற்ற பாடலை அமைக்க எத்தனை பாடுபடுகிறார்கள் என்பதை ஆராயப் புகுந்தால் மிகவும் சுவையாக இருக்கும்.

இதனைக் கவியரசு கண்ணதாசனின் ஐம்பதாவது பிறந்த நாளை யொட்டி ஏற்பாடாகியிருந்த "பாட்டு எப்படிப் பிறக்கிறது" என்ற நிகழ்ச்சி உணர்த்தியது.

சென்னை பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் விழா அதிவிமரிசையாக நடந்தது. நாடகம், மெல்லிசை முதலிய பல சுவையான நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள், "பிலிமாலயா" நிறுவனத்தார்.

திரு கே. பாலச்சந்தர், கவியரசு கண்ணதாசன், திரு எம். எஸ். விசுவநாதன் ஆகியவர்கள் மேடையில் அமர்ந்து படங்களில் பாட்டுப் பிறக்கும் விதத்தை ரசிகர்களுக்கு உணர்த்தினார்கள்.

டைரக்டர் பாலசந்தர் படத்தில் பாட்டுப் போட வேண்டிய சந்தர்ப்பத்தை விளக்கினார். எம். எஸ். விசுவநாதன் அந்தப் பாட்டை அமைக்க வேண்டிய மெட்டை, "தன்னன்னானு" என்று பாடிப் பாடிக் காண்பித்தார். சந்தர்ப்பத்தைக் கேட்டுக்கொண்ட கவிஞர், மெட்டைப் பிடித்துக் கொண்டு பாட்டை அமைக்கலானார். சொல் சொல்லாகப் பாட்டு உருவெடுக்கலாயிற்று. டைரக்டர் ஒரு தரத்துக்கு இரண்டு தரமாகக் கதையில் வரும் குறிப்பிட்ட நிகழ்ச்சியை விளக்கினார்.

எம். எஸ். விசுவநாதன் மீண்டும் மீண்டும் மெட்டை ஹார்மோனியத்தில் வாசித்துக் கொண்டே பாடிக் காட்டினார். கவிஞர் வார்த்தைகளை மாற்றி மாற்றித் திருத்தம் செய்தார். விசுவநாதன் அவரை இலேசில் விடுவதாக இல்லை. டைரக்டர் பாலசந்தரும் திரைக் கதையின் குறிப்பிட்ட பாடல் வரும் கட்டத்தை மீண்டும் விவரித்துப் பாடலின் சொற்களை மாற்றச் சொன்னார். கவிஞர் சிறிதும் சளைக்காமல் அவர்கள் இருவரையும் திருப்திப்படுத்திப் பாடலை அமைத்து, சில வரிகளை இசையோடு பாடியும் காண்பித்தார். அப்போது விசுவநாதன், தமாஷாக, "என்ன கவிஞர் ஸார், என் தொழிலில் குறுக்கிடுகிறீர்களே!" என்றார். "முதலில் நீங்கள் என் தொழிலில் குறுக்கிட்டு வார்த்தைகளை மாற்றினீர்களே!" என்றுகடசுடக் கேட்டு ரசிகப்பெருமக்களிடையேபெரிய ஆரவாரத்தைக் கிளப்பினார் கண்ணதாசன்.

நமக்கோ, ஒரு தமிழ்க் கவிஞரின் ஐம்பதாவது பிறந்த தின விழாவுக்கு வரலாறு காணாத கூட்டம் கூடியிருப்பதைப் பார்க்கப் பெருமை பிய்த்துக் கொண்டு போயிற்று. சிவகுமாரும், சூர்யப்பிரபாவும் "அனார்கலி" நாடகத்தின் முக்கியமான காட்சிகள் சிலவற்றை மேடையில் சிறப்பாக நடித்துக் காட்டினர். மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் திரைப்படப் பாடல்கள் அந்தந்த மொழி மெல்லிசைக் கலைஞர்களால் பாடப்பட்டன. தமிழ்த் திரைப் படக் கலைஞர்கள் பலரும் கவியரசு கண்ணதாசனுக்குப் புகழாரம் சூட்டினர்.

விழா ஆரம்பித்துச் சுமார் ஒன்றரை மணி நேரம் ஆனதுமே சென்னை பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தின் குளுகுளு சாதனம் நிறுத்தப்பட்டு விட்டது. மக்கள் அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் நிகழ்ச்சிகளை அக்கறையோடு கவனித்துக் கொண்டிருந்தது திரைஉலகின் செல்வாக்கை உணர்த்தலாம்; ஆனால் அவ்வளவு ஜனக் கூட்டம் இருக்கும் நேரத்தில் குளுகுளு சாதனத்தை நிறுத்தியது எதை உணர்த்துகிறது? —கார்த்தன்



காதைக் குடையாதே!

வலது காதை உள்ளங் கையிறல் மூடிய வாறு வரும் விகவம், ''காது வலிக்கிறது. டாக்டர்! ஒரு வாரமாகச் சீழ் வடிகிறது. நேற்று முதல் தலை சுற்றுகிறது; வாந்தியும் எடுக்கிறது'' என்கிறார்.

விகவத்தின் காதுகள் இரண்டையும் சோதித்துவிட்டு இரு காதுகளையும் எக்ஸ்-ரே படம் தனித்தனியே எடுத்து வருமாறு சீட்டு எழுதிக் கொடுக்கிறேன்.

எக்ஸ் - ரே படத்துடன் வரும் விக வம், ''என்ன, டாக்டர்? காதில் பெரிய கோளாறு ஏதாகிலும் இருக்கிறதா?'' என்கிறார் கவலையுடன்.



படத்தைப் பார்த்து விட்டு, ''சீரியஸாக ஒன்றுமில்லை. ஆபரேஷன் ஏதும் தேவைப் படாது. மருந்து எழுதிக் கொடுக்கிறேன். ஆனால், இனி மேல் நீங்கள் தலைக்கு ஊற்றிக் கொண்டு ஸ்நானம் செய்யக் கூடாது. ஆறு, குளங்களில் மூழ்கிக் குளிக்கக் கூடாது. வீட்டில் தின மும் குளிக்கப் போகுமுன் காதுக்குள் பஞ்சு வைத்துக் கொள்ள வேண்டும். தண்ணீர் காதுக்குள் புகவே கூடாது. சளி பிடித்துக் கொள்ளும்போது மூக்கைச் சிந்தினால் இரு நாசிகளையும் ஒரே சம யத்தில் சிந்தக் கூடாது'' என்று அவர் கடைப்பிடிக்க வேண்டிய சில எச்சரிக்கை களைக் குறிப்பிட்டுச் சொல்லி அனுப்புகிறேன்.

''சாதாரணமாகக் காது வலி ஏற்படு கிறதே சிலருக்கு — அது எதனால்?''

''காதில் குரும்பை (Wax) மிகுதியாக அடைத்துக் கொண்டால் லேசாக வலி ஏற்பட லாம். குரும்பையைக் கரைக்கச் சில சொட் டுக்கள் மருந்து விட்டுக் கொண்டால் போதும். குச்சி, குண்டூசி இவற்றால் குத்தி வெளிக் கொண்டு வர முயலக்கூடாது. காதுக்குள் இருக்கும் 'டிரம்' எனும் ஜவ்வு பொத்துக் கொண்டால் காது செவிடாகிவிடலாம். பற் களில் ஏற்படும் நோய் காரணமாகவும், தொண் டையில் நோய்க் கிருமிகள் தங்கி உபாதை விளைவிக்கும்போதும் காது பாதிக்கப்படலாம்.

''சிறு கட்டி அல்லது சினைப்பு வெடித்தா லும் காதில் வலி ஏற்படும். இது காதின் வெளிப்புறத்தில். நடுப் பகுதியில் மூன்று சிறு எலும்புகள் உள்ளன. சீழ் வடிவதால் இந்த எலும்புகளில் ஒன்று பாதிக்கப்பட்டால் அந்த எலும்பை எடுத்து விட்டுச் செயற்கை யாக சஸ்திரச் சிகிச்சை மூலம் (Teflon) ஒன் றைப் பொருத்த வேண்டியிருக்கும். உள் காதில் கோளாறுகள் ஏற்பட்டுக் காது கேட் காமல் போவதற்குப் பல காரணங்கள் உள் ளன. ஒன்று, முதுமை காரணமாக இயற்கை யாக ஏற்படக் கூடியது. இரண்டு, சின்ன அம்மை நோய் வந்தால் சிலருக்குக் காது கேட்காமல் போய்விடக் கூடும். மூன்றாவது, க்ஷய நோய் வந்து மிகுதியாக 'ஸ்ட்ரெப்டோமைசின்' மருந்து ஊசி மூலம் உடலுக் குள் செலுத்தப்படுவதன் விளைவாகவும் ஏற்படலாம்.''

''காதைக் குச்சியினாலோ 'குரும்பை — வாங்கி'யினாலோ குடையும் பொழுது 'டிரம்' எனும் ஜவ்வுக்குள் ஓட்டை விழுந்தால் அதைச் சீராக்கிவிட முடியுமா?''

''காதின் பின்புறம் மேல் கழுத்தி லுள்ள தசையிலிருந்து சிறிது தசை (Muscle Flesh) எடுத்து 'டிரம்'மின் பின்புறம் வைத்து ஓட்டையை அடைத்துவிடலாம்.''

''மூப்புக் காரணமாகச் செவிகள் கேட் கும் சக்தியை இழக்கும்போது 'ஹியரிங் எய்ட்' போன்ற செயற்கை உறுப்புகளைப் பயன் படுத்தலாமா?''

''பயன்படுத்தலாம். ஆனால் நேரே கடைக் குப் போய்த் தானே ஒரு கருவியை வாங்கி உப யோகிப்பது கூடாது. மருத்துவரின் யோசனைப் படி உரிய கருவியை வாங்கி உபயோகிக்கலாம்.''

டாக்டர் பஞ்சபூமிநாதன் கூறக் கேட்டு எழுதியவர்: ஆர். பி.

○ 1960-ல் ரோமில் ஒலிம்பிக் பந்தயங்கள் நடந்தன. கொளுத்தும் வெய்யிலில் நீண்ட தூர ஓட்டம் (மராத்தன் ரேஸ்) நடந்தது. வழியில் பல இடங்களில் பருக்கைக் கற்கள் தணலாகச் சுட்டுக் கொண்டு இருந்தன. ஏன், முட்டையைச் சிறிதுநேரம் அதில் வைத்தால், வெந்து விடும் அளவுக்குச் சூடு.

அந்த ரேஸில் ஓர் எத்தியோப்பியர் திரு அபேபே பிகிலா வெற்றி பெற்றார். அவர் ஒலிம்பிக் ரிகார்டை எட்டு நிமிட வித்தியாசத்தில் முறியடித்தது ஆச்சரியமில்லை, அவர் வெறுங்காலுடன் இவ்வளவு தூரம் ஓடியிருக்கிறார் என்பது தான் பலரை வியப்புக்குள்ளாக்கியது. ''ஏன் ஷூவில்லாமல் ஓடுகிறீர்கள்?'' என்று நிருபர்கள் கேட்டதற்கு ''இந்த வெய்யிலில் ஷூ போட்டால் கால் வெந்து விடாதா?'' என்று கேட்டார் அவர்!

○ லண்டன் மராத்தன் ரேஸில் (1908) இத்தாலியிலிருந்து வந்த பியட்ரோ என்ற சாக்லேட் தயாரிப்பாளர் ஓடினார். கடைசி நூறு கஜங்களுக்கு முன்பு அவர் தளர்ச்சி மிகுதியால் விழுந்து விட்டார். பந்தய அதிகாரிகள் அவருக்குக் கை கொடுத்தனர். அவர்கள் உதவியுடன் கடைசி வரை ஓடினார். இதனால் அவர் பரிசுபெறும் தகுதியை இழந்து விட்டார். இருந்தாலும் அவரது முயற்சியைப் பாராட்டி ஏழாம் எட்வர்ட்டின் மனைவி ராணி அலெக்சாந்த்ரா அவருக்கு விசேஷ தங்கக் கோப்பை ஒன்றைக் கொடுத்தார்.

○ 1966 ஜமைக்காவில் காமன்வெல்த் பந்தயங்கள் நடந்தன. பயங்கரமான கோடை காலம். மராத்தான் ரேஸில் முதலாவதாக ஓடிவந்த ஜே. ஆல்டர் என்பவர் கடைசி சில கஜங்கள் ஓடி வர முடியாமற் போய் விட்டது. ஸ்டேடியத்தின் கதவுகள் மூடியிருந்தன. ஏன்? பிரிட்டிஷ் அரசர் பிலிப் சற்றுத் தாமதமாக அந்தச் சமயத்தில் வரவே, அவருக்காக போலீஸ் எல்லா வழிகளிலும் பாதுகாப்பாக நின்று இருந்தனர். யாரையும் உள்ளே விடவில்லை. ஆல்டர் சுற்று வழியில் உள்ளே சென்று, வெற்றியும் பெற்றார்.

○ 1904-ல் செயின்ட் லூயியில் நடந்த மராத்தான் பந்தயத்தில் கலந்து கொள்ள கியூபாவிலிருந்து ஒரு தபால்காரர் வந்தார். ஆனால் வரும் வழியில் பணம், பெட்டி எல்லாம் கோட்டை விட்டு விட்டார். ஆகவே சாதாரண உடை, ஷூவுடன் ஓடினார். நான்காவதாகவும் வந்தார், 26 மைல் 385 கெஜ நீள இந்தப் பந்தயத்தில்.

இந்தப் பந்தயத்தில் தென்னாப்பிரிக்கா பழங்குடி மக்களைச் சேர்ந்த ஒருவர் ஓடினார். வழியில் நாய் ஒன்று அவரைச் சுமார் ஒரு மைல் தூரம் பந்தயப் பாதைக்கு அப்பால் துரத்திச் சென்று விட்டது. இருந்தும் ஒன்பதாவதாக (மொத்தப் பேர் 31) வந்தார்.

○ அதே பந்தயத்தில் ஓடிய லார்ஸ் என்பவருக்கு வழியில் வயிற்று வலி ஏற்பட்டது. இன்னும் ஒன்பது மைல் பாக்கி இருந்தது. இனி ஓட முடியாது என்று தோன்றவே, வழியில் சென்ற ஆட்டோ ரிக்ஷாவில் ஏறி ஸ்டேடியத்துக்குச் சென்றார். ஆட்டோ, ஸ்டேடியத்திற்குச் சிறிது தூரத்துக்கு முன்பு கெட்டுப் போய்விட்டது. லார்ஸ் ஸ்டேடியத்துக்குச் சென்று தம் உடைகளை எடுத்து வரலாம் என்று அங்கு போனார். உள்ளே நுழைந்தாரோ, இல்லையோ பலத்த கரகோஷம் அவரை வரவேற்றது. ஒன்றும் புரியாமல் அவர் கையை ஆட்டினார். பந்தய நிர்வாகிகள் அவரை அழைத்துக் கொண்டு போய், ஜனாதிபதியின் மனைவியின் முன் பரிசளிப்புக்காக நிறுத்தினர். பரிசா? இவருக்கு ஒன்றும் புரியவில்லை. அந்த சமயம், பந்தயத்தில் வெற்றிகரமாக ஓடி முதலாவதாக வந்த ஹிக்ஸ் மைதானத்துக்குள் நுழைந்தார். தவறை உணர்ந்த அதிகாரிகள் பரிசை அவருக்குக் கொடுத்தனர். சற்றுத் தாமதமாக வந்திருந்தால், பரிசு லார்ஸுக்குப் போய் இருக்கும்.

○ எண்ணூறு மீட்டர் பந்தயத்தில் (லண்டன், 1948) ஒரு பிரஞ்சுக்காரர் வெற்றி பெற்றார். அவர் பெயர், நம்புங்கள், (Chef de Hotel (ஓட்டல் சமையல்காரர்!) அதுதான் அவருடைய உண்மையான பெயர்.

○ டோக்கியோ ஒலிம்பிக்கில் (1964) டான் ஃபிரேசர் என்ற ஆஸ்திரேலியப் பெண் நீச்சல் பந்தயங்களில் மூன்று தங்க மெடல் பரிசு பெற்றார். நான்காவது தடவை அவர் நீரில் இறங்கியபோது, அவர் கைது செய்யப்பட்டார். என்ன காரணம்? மூன்று முறை வெற்றி பெற்ற சந்தோஷத்தில் அவர் மன்னர் ஹிரோஹிட்டோவின் அரண்மனையைச் சுற்றியிருந்த தடாகத்தில் குதித்து நீந்தினார். அங்கு நீந்துவது சட்ட விரோதமாதலால் கைது செய்யப்பட்டார். பின்னர் விடுதலையானார்.

○ கி. மு. 700-ல் ஒலிம்பிக் பந்தயங்கள் கிரீஸ்நாட்டில் தொடங்கியதாம். அச்சமயம் பெண்கள் வேடிக்கை பார்க்கக் கூட வரக் கூடாதாம்! ஆதாரம்: கனடா —நந்தி





பாடுவோம் பாப் மியூசிக்!
2
கதை: தமயந்தி / சாருகேசி
சித்திரம்: ராஜு
யாரப்பா நீ? பாப் மியூசிக் பாடறேன்னு சோப் போட வந்தியா?
சோப் போட அவசியம் இல்லை. எங்க பாப் ரொம்ப டாப்! எங்க யங் ஸ்பேரோஸ் ட்ரூப்புக்கு உங்க சபா அனிவர்சரியிலே ஒரு சான்ஸ் கேட்கத்தான் வந்தேன்.
அப்பா, ஒய் நாட் திஸ் டைம் எ சான்ஸ்?
நீ சும்மா இரு. எங்க சபாவிலே எல்லாம் பாப் மியூசிக் போட மாட்டோம்.
ஏன், சங்கீதத்தில் அடவைக் கொட்டகை விழுங்குமோ?
ஹா ஹ் ஹா ஹ் ஹா!
ஸ்டாப்பிட்! என்ன சிரிப்பு இது? நீ ஏதோ உன் கிடாரில்தான் தட்டுகிறயாக்கும் என்று நினைத்தேன். அடக்கம் வேண்டும். பணிவு வேண்டும் சான்ஸ் கேட்க வருகிறவர்களிடத்தில்.
சாரி சார். எங்களிடத்தில் எல்லாம் உண்டு. சிரிப்பு வந்தால் சிரிக்காமல் இருக்க முடியுமா சார்...
அவர் சொல்வதும் கரெக்ட் தான் அப்பா. அவர் சிரித்ததற்கு நானும் பொறுப்பு.
சரி, சான்ஸ் இருந்தால் கொடுக்கிறோம். முதலில் உன் விலாசத்தைக் கொடு. ஸீ மீ ஆப்டர் டூ மந்த்ஸ்.
என்ன சார் இது, இரண்டு மாசமா! இந்த அனிவர்சரி முடியலையே...
வாட் நான்சென்ஸ்! அட்ரஸ் இல்லாதவனெல்லாம் அனிவர்சரியில் எப்படி பாடச் சொல்வது?
அவர்தான் அட்ரஸ் சொல்லப் போறாரே அப்பா. அப்புறம் என்ன?


இதோ பார் வித்யா! அட்ரசை நம்மிடம் சொல்லி விட்டால் போதுமா? எப்போது இவர் பிரபலமாகிறாரோ அப்போதுதான் சான்ஸ்.
அவர் எப்படி பாடுவார் என்று பாடிக் கேட்க வேண்டாமா அப்பா?
சார், உங்களுக்கு எப்போது சௌகரியமோ அப்போது இந்த 'டேப்'பைப் போட்டுக் கேளுங்கள்.
எனக்குக் காது சரியில்லை. இன்னொரு தடவை கேட்கலாம்.
உங்கள் புரோக்ராமா? அப்படியானால் நாங்கள் உங்கள் டேப்பையே போட்டு விடுகிறோமே. ட்ரூப் எதற்கு?
சார், கிண்டல் பண்ணுகிறார்.
நீங்கள் போகலாம். ஐ'ம் பிஸி.
மேடம், நீங்கள் தான் எனக்கு உதவ வேண்டும். டேப்பில் பாட்டைக் கேளுங்கள். குட் பை!
ஆஹா... என்ன கம்பீரம், என்ன ஸ்டைல்!

தொடரும்

பாருங்கள் எப்படி ப்யூரிடாஸ் ஃபில்ட்டர்கள் சாதாரணக் குழாய் நீரை வடிகட்டி அசுத்தங்களை நீக்கி நூற்றுக்கு நூறு தீங்கற்ற நல்ல குடி நீராக ஆக்கிவிடுகிறது

நீர்வழிப் பரவும் நோய்களான காலரா, டைஃபாயிடு, சீத பேதி, இரைப்பை-குடல் அழற்சி முதலியவற்றைத் தடுத்துக் காக்க இதைவிட மேலான உத்தரவாதம் எதுவுமில்லை.



உங்கள்
ஆதரவுக்குரியவர்களுக்கு
ஆதரவளியுங்கள்.
இன்றே பெறுவீர்
ஒரு ப்யூரிடாஸ்.



ப்யூரிடாஸ் இலேசானது, உடையவே உடையாது, தூக்கிச் செல்ல வாகானது, துப்புரவாக்க இலகுவானது.



அசல் ப்யூரிடாஸ் ஃபில்ட்டர்களையே வாங்குகிறீர்கள் என்பதை உறுதி செய்ய மேற்புற அறைக்கு மேலுள்ள ப்யூரிடாஸ் முத்திரையைப் பார்த்து வாங்குங்கள். ப்யூரிடாஸ் பெயரும் பதிவு எண் 196501ம் அடிப்புற உலோகத்தின் மீது இருப்பதையும் கவனியுங்கள்.

பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு நவீனமான வசதிகள்

BALSARA பல்சாரா & கம்பெனி (பிரை.) லிட்.
43, [illegible] பம்பாய் 400 001.

CHAITRA-BLS19 TAM Rev.

சபலம் தோற்றது, பண்பாடு வென்றது!

''ஒரே ஒரு நாள் உன்னுடன் வாழ்ந்தாலும் போதும். என் மனம் நிறைவு பெற்று விடும்...'' என்று ரவி ராதாவிடம் சொல்லுகிறான். ராதா அதற்குச் சம்மதித்து அவன் வீட்டுக்குச் செல்லுகிறாள். இருவர் உள்ளங்களும் நெகிழ்ந்திருக்கும் நிலையில், கண நேர சபலத்தில் நெறி தவற இருந்த இருவரும் விழித்துக் கொள்கின்றனர். வாடிப் போன ஊதாப்பூ — முன்பு ரவி, அவள் நினைவாகப் போற்றி வந்தது — இப்பொழுது ஒரு சிறு பெட்டியிலிருந்து அவர்களுக்கு விழிப்பூட்டுகிறது. ஆனாலும் ராதா தன் கணவனை விட்டு விலகி, ரவியுடன் ஓடிப்போக யத்தனிக்கிறாள். அச்சமயம் அவள் கணவன் அங்கு வந்து அவளுக்கு நிறையப் பணம் கொடுத்து, நல்வார்த்தைகளும் கூறி விடை கொடுக்கிறான். ராதா மனம் நெகிழ்ந்து, கண்களில் நீர் மல்கக் கதறி அவன் காலில் விழுகிறாள்.... ஒன்று சேர்ந்த தம்பதியைக் கண்டு ரவி மன நிறைவோடு தன் வீடு திரும்புகிறான்....

''ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது'' படத்தில் இந்தக் காட்சிதான் ரசிகர்களின் நெஞ்சை விட்டு நீங்காத காட்சி என்று பாராட்டி நிறையக் கடிதங்கள் வந்திருக்கின்றன. இது பற்றிப் படத்தின் டைரக்டர் எஸ். பி. முத்துராமனைச் சந்தித்துப் பேசியபோது ''உணர்ச்சி மயமான இந்தக் கட்டம் ரசிகர்களுக்குப் பிடித்திருக்கிறது என்று அறியும்போது எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது. காரணம், மூலக் கதையில் இந்த முடிவு இல்லை. படத்தின் கிளைமாக்ஸ் காட்சி புது மாதிரியாக இருக்க வேண்டும் என்று எண்ணி இந்த மாறுதலைக் கதாசிரியர் புஷ்பா தங்கதுரையிடம் வெளியிட்டு அவரது இசைவைப் பெற்றேன்' என்றார்.

'''ஒரு நாள் உன்னுடன் வாழ்ந்தாலும் போதும்....' என்று மணமான ஒரு பெண்ணிடம் அவள்பழைய காதலன் கூறுவதும், அதற்கு அவள் சம்மதிப்பதும்... என்னதான் விபரீதம் எதுவும் நிகழ்ந்து விடவில்லை என்றாலும்... அது நம் நாட்டின் பண்பாட்டுக்கே ஒத்து வரவில்லையே..?'' என்று இழுத்தேன்.

''நோ நோ. அப்படியில்லை, ஸார்! பத்திரிகையில் வரும் கதை வேறு. அது படமாகிவரும் விதம் வேறு... வாசகர்கள் வேறு — படம் பார்ப்பவர்கள் வேறு. படம் பார்ப்பவர்களைக் கடைசிக் காட்சி கவரவில்லை என்றால் அந்தப் படம் வெற்றி பெறுவது சிரமம். நம் நாட்டுப் பண்பாட்டைக் கைவிடும் நோக்கம் எனக்குச் சிறிதும் கிடையாது. ஆனால் பல லட்சம் ரூபாய்கள் செலவழித்து ஒரு படம் தயாரிக்கிறோம். அது வெற்றி பெறும் வழியையும் சிந்தித்து ஆவன செய்ய வேண்டும் அல்லவா?''

''கதாசிரியர் புஷ்பா தங்கதுரை உங்கள் மாற்றத்தை ஏற்றுக் கொண்டாரா?''.

''ஆகா, ஏற்றுக் கொண்டார். உரையாடல்கள் எழுதிய படத் தயாரிப்பாளர் சங்கரன் அதற்கேற்ப உரையாடல்களையும் சிறப்பாக அமைத்துக் கொடுத்தார். படத்தின் வெற்றிக்குச் சங்கரனின் உரையாடல்களும் காரணம்.''

''கதாசிரியர் மூலக் கதையை எப்படி முடித்திருந்தார்?''

''ராதா ஒரே ஒரு நாள் ரவியுடன் வாழக் கண நேர சபலத்தில் ஒப்புக்கொண்ட பிறகு திடுமென விழித்துக் கொள்கிறாள். இனி ரவி இருக்கும் ஊரில் தான் இருப்பது சரியில்லை என்று தீர்மானித்துக் கணவனுடன் ஊரை விட்டே போய்விடுகிறாள். ரயிலில் போகும் அவளை ரவி பார்த்துக் கண் கலங்குகிறான்... இப்படி முடிகிறது கதை!''

''நீங்கள் 'மெலோ டிராமா'வாக முடித்து விட்டீர்கள்.''

''ஆமாம். படத்தில் ஒரு 'திரில்' ஏற்படுத்த வேண்டுமே, அதற்காகத்தான்'' என்றார் டைரக்டர் முத்துராமன். —காந்தன்





ஓர் எழுத்தாளர் வீடு கட்டுகிறார்!

"யார் அது, வெகுநேரமாகப் பேசிக் கொண்டிருந்துவிட்டுப் போகிறார்?"

"தெரிந்தவர், பழைய குடும்ப நண்பர்."

"என்ன காரியமாக வந்தார்?"

"ஊரில் அவருடைய தோப்புக்குப் பக்கத்தில் பழைய வீடு ஒன்று விலைக்குப் போகிறதாம். மலிவாக இருக்கும் என்று என்னை வாங்கிக் கொள்ளச் சொல்லுகிறார்."

"அவ்வளவுக்கு உங்களிடம் பண வசதி உள்ளதா?"

"மோகன் பிக்சர்ஸ்காரர்கள் என் கதைக்கு மூவாயிரம் கொடுத்திருக்கிறார்கள். செக் இன்னும் மாற்றி வரவில்லை. மேலே இரண்டாயிரம் போட்டு அதை வாங்கிவிடலாம் என்று பார்க்கிறேன்."

"முதன் முதலாக உங்களுக்கு இவ்வளவு பெரிய தொகை கிடைத்திருக்கிறது. குழந்தைக்கு ஏதாவது நகையாகச் செய்து போடலாம் என்று தோன்றவில்லையே."

"ஒதுங்குவதற்கு நமக்கென்று ஒரு குச்சு வேண்டாமா?"

"வேண்டியதுதான். அதற்காக வீட்டை எங்கே கட்டுவதென்று ஒரு திட்டம் இல்லையா? நகரத்தின் அருகில் ஒரு கிரவுண்டு வாங்கிப் போட்டாலும் இரண்டு வருஷங்களில் இரு மடங்கு விலைக்குப் போகும். இவ்வளவு பெரிய தொகையைக் கிராமத்தில் கொண்டு போய் முடக்குவானேன்?"

"பழைய கட்டடமாம். செங்கல்லே ஐயாயிரம் ரூபாய்க்குப் போகும் என்று சொல்லுகிறார்."

"நாமென்ன கல் வியாபாரமா செய்யப் போகிறோம்? அதை இடிக்க என்ன செலவாகும் தெரியுமா?"

"இடிப்பதற்கா அதை வாங்குகிறோம்? சுவர்கள் பலமாக உள்ளன, மேற்கொண்டு செலவழித்தால் உறுதியான வீடாகும்."

"இன்னும் பத்து வருஷங்கள் உங்களுக்கு ஸர்வீஸ் இருக்கிறது. போகிற இடங்களிலெல்லாம் தங்க இடம் கொடுத்துவிடுகிறார்கள்."

"நமக்கென்று ஒரு சொந்த இடம் தேவையென்கிற எண்ணம்தான்."

"வேண்டியதுதான். ஆனால் வீட்டைக் கிராமத்திலா கட்டுவார்கள்? அந்த மனையை வீடாக உருவாக்க என்ன செலவாகுமாம்?"

"மேலே பத்தாயிரம் ஆகும் என்று சொன்னார். இப்போதெல்லாம் வீடு கட்டுவதற்குக் குறைந்த வட்டியில்கூடக் கடன் தருகிறார்களே!"

"வேலை பார்க்கிற மிகுதி நாளெல்லாம் கடனை அடையுங்கள். நீங்கள் கட்டுகிற வீட்டில் யார் குடி வருவார்கள்? அந்தக் கிராமத்தில் என்ன வாடகை வரும்?"

"இப்போது ஒன்றும் சொல்ல முடியாது. வருகிற வாரம் அங்கே வந்து மனையைப் பார்ப்பதாகச் சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகுதான் முடிவாகச் சொல்லலாம்."

"இடம் பிடித்திருக்கிறதா?"

"காவேரிக் கரை, பெரிய புராதனமான கோயில். பல மகான்கள் வாழ்ந்த தலம். நான்கு சமயக் குரவர்களும் அந்தத் தலத்தைப் பாடியிருக்கிறார்கள்."

"காவேரிக் கரையில் உள்ள ஊர்களுக்கெல்லாம் சமய குரவர்கள் போயிருக்கிறார்கள். அப்போது ஏதாவது பட்டாமனும் அவர்களால் இருக்க முடியாது. நீங்கள் போகிற ஊரிலிருந்தெல்லாம் எத்தனை சுந்தரவல்லியும், புஷ்பாவும் பெருமூச்சுவிடுகிறார்கள்! அதைப் போலவேதான். மனையை என்ன விலை சொல்லுகிறார்கள்?"

"ஐயாயிரத்துக்குக் குறையாதாம். மேற்கொண்டு ஊர்ப் புள்ளிகளுக்குக் கையுறை, பத்திரச் செலவு. ஆனால் பின்புறம் தென்னை மரமே இருபது இருக்கிறது. இங்கே தேங்காய் ஒன்றே ஒரு ரூபாய் கொடுத்து வாங்குகிறோம்."

"அங்கே என்ன விலையோ?"

"ஐம்பது காசுதான்."

"ஒரு காய் இவ்வளவு தொலைவு வந்து சேர ஐம்பது காசாகாதா?"

"அப்படிக் கணக்குப் போட்டால் ஆகுமா? நம்ம கொல்லைக் காய் என்றால் அதன் சுவையே தனி இல்லையா?"

"அந்த ஊரில் இருப்பவர்களுக்கே கொல்லையில் உள்ள காய் தக்காது. அவ்வளவு திருடர்கள். கூடவே குரங்குகள். இவர்களை மிஞ்சி நமக்கு என்ன கிடைத்துவிடும்?"

"குத்தகைக்கு விட்டால் போகிறது!"



"எவ்வளவு குத்தகைக்குப் போகும் என்று விசாரித்தீர்களா ?"

"இன்னும் மனையே வாங்கவில்லே. அதற்குள் இவ்வளவு கணக்குப் போட்டால் எப்படியாம்?"

"இந்த அல்நாஷ்கர் விவகாரமெல்லாம் உங்கள் கற்பனையுடன் வைத்துக் கொள்ளுங்கள். இந்த வீட்டுக்காக எத்தனை செலவாகும் என்று எதிர்பார்க்கிறீர்கள் ?"

"பதினைந்தாயிரத்தில் எல்லாம் முடிந்துவிடும் என்று அம்பலக்காரர் கூறுகிறார். அவர் அதே ஊர்க்காரர். நிறைய அனுபவம் உடையவர்."

"பதினைந்தாயிரத்தை வட்டிக்குப் போட்டால் மாதம் எவ்வளவு கிடைக்கும் ?"

"நூற்றைம்பது ரூபாய் வரும்."

"நூற்றைம்பது ரூபாய் வாடகையில் வசதியான வீடொன்று கிடைக்காதா? — ஒரு நடுத்தர நகரத்தில் — நீங்கள் குடிபோகிற கிராமத்தில் அந்த வாடகைக்கு ஒரு மாளிகையையே அமர்த்திக் கொள்ளலாம்."

"என்றாலும் அது சொந்த வீட்டைப்போல் ஆகுமா ? நான் முடிவுசெய்துவிட்டேன்."

"ஏனய்யா, இதுதான் செங்கல்லா? ஆயிரம் கல் நூற்றைம்பது என்று விலை பேசினேன். பாதிக் கல் அரைக் கல்லாக இருக்குதே !"

"ஏற்றும் போதும் இறக்கும் போதும் கல் உடையத்தாங்க செய்யும். அரைக் கல்லும் வேலைக்கு உதவும், வேணும்னு கொத்தனாரைக் கேட்டுப் பாருங்க."

"அரைக் கல்லு வேணு வேலைக்கு உதவும். இந்தத் தூளை எல்லாம் மிளகாய்ப் பொடியோடுதான் கலக்கணும். எங்க நகரத்திலே எல்லாம் அப்படித்தான் செய்கிறார்கள்."

"நீங்க இந்த ஊருக்குப் புதுசுன்னு நினைக்கிறேன். இந்த விவகாரமெல்லாம் காண்ட்ராக்டா விட்டுடணும். வண்டிச் சத்தம் எடுங்க, நான் போவணும்."

"வண்டிக் கூலி உள்படத்தான் நான் விலை பேசினேன். அது வேறு தனியாகக் கிடையாது."

"அப்போ நான் வண்டியைத் திருப்பிக்கிறேன், நீங்க காளவாயிலேயே வந்து டெலிவரியெடுத்துக்கங்க."

"ஏன் கொத்தனாரே, இந்தச் சுண்ணாம்பெல்லாம் நீர்த்துப் போய் ஒடுது ?"

"அது நேத்து மழை பேஞ்சுலே ஐயா. இந்தப் பொடிப் பசங்களைச் சாக்கைப் போட்டு மூடச் சொன்னேன். ஒருத்தனாவது கவலை எடுத்துச் செய்வதாக இல்லே. எல்லாம் பள்ளிக்கூடம் படிக்கிற புள்ளெங்க. உள்ளூரிலேயே பள்ளிக்கூடம் ஏற்பட்டுப் போச்சு. அவங்களை ஒன்னும் சொல்லவும் முடியலே. கோவிச்சுக்கிட்டா சித்தாளு கிடைக்கமாட்டான்."

"ஐம்பது ரூபாய்ச் சுண்ணாம்பு வீணாகியிருக்குமா ?"

"அவ்வளவு இராதுங்க. பரவாயில்லே, மணலைக் கலந்துக்குவோம்."

"இன்னிக்கு என்னடா பையன்கள் யாரையும் காணோம்?"

"பள்ளிக்கூடத்திலே பரீட்சைங்க. அதனால்..."

"நீ மட்டும் ஏன் வந்தாய்?"

"அவசியமாய்ப் பணம் தேவைப்படுதுங்க. பரீட்சை போனால் போகுது."

"இந்தா, இந்த இரண்டு ரூபாயை எடுத்துக்க. பரீட்சை எழுது. நாளை தவறாமல் வா."

"நீங்க என்னங்க, வந்த ஒரு பையனையும் திருப்பி அனுப்பிட்டீங்க, சித்தாளில்லாமல் என்ன வேலை நடக்கும் ? பொம்பளைச் சித்தாளும் முழுக் கூலி கேக்கறாங்கன்னு நேத்துத் திருப்பி அனுப்பிச்சுட்டேன். இப்பவெல்லாம் அவங்களுக்குச் சாதகமாய் ஏதோ சட்டம் வந்திருக்காமே !"

"பரவாயில்லே, கொத்தனாரே. இன்னிக்கு வேலை இல்லாட்டிப் போனாப் போவுது. பையன்கள் பரீட்சை எழுத வேண்டியது முக்கியம்."

''வேலை நடந்தாலும் நடக்காட்டாலும் என் கூலி மட்டும் வந்திடணும். அதை யும் தெரிஞ்சுக்குங்க!''

''ஏண்டா, வேறு யாரும் வேலைக்கு வரலை?''

''அவங்களுக்கெல்லாம் தினக் கூலி மூணு ரூபாய் வேணுமாம்.''

''நீ மட்டும் வந்திருக்கிறயே?''

''வேலை செய்யாமலே நேத்து எனக்கு இரண்டு ரூபாய் கொடுத்தீங்க. அதை நான் மறக்கலாமா?''

''கருங்காலி ஒழிக...கருங்காலி ஒழிக...!''

''இதென்னடா சத்தம்?''

''நான் கொறஞ்ச கூலிக்கு வேலை செய்ய றேனும். அதனால் நான் கருங்காலியாம். வெளி யிலே வாடா ஒன்னைப் பார்த்துக்கறேன்னு கருவுறாங்க.''

''கொத்தனாரே வேலை நடந்தவரை போதும் நிறுத்திடுங்க.''

''அனுபவம் இல்லாத ஆளுங்ககிட்ட வேலை ஒதுக்கறதிலே இதுதானுங்க சங்கடம். மேஜ ரிலே ஒரு மாத வேலைக்குக் கூப்பிட்டாங்க. உள்ளூர் வேலை ஆச்சேன்னு இதை ஒத்துக் கிட்டேன்.''

''இந்தாங்க, அம்பது ரூபாய். மீதி இருக்கிற சாமான்களை எல்லாம் போன விலைக்கு வித்துப் போடுங்க. இரண்டு நாளிலே நான் ஊருக்குத் திரும்பிப் போகிறேன். பணம் மட்டும் கையோடு வந்துடணும். நஷ்டம் ஆனது போதும்!''

''எல்லாம் சேர்த்து இருநூறு ரூபாய்கூடத் தேறுதுங்களே!''

''ஏன் இவ்வளவு சீக்கிரம் திரும்பிட் டீங்க, வேலை முடிஞ்சு போச்சா?''

''ஏதோ மனசுக்குப் பிடிக்கலை. வேலை திருப்திகரமாக நடக்கவும் இல்லை, திரும்பி விட்டேன்.''

''அந்தப் பாழ் மனையை என்ன செய்யப் போறீங்க?''

''அந்த மனை மேலே கீத்துக் கொட்டகை போட்டுக்கிறேன். வாடகைக்கு விடுங்கன்னு வந்தார் ஒரு கடைக்காரர். புகையிலைக் கிடங்கு வைக்கணுமாம்.''

''என்ன வாடகையோ?''

''மாதம் ஐம்பது ரூபாய் தருவதாகச் சொன்னார்.''

''வாடகைக்கு விடுவதுதானே!''

''என் கொள்கைதான் உனக்குத் தெரியும். புகையிலையை எந்த உருவத்திலும் உப யோகிக்கக் கூடாது. அது மக்களின் ஆரோக் கியத்துக்கு எதிரி என்று நான் பிரசாரம் செய்கிறேன். நானே என் மனையைக் கிடங்கின் பொருட்டு வாடகைக்கு விட்டால் எப்படி இருக்கும்?''

''உங்களுக்கு இதுவும் கிடையாது, பரத்துக் கும் வழி தெரியாது. செலவழிந்த பணத் துக்குக் கால் வட்டியாவது கிட்டுமல்லவா?''

''என் சொந்த வீட்டிலேயே புகையிலைக் கிடங்கு வைத்திருக்கிறேன் என்று நாலு பேர் சொன்னால் எப்படி இருக்கும் என்று கொஞ்சமாவது எண்ணிப் பார்த்தாயா? என்னுடைய நல்லெண்ணத்தை ஏனோ புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாய்?''

''பின்னால் அந்தப் பாழ் மனையை என்ன தான் செய்தீர்கள்?''

''கொஞ்சம் விலை தள்ளியே விற்று விட் டேன்.''

''கொஞ்சம் என்றால் எவ்வளவு, ஐம்பதா, நூறா?''

''அவ்வளவு சுலபமாக அந்த ஊரில் பாழ் மனை விலை போய்விடுமா? மோகன் பிக்சர்ஸ் காரர்கள் என் நாவலுக்குக் கொடுத்த தொகைக்குப் போய்விடும்.''

''ஆகமொத்தம் நஷ்டம் மூவாயிரம்.''

''லாபத்தை எண்ணமாட்டேன் என் கிறாயே. அது மட்டும் புகையிலைக் கிடங்கா யிருந்தால் எனக்கு எவ்வளவு அவப் பெயர்?''


''லாபம் என்னவென்று சொல்லட்டுமா? ஒரு சிறு கதை உருவாகும். தப்பித் தவறி அது பிரசுரமாகிவிட்டால் அது வெளிவரும் ஏட்டை லட்சம் பேர் வாங்கிப் படிப்பார்கள். நூறு பேர் சிந்திப்பார்கள். பத்துப் பேர் பாராட்டுவார்கள். ஒருவர் போஸ்டு கார்டு எழுதி அரசாங்கத்துக்குப் பதினைந்து பைசா லாபம் வாங்கித் தருவார்.''

''பொருளாதார முறையில் மட்டும் பார்த் தால் உன் கணக்கு மிகவும் சரி.''

''பொருள்தானே வாழ்க்கைக்கு மிகவும் ஆதாரமாக இருக்கிறது!''

எனக்குத் தெரியுமே நம்பகமானது க்ளைகோடின்–

இருமல் தொல்லை இவளை விரைவில் விட்டகல...





இந்தியாவின் வேறெந்த இருமல் மருந்தையும் விட அதிக அளவிலே இருமலை நிறுத்தியுள்ளது க்ளைகோடின்.

எனவேதான் அது முதல்தரமானது

இருமல் பாதித்த எல்லா உறுப்புகளிலும் அது விரைந்து செயல்பட்டுத் தவறாமல் துரிதமான ஆறுதல் அளிக்கிறது.

- தொண்டைக் கமறலுக்கு இதமளிக்கிறது.
- ஜலதோஷத்தோடு வரும் இருமலை விலக்கிச் சளியடைப்பைத் தளர்த்துகிறது.
- நிம்மதியான உறக்கத்தைத் தூண்டி, மார்புத் தசைகளை இளைப்பாற்றி மூச்சு விடுதலை எளிதாக்குகிறது.

எவ்வித இருமலையும் முழுதும் கட்டுப்படுத்த உறுதுணை க்ளைகோடின்.

Alembic

க்ளைகோடின்—இந்தியாவில், இருமலை முறியடிக்கும் சேம்பியன்— நம்பகமான மருந்துகளை நமக்குத் தரும் அலெம்பிக் நிறுவனத்திடமிருந்து.

everest/519/ACW-tm



தமிழில் இத்தனை உழைப்போடும், திறனோடும் ஒரு வரலாற்று நூல் எழுதப்படவில்லை என்று துணிந்து கூறலாம். சிறப்புக்கோர் சிகரமாக அமைந்தது ''பொன்னியின் புதல்வர்'' என்ற மகுடம்.

பாளையங்கோட்டை
2-7-76 வி. ர. வசந்தன்

கல்கியின் மறைவு சோக நிழலாய் உள்மனத்தில் பதிந்திருந்த போதிலும், மறைந்த அம்மாணிக்கத்தின் ஒளி, இதயமெல்லாம் பரவி நிற்கின்ற ஒரு விந்தைச் செயலைத் திரு சுந்தா அவர்கள் புரிந்திருக்கிறார்கள். 'வாக்கு மின்போல் அடித்திடுக' என்றான் கவிஞன். அத்தகையதொரு விந்தைச் செயலைப் புரிந்திருக்கும் சுந்தா அவர்கள் பாராட்டுக்குரியவர். 'எழுத்தும் தெய்வம், எழுதுகோலும் தெய்வம்' எனக் கருதிய கல்கி அவர்களுக்குப் 'பொன்னியின் புதல்வர்' ஓர் அஞ்சலியாக அமைந்து விட்டது. மீண்டும் ஒரு முறை நாம் அவருடன் வாழ்ந்து விட்டோம்.

அண்ணாநகர்,
2-7-76 வி. லலிதா பாரதி

'இப்போதுகூட ரொம்ப நல்லவர்களைத் 'தங்கமான மனசு' என்றுதான்சொல்கிறோம். இங்கிலீஷில் கூட Golden hearted என்கிறார்கள் அல்லவா?' ஸ்ரீ காஞ்சிப் பெரியவரின் இந்த அருள்மொழிகளைப் படித்த கையோடு 'பொன்னியின் புதல்வர்' கடைசி அத்தியாயத்தைப் படித்தேன்.

'பொன் மயமாய்ப் பல்லாண்டு நிலைத்திருப்பார் பொன்னியின் புதல்வர்' என்ற கடைசி வரி என் உள்ளத்தைத் தொட்டது.

சென்னை-75
2-7-76 வி. ச. வாசுதேவன்

''இப்போது போல் இனியும் வாழ்வார். பொன் மயமாய்ப் பல்லாண்டு நிலைத்திருப்பார் பொன்னியின் புதல்வர்'' என்று முடித்திருப்பது அருமையிலும் அருமையாக இருக்கிறது. 'என்றும் இருப்பார், இதயத்தில் ஒலிப்பார்' என்று ரசிகமணி டி. கே. சி. மறைவின்போது, கல்கி எழுதிய தலையங்கத்தை நினைவூட்டுகிறது.

சிவகங்கை
2-7-76 வி. ஆர். நாகராஜன்

'கல்கி' என்ற மாமனிதரின் விசுவரூப தரிசனமாக அமைந்துவிட்டது.

மின்பாறை
2-7-76 தி. தி. குருமூர்த்தி

திரு சுஜாதாவின் கதைகளை அலசும் பக்குவம் கல்லூரி மாணவர்களுக்கே உண்டு என்னும் பொருள்பட நீங்கள் போட்டி வைத்திருப்பது வருந்தத் தக்கது. நாங்கள் எல்லாம் ஒன்றும் அறியாதவர்களா என்ன?

அவிநாசி
2-7-76 டி. செங்கோட சுப்பிரமணியம்

மேலை நாடுகளில் செடி கொடிகளுக்கு ஏற்படும் நோய்களுக்கு மருத்துவம் செய்யப்படுகிறது என்று ஓர் துண்டுச் செய்தி வெளியிட்டிருக்கிறீர்கள். அதுபோல் நம் நாட்டிலும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே நடந்ததுண்டு. இது பற்றி ''பிருஹத் ஸம்ஹிதை'' ''சுக்கிர நீதி'' என்ற சம்ஸ்கிருத நூல்கள் கூறுகின்றன. புலிவலம் ஸ்ரீ ஆர். கோபாலய்யர் சுமார் நாற்பது வருடங்களுக்கு முன் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அந்த நூலில் எழுதியுள்ளபடி நான் எங்கள் தோட்டத்தில் ஒரு கறிவேப்பிலைச் செடிக்குச் சிகிச்சை செய்தேன். ஒரு வருடமாகத் தளிர் விடாமல் நோயுற்றிருந்தது. பதினைந்து தினங்களில் துளிர் விட ஆரம்பித்துச் செழித்தது.

வடுவூர்
2-7-76 ஏ. கே. எஸ். மணியன்

''பங்களூர் பார்த்தோம்'' படித்தோம். தங்கள் பார்வையை அழகிய சொற்கோவையாகத் தந்திருந்தீர்கள். இதில் நகைச்சுவை அதிகம். கட்டுரை நீளம் மிகக் குறைவு. இதுதான் ஒரு குறை.

எட்டயபுரம்
1-7-76 மதுரைமணாளன்

''சேரமான் காதலி''யைப் படித்து மகிழ்ச்சி அடைந்து வருகிறேன்.

'' ஆறாக்கு அரிசியை ஓர் ஆண்டிக்குப் போட்டுவிட்டு, அதன் பலனை ஆயுள் காலம் வரைக்கும் எதிர்பார்க்கும் உலகத்தில், ஆயுளையே அர்ப்பணித்துவிட்டுப் பலனை எதிர்பாராமல் போய் விட்டான் கிருஷ்ணன் நம்பூதிரி.'' — போன்ற வரிகள் மெய்சிலிர்க்க வைக்கின்றன.

கண்ணதாசனின் எழுத்து வெறும் கதையாக இல்லை, கவிதையாகவே உள்ளது. கருத்து, கற்பனை, தத்துவம் மிளிர்ந்து காணப்படுகிறது.

வாழ்க, அவர் சொல்லறம்.

கோவை — 11
27-6-76 டி. வி. அனந்தகிருஷ்ணன்

எதை எதிர்பார்த்து?...

ஏ. கே. சரஸ்வதி

மேசை மேல் ஒரு பளிங்குச் சிலை. கண்ணை அசைத்தபடி ராதை மெய்ம்மறந்த நிலையில்.

''இதை எப்போ வாங்கினே மோகனா, புதுசா இருக்கே ?''

''போன வாரம்தான் சார் வாங்கினேன். நல்லா இருக்கா சார் ?''

ஒளிவு மறைவு எனக்குப் பழக்கமில்லை. ''பெட்ரூமிலே இருக்க வேண்டியது. இதை வாசல் அறையிலே வைச்சிருக்கே.''

''பெட் ரூமிலேயே வைச்சுடறேன் சார்.'' அந்தச் சிலையை எடுத்துக் கொண்டு அவள் படுக்கை அறையை நோக்கி நடந்தாள். நான் அவள் போவதையே பார்த்துக் கொண்டு இருந்தேன். நளினமான நடை. பின்புறம் இருந்து பார்த்தாலும் முன் பக்கமாய் நின்றாலும் சிற்பத்தைப் பார்க்கிற மாதிரியாய் இருக்கும். என் அஸிஸ்டெண்டு சுவாமி அடிக்கடி சொல்லுவான்: ''இது மஞ்சத்துக்குன்னே அவதாரம் பண்ணின உடம்பு சார்'' என்று. ஆனால் எனக்கு அவளைப் பார்க்கும்போது அப்படிப்படவில்லை. கையில் விளக்கை ஏந்தியபடி கோயில் தூணிலெல்லாம் நிற்குமே சிலை—பாவை விளக்கு — அவளைப் பார்க்கும்போது அந்தப் பாவைதான் உயிர் பெற்று நடக்கிறதோ என்று தோன்றும். அவள் இடுப்பின் அசைவாகட்டும், காலை எடுத்து வைக்கிற முறையாகட்டும், இதழைக் குவித்துச் சிரிக்கிற மாதிரியாகட்டும், இப்போது சரிதானே என்கிற அர்த்தத்தில் புருவத்தைத் தூக்குகிற பாவனையாகட்டும், அத்தனையும் பரத சாஸ்திரத்தின் பாடல்களுக்கு விளக்கம். 'நாட்டிய ஜோதி' 'பரத சாஸ்திரப் பேரொளி' 'அபிநய சுந்தரி' இத்தியாதி இத்தியாதி பட்டங்கள் பெற்றுவிட்ட (இத்தனையும் மேடையேறி ஆறே மாதங்களுக்குள்) குமாரி மோகனாவைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவளுடைய நாட்டியத்தை நீங்களோ உங்களுக்குத் தெரிந்த யாரோ அங்கத்தினராக இருக்கும் ஏதாவது ஒரு சபாவில் நிச்சயமாக ஒரு தடவையாவது பார்த்திருப்பீர்கள். இல்லையென்றால் உங்களுக்கும் பரதநாட்டியத்துக்கும் ஸ்நானப் பிராப்திகூட இல்லை என்று அர்த்தம்.


என் முன்னால் இருந்த சோபாவில் மோகனா உட்கார்ந்தாள்.

''என்ன சார், அப்படிப் பார்க்கிறீங்க ?''

''ஒன்றுமில்லை. சும்மாத்தான்.''

''சும்மா அப்படிப் பார்க்காதீங்க சார்.''

இந்தக் குழைவு மேடையில் இவளுக்குக் கைவந்த கலை. வரிகள் எனக்குச் சரியாக நினைவில் இல்லை. கருத்து இதுதான். தோழியிடம் சொல்கிறாள் — அவர் என் கைப்பிடித்தபோது எனக்கு என்னமாய் இருந்தது தெரியுமா ? இந்த இடத்துக்கு மோகனா எப்படி அபிநயம் பிடிப்பாள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். எனக்கு மட்டும் இல்லை. ஆடியன்ஸுக்கும் தெரியும் என்பதை விண்ணதிர ஒலிக்கும் கை தட்டல் தெரிவிக்கும்.



''என்ன மோகனு... என்னமோ மேடை யிலே இருக்கிற மாதிரி சும்மா குழையறே. என்ன விஷயம் ?''

''சும்மா கலாட்டா பண்ணுறீங்க சார்...! நீங்க இன்னிக்கு எதுக்கு வந்திருக்கீங்கன்னு தெரியும்.''

'' உனக்குத் தெரியுமா ? அப்படின்னு நீயே சொல்லு, பார்க்கலாம்.''

'' நீங்க இந்தப் பக்கம் வந்து ஒரு வாரத் துக்கு மேலே ஆச்சே. இன்னிக்கு ஏதோ ஒரு நியூஸ் கொண்டு வராம "நீங்க இப்படி வர மாட்டீங்கன்னு தெரியும். குட் நியூஸ்தானு சார் ?''

''உம்.... நீ கெட்டிக்காரப் பொண்ணு தான். உன் ஸ்கிரீன் டெஸ்ட் ரிஸல்ட் இன் னிக்குத்தான் வந்தது. இதோ ஸ்டில்ஸ் கொண்டு வந்திருக்கேன் பாரு..... நியூஸ் குட் நியூஸ் இல்லே.''

''அப்பிடின்னு?'' ஃபுட் லைட் நிறம் மாறு கிற வேகத்தில் அவள் முகம் மாறியது.

'' குட் நியூஸ் இல்லேன்னு பாட் நியூஸா? வெரிகுட் நியூஸ்னு சொல்ல வந்தேன். அதுக்குள்ளே....''

''போங்க சார், நீங்க... ஒரு நிமிஷத்திலே கலக்கிப் புட்டீங் களே. எப்பவும் விளையாட்டுத் தான் உங்க ளுக்கு !''

நான் ப்ரீஃப் கேஸைத் திறந்தேன். அவ ளுடைய ஸ்டில்ஸ் அடங்கிய ப்ரௌன் கவரை எடுத்தேன். சட்டென்று மோகனு இடத்தை விட்டு எழுந்து வந்து என் பக்கத்தில் உட் கார்ந்தாள். கம் என்று மல்லிகைப் பூ வாசனை. ஒரு பத்து முழமாவது இருக்கும் தலையில். போதாக் குறைக்கு ஏதோ ஒரு லெவண்டின் பரிமளம்.

என்னிடமிருந்து ஸ்டில்ஸை அவள் வாங் கிப் பார்த்தபோது தற்செயலாகவோ வேண்டுமென்றோ என் கையில் அவள் விரல்கள் உரசின. எனக்குச் சட்டென்று ஒன்றும் விளங்கவில்லை. இவளுக்கு என்ன ஆகிவிட்டது இன்று ? வழக்கமாக நான் வந் தால் உட்காரக்கூட மாட்டாள். புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்தியபடி நின்ற படியே பேசுவாள். 'உட்காரு மோகனு' என்றால் 'பரவாயில்லீங்க' என்று நிற்பாள். நின்று நின்று கால் ஓய்ந்து சோபாவின் ஓர மாய் விழுந்து விடுகிற மாதிரி உட்காருவாள்.

இன்று....இவள் சிரிப்பும் பேச்சும்.

''மோகனு இரண்டு படங் களுக்கு உனக்கு புக் ஆன



மாதிரிதான். மூன்றாவது இன்னும் இரண்டு நாட்களில் தெரியும். சந்தோஷந்தானே?''

''எல்லாம் உங்க தயவுதானுங்க.''

'முதல் படம் ஷூட்டிங் எங்கே தெரியுமா? பெங்களூரிலே.''

''ஓ!''

அந்த 'ஓ'வில் பெரிய கதையே அடங்கி இருந்தது.

ஒன்றரை அல்லது இரண்டு வருஷங்கள் இருக்கும். என் கம்பெனி விஷயமாக பெங்களூர் போயிருந்தேன். மாலையில் காலாறச் சற்று உலாவி வரலாம் என்று லால்பாக் பக்கமாகப் போனேன். அங்கே ஒரு பெஞ்சில் உட்கார்ந்து புகையைக் கக்கியபடி ஏதோ புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்த ஆசாமி எனக்குத் தெரிந்த முகமாய் இருந்தது. இதற்குள் அவனே ஓடி வந்து ''தாமு! ஹௌ ஆர் யூ மான்? என்னைத் தெரியலே, நான்தான் வராக மூர்த்தி. உன்னோட கிளாஸ்மேட்'' என்றான். இப்போது எனக்குப் புரிந்து விட்டது. அவன் என்னுடன் படித்த வராகமூர்த்திதான்.

குசலம் விசாரித்துக் கொண்டோம், ஒருவரோடொருவர். நாங்கள் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயேஅவன் அடிக்கடி கிளாஸ் 'கட்' பண்ணி விட்டுச் சினிமாவுக்குப் போவான். மலையாளம், தெலுங்கு, தமிழ், இந்தி என்று ஒரு மொழி விடாமல் எல்லாப் படங்களையும் பார்ப்பான். இப்போது என்ன செய்கிறாய் என்று கேட்டதற்கு, சினிமா டைரக்டராக இருப்பதாகச் சொன்னான். பங்களூரில் ஏதோ ஷூட்டிங்காம். 'ஷூட்டிங் பார்த்திருக்கிறாயா? என்னோடு வா. இன்றிரவு ஷூட்டிங் இருக்கிறது' என்று கட்டாயப்படுத்தினான் அவன். ஆனால் நான் சொல்லி விட்டேன். 'எனக்கு அந்த மாதிரி ஆசைகள் எதுவும் இல்லை' என்று. அவன் திரும்பத் திரும்பக் கட்டாயப்படுத்தினான். என் பார்ட்னர் ஒருவர் சினிமாப் படம் எடுக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார். சரி படம் எடுப்பது எப்படி என்றுதான் பார்த்துவிடுவோமே என்று வராகமூர்த்தி கொடுத்த அட்ரஸுக்கு இரவு எட்டு மணிக்கு வருவதாகச் சொல்லி விடை பெற்றுக் கொண்டேன்.

இரவு நான் போனபோது வராகமூர்த்தி செட்டில் இருந்தான். எனக்கு ஒரு நாற்காலி போடப்பட்டது. லோஷன் பூசிக்கொண்டு நின்ற கதா நாயக நாயகிகளைப் பார்த்த போதுதான் சினிமா ஒரு விளையாட்டல்ல, கஷ்டமான தொழில் என்று தெரிந்தது. யாரோ ஒரு கதாநாயகி இரண்டு வரி வசனத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள். கேட்பதற்கே எனக்குக் கஷ்டமாக இருந்தது. ஒரு வழியாக அந்தக் காட்சி முடிந்தது. வராகமூர்த்தி என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான். ஓவல் ஜீவல் என்று எதையோ வரவழைத்தான். நான் புறப்பட இருந்தேன். ''அடுத்தது ஒரு குரூப் டான்ஸ் அவசியம் பார்த்துவிட்டுப் போ'' என்று கட்டாயப்படுத்தினான்.

டான்ஸ் மாஸ்டர் — பெயர் சௌத்ரி என்று சொன்னான் வராக மூர்த்தி — வந்து நின்று கொண்டார். எட்டுப் பெண்கள் மின்னென்று கச்சையும் வழுவழுவென்ற துணியில் இடுப்பிலிருந்து முழங் கால் வரை கச்சமும் கட்டிக் கொண்டு வந்து நின்றார்கள். கையை ஏதோ ஒரு போஸில் வைத்துக் கொண்டு யந்திரம் மாதிரி நின்றார்கள். ஒன்—டூ—த்ரீ. டான்ஸ் மாஸ்டர் ஆரம்பித்தார். வலது புறம் நின்ற வரிசையில் இரண்டாவதாக நின்ற பெண் 'தேர்வலாக' இருக்கிறாள் என்பது எடுத்த எடுப்பிலேயே தெரிந்தது. கையையும் காலையும் தப்பும் தவறுமாக அசைத்தாள்.

''ஓ.... உதவாக்கரை. புவனா உன்னைத் தான். உனக்கு எத்தனைவாட்டி சொல்லித் தர்றது? ரிகர்ஸலின் போதே சொன்னேன் இல்லே. உனக்கு முன்னாலே நிற்கிறவளைப் பார்த்து அப்படியே செய்யின்னு.''— சௌத்ரி குரல் பலக்க ஒலித்தது.

''ஸார் வந்து...'' அந்தப் பெண் நடுங்கிய குரலில் ஏதோ சொல்ல வந்தாள்.

''வாயை மூடு. உம். திரும்ப. ஒன் டூ த்ரீ.....'' சௌத்ரி திரும்ப ஆரம்பித்தார்.

புவனா என்ற அந்தப் பெண் திரும்பவும் தவறு செய்தாள்.

சௌத்ரி — பொறுமை இழந்தார். ''ஏ, சுகமாலம் ஓடு பெருக்கிப் பத்துப் பாத்திரம் தேய்க்க வேண்டிய கழிசடைங்க எவன் காலையோ பிடிச்சு இங்கே நுழைஞ்சுடுதுங்க. ஏன் என் உயிரை எடுக்கறீங்க? வராகமூர்த்தி சார். இன்னிக்கு இந்த ஸீன் முடியாது. வேறே ஏதாவது டேக் இருந்தாப் பார்த்துக்குங்க.'' எனக்கு ஏனோ அந்த மனிதர் மீது ஆத்திரமாக வந்தது. என்னதான் இருந்தாலும் அத்தனை பேர் முன்னிலையில் அந்தப் பெண்ணை இப்படியா அவமானப்படுத்துவது?

புவனா என்ற அந்தப் பெண் அழுது கொண்டே அங்கேயிருந்து போய்விட்டாள். வேறு எந்தக் காட்சிக்கும் தயாராக இல்லை என்பதால் அன்று ஷூட்டிங் ஓவர் என்று வராகமூர்த்தி அறிவித்து விட்டான்.

வராகமூர்த்தியிடம் புவனா என்ற அந்தப் பெண்ணைக் கூப்பிட்டனுப்புமாறு கூறினேன். எனக்கு ஏதோ சபலம் என்றும் அதைத் தான் புரிந்து கொண்டுவிட்டதாகவும் எனக்குத் தெரிவிக்கிற வகையில் கண்ணைச் சிமிட்டி விட்டுப் புவனா என்ற அந்தப் பெண்ணுக்கு ஆள் அனுப்பினான் வராகமூர்த்தி.

புவனா வந்தாள். அழுது கண் சிவந்திருந்தது. சௌத்ரி தனியாக இன்னும் வசை பாடியிருக்க வேண்டும். அவள் யார், என்ன என்று விசாரித்தேன். படிப்பு வாசனை அதிகமில்லை. செழிப்பான மேனி. குறுகுறுப்பான கண்கள். அழகான முகம். இவளுக்கு ஏன் நாட்டியம் வரவில்லை? மனத்தில் ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாகச் சென்னைக்கு வந்து என்னைப் பார்க்கும்படி என் கம்பெனி விலாசத்தைக் கொடுத்தேன்.

பெங்களூரில் நடந்த இந்த நிகழ்ச்சியை மறந்துவிட்டேன் என்றே சொல்லலாம்.



''நீ பாட்டு சொல்லிக்கிறயாமே, ஒரு பாட்டு பாடு, கேட்கலாம்.''
''நான் பாட்டு சொல்லிக்கலே, கத்துக்கறேன்.''
''சரி, கத்து.''

—முத்து

கிளர்ச்சியூட்டும் காட்டன்ஸ் அளிப்பதோ சென்ச்சுரி

சூட்டிங்குகள்—கற்பனை வளம் நிறைந்த டிசைன்களும் சென்ச்சுரி பருத்தியின் குளுமையான சுகமும் பரிபூரணமாக இணைந்தவை

ஷர்ட்டிங்குகள்-திகைக்க வைக்கும் கோடுகள் மனதை மயக்கும் கட்டங்கள், எண்ணற்ற தினுசுகள்-இவை எல்லாமே சேர்ந்து, சென்ச்சுரி பருத்தி எண்ணிலா வண்ணங்களில் குன்றாத ஒளி பெற்றுத் திகழ்கின்றது.

புடவைகள் பருத்தியின் சுகபோக இதம்-ஆம் உங்களுக்கு சென்ச்சுரி மட்டுமே இந்த சுகத்தை அளிக்க முடியும். சென்ச்சுரி புடவை உங்கள் எழில் உடலை ஒட்டித் தழுவ, கிளுகிளுப்பூட்டும் மகிழ்ச்சியிலே திளைக்கிறீர்கள். நெருப்பை எதிர்த்து உழைக்கும் அக்னியவிரோதக் புடவைகளும் உண்டு.

ஆடை அணி வகைகள் ஜீவன் ததும்பும் டிசைன்கள், களிநடம் புரியும் வண்ணங்கள், சென்ச்சுரி பருத்தியின் மென்மையும் உணர்ச்சியைத் தொடும் சிறப்பும் உங்களை என்றும் மகிழ்விக்கும்.

தி சென்ச்சுரி ஸ்பின்னிங் & மான்யுபாக்சரிங் கோ. லிட்., பம்பாய் 400 025



சென்ச்சுரி நூற்றுக்குநூறு பருத்தித் துணிமணிகள்.

national-913-Tamil

"புவனான்னு யாரோ பார்க்க வந்திருக்காங்க. உங்களைத்தான் பார்க்கணும்னு சொல்றாங்க" என்று என் ஆங்கிலோ இந்திய செகரட்டரி சொன்ன போது யார் என்றே எனக்குப் புரியவில்லை. "சரி வரச் சொல்" என்று இண்டர்காமில் சொல்லிவிட்டேன்.

சினிமா டிரெஸ்ஸில் அவளைப் பார்த்த போது இருந்ததைவிட சாதாரண உடையில் அவள் இன்னும் அழகாக இருந்தாள். அவளுடன்கூட ஒரு வயதான அம்மாள் வந்திருந்தாள். புவனா அவளைச் சித்தி என்று கூப்பிட்டாள்.

"புவனா! உனக்கு சாஸ்திரீய முறையில் நாட்டியம் சொல்லித் தர ஓர் ஆசிரியரை அமர்த்துகிறேன். நீ ரொம்பக் கஷ்டப்பட்டுக் கற்றுக் கொள்ள வேண்டும். உன்னை நாலு பேர் முன்னிலையில் அவமானப்படுத்திய சௌந்திரியே உன்னை மெச்சும்படி செய்கிறேன். இதை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு நீ உன்னைத் தயார் செய்து கொள்வாயா?" என்று கேட்டேன்.

புவனா மோகனாவானாள். நடன ஆசிரியர் வேலாயுதம் பிள்ளை மெழுகை வைத்துத் தங்க விக்கிரகம் செய்யக்கூடிய திறமைசாலி. இரண்டொரு பத்திரிகாசிரியர்கள் என் நண்பர்கள். பல சபாக் காரியதரிசிகள் பல வகையில் என்னுடன் தொடர்பு கொண்டவர்கள். முடிவு?.... வெறும் புவனா — சௌந்திரியின் அபிப்பிராயத்தில் — அதைச் சொல்ல எனக்கு விருப்பம் இல்லை. அந்தப் புவனா, நாட்டிய ஜோதி பரத சாஸ்திரப் பேரொளி அபிநய சுந்தரி மோகனா ஆகிவிட்டாள்.

"என்ன மோகனா, பெங்களூர் என்றதும் சௌந்திரி ஞாபகம் வந்துவிட்டதோ?"

"ஆமாம், சார்." குனிந்த தலை நிமிராமல் சொன்னாள்.

"ஓ. கே. அதையெல்லாம் மறந்துவிடு. சௌந்திரி இரண்டு மூன்று தடவை ஃபோன் பண்ணி உன் நாட்டியம் பிரமாதம்னு சொன்னதாக நீ என்கிட்டே சொல்லியிருக்கியே. அப்புறம் என்ன? சரி. சௌந்திரி பேச்சை விடு. ஆமாம், உனக்கு நல்ல நியூஸ் கொண்டு வந்தேனே, எனக்கு என்ன தரப் போகிறாய்?"

"உம்." மோகனா என்னைப் புன்னகையுடன் ஒரு மாதிரியாகப் பார்த்தாள். எழுந்து சென்று வாசற் கதவைத் தாளிட்டாள். திரும்பி வந்து என் அருகில் உட்கார்ந்தாள். அவள் புடவைத் தலைப்பு சரிந்திருந்தது. அவள் என்னை ஊடுருவுகிறாற்போல் பார்த்தாள். நானும் அவள் முகத்தையே பார்த்தேன். அவள் என் கைகளைப் பிடித்து —

"சீ!" என்று உதறிக் கொண்டு எழுந்தேன். "மோகனா என்ன இது?"

"என்ன தரப் போகிறாய் என்று கேட்டீங்க சார். நான் என்னையே தரேன். நீங்க இல்லேன்னா நான் இவ்வளவு உயர்ந்த நிலைக்கு வர முடியாது சார். இந்த நாளை நான் எதிர்பார்த்துக்கிட்டுத்தான் சார் இருந்தேன். இன்னிக்குச் சாயங்காலம் உங்க அஸிஸ்டெண்ட் சுவாமி வந்திருந்தார் சார். அவர் நீங்க ஸ்டில்ஸ் கொண்டு வரப் போறதாக என்கிட்டே சொல்லிட்டாரு."



பாங்க் குமாஸ்தாவிடம் ஓர் அழகி: நான் ஒரு ஜாயிண்டு அக்கவுண்டு திறக்க விரும்புகிறேன்!

குமாஸ்தா: யாருடன்?

அழகி: யாராவது ஒரு பணக்காரருடன்! — தஞ்சை மணியன்

"அப்படீன்னா குட் நியூஸ் பாட் நியூஸ் எல்லாம்?"

"நடிப்பு சார். என் திறமையை உங்ககிட்டேயே காட்டிட்டேன், மன்னிச்சுடுங்க."

"சுவாமி இங்கே அடிக்கடி வருவானா?"

மோகனா பதில் பேசவில்லை. தலையைக் குனிந்தபடி இருந்தாள். இன்னும் சேலைத் தலைப்புத் தோள்பட்டையில் ஏறவில்லை. மோகனா பிறந்து, வளர்ந்து பங்களூரில் வாழ்ந்த சூழ்நிலை எனக்குத் தெரியும். எனவே அவள் போக்கு எனக்கு வியப்பளிக்கவில்லை. ஆனால் அவளுக்கு உதவுவதாகக் கூறிக் கொண்டு வருவோரில் பெரும்பாலோர் எதை எதிர்பார்த்து வருகிறார்களோ அதையே நானும் எதிர்பார்ப்பேன் என்று அவள் முடிவு கட்டியதுதான் எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. அப்படி அவள் எண்ணுமாறு என் நடத்தையில், என்ன தவறு நேர்ந்தது? என் உள்ளத்தைக் கவ்விய சோகம் முகத்திலும் பிரதிபலிக்க நான் கூறினேன்:

"மோகனா...! உன்னைப் பற்றி நான் என்னென்னமோ கேள்விப்பட்டேன். அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்று பேசாமல் இருந்துவிட்டேன். இன்னும் சொல்லப் போனால் என்னை நன்றாகப் புரிந்து கொண்டுள்ள என் மனைவியே என்னிடம் அவ்வப்போது குத்தலாக ஏதாவது சொல்வாள். நான் இதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. உன் வரையில் நான் எதையும் எதிர்பார்க்கவில்லை. என்னதான் நாட்டியத்தில் சிறந்து விளங்கினாலும் உன் மனம் சினிமாவில் நடிப்பதில் இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டுவிட்டேன் நான். சினிமா உலகில் உன்னை நுழைத்துவிட்டால் அதன் பிறகு உனக்கு நான் அவசியம் இல்லை என்று தெரியும். இன்று இந்த ஸ்டில்ஸை உன் கையில் கொடுத்து விட்டு அடுத்த வாரம் உனக்குச் சினிமா புக்கிங் ஆனதும் இங்கே வருவதையே நிறுத்தி விட வேண்டும் என்பது என் பிளான்."

மோகனா புடவைத் தலைப்பைச் சரி செய்து கொண்டு எழுந்து, "சார்! என்னை மன்னிச்சுடுங்க சார்" என்று கூறித் தடாலென்று தரையில் மண்டியிட்டு என் முழங்காலில் தன் முகத்தைப் பதித்துக் கொண்டாள். அவள் கண்களிலிருந்து வழிந்த நீர் என் வேஷ்டியை நனைத்தது.

நரி செய்த தியாகம்!

ஜீ.என்.பட்

ஒரு சிங்கம், ஒரு புலி, ஒரு நரி மூன்றும் சேர்ந்து பயணம் செய்தன. அவை வழியில் பசித்தபோது ஒரு மிருகத்தை அடித்துக் கொன்றன. அந்தப் புலாலில் ஒரு சிறு பகுதியே நரிக்கு உணவாக வழங்கப்பட்டது. இதைக் கண்டு வருத்தமுற்ற நரி, ஒரு யோசனை செய்தது. அது கூறியது: ''சற்று இருங்கள்! இந்தப் பக்கங்களில் மாமிசம் விஷமுள்ளதாக இருப்பதாக யாரோ சொன்னதாக ஞாபகம். உங்கள் உயிரைக் காக்க நான் என் உயிரைத் தியாகம் புரியத் தயாராக இருக்கிறேன். என் பங்கை நான் முதலில் ருசி பார்க்கிறேன். எனக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் நீங்கள் உங்கள் பங்கைத் தொடாதீர்கள். பயணத்தைத் தொடருங்கள்.''

நரி இப்படிக் கூறிவிட்டுத் தன் பங்கை உண்டது. பிறகு வயிற்றுவலி பொறுக்க முடியாமல் துடிப்பது போல் நடித்தது. படுத்துப் புரண்டது. அப்புறம் அசைவற்றிருந்தது. சிங்கமும் புலியும் மாமிசத்தை, விஷமுள்ளதாய்க் கருதிப் போய் விட்டன. தங்கள் பங்கை அவை தொடவேயில்லை. சற்று நேரம் கழித்து நரி எழுந்து வயிறு நிறைய உண்டது!

நீதி: (நீங்களே எழுதிக்கொள்ளவும்)



குட்டிக் கதைகள்

அசைவ ஆடு!



ஒரு சமயம் ஓர் ஆடு புலால் உண்ணத் தீர்மானித்தது. 'சைவ உணவு அருந்தி என்ன பயன்? தன்னை யார் மதிக்கிறார்கள்?' என்று அது எண்ணியது. ஒருநாள் அது ஒரு நாயைச் சந்தித்தபோது கொஞ்சம் புலால் தருமாறு கெஞ்சியது.

நாய் புன்னகை புரிந்து அந்த எண்ணத்தைக் கைவிடுமாறு ஆட்டிடம் கூறியது:

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?'' என்று கேட்டது ஆடு.

''ஏனென்றால் புலால் உண்ணை நினைப்பவர்கள் அதனை யாசகமாகக் கெஞ்சிக் கேட்பதில்லை'' என்றது நாய்.

நீதி: (நீங்களே எழுதிக்கொள்ளவும்)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.

மலரும் பூவெனப் பிள்ளை வளர்ந்திடப் பலமான துணை–

இன்க்ரிமின்*

பட்டுப் போன்ற பாப்பாவின் வளர்ச்சியிலே–முதலிரண்டு ஆண்டுகள்...மொட்டு விரியும் நேரம்—சிட்டுப்போல் பறக்க சிறகு முளைக்கும் பருவம்—இந்த முக்கியமான பருவத்திலே உங்கள் கண்மணிக்குக் கட்டாயம் தேவை– இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன் அவன் வளர்ச்சியை! பசித்துப் புசிப்பான்...உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்களோடு, உங்கள் மகனின் வளர்ச்சிக்கு மிக மிக அத்தியாவசியமான அமினோ அமிலம், லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.





இன்க்ரிமின்* டானிக்

டிராப்ஸ்—2 மாதங்கள் முதல் 2 வயது வரையில்
ஸிரப்— 14 வயது வரையில்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும்—உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்—

Lederle ஸையனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு

*அமெரிக்கன் ஸையனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்

Sista's-INC-364C-R/76 Tam

RFGISTFRED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேயா காசு





பார்லே

மொனேகோ

அப்படியே சாப்பிட அருமை—
மகுடம் வைத்துச் சாப்பிட மஜா

இந்தியாவின் உச்ச விற்பனை உடைய உப்பு பிஸ்கட்—
இப்போது கையடக்கமான ஜிகினாத் தாளுறைப் பேக்கெட்டுகளிலும் வருகிறது.

everest/396/PP-tm